
நரை மயிர்



நிரந்தரமாய் மறைந்துவிட்டது

ஹென்ஸல்

நரை மயிரை கருக்கச்செய்கிறது

H. T. T.

PEARLINE - PARIS LTD., P. O. BOX 493, BOMBAY.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116 - 119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras



பரிசுத்தத்துடன் புஷ்டி நிறைந்த க்ளாக்ஸோவை குழந்தைக்கு ஊட்டுங்கள்.

......கை படாதது......


இரும்புத் தாதுவும் வைடமின் D-யும் ஒருங்கே கொண்டது.

Glaxo

குழந்தை ஆகாரம்

இந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
ஹெச். ஜெ. பாஸ்டர் அன் கோ லிட்., பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

ருசிகரமான பட்டாணிக்கடலை புலவு–



அரிசியைக்களைந்து தண்ணீரை நன்றாக வடிக்கட்டி அரிசியை பட்டாணியுடன் சேர்த்து சூடான டால்டாவில், டால்டா முழுவதும் இழுத்துக் கொள்ளப்பட்டு, அரிசி கொஞ்சம் ஒட்டும்வரை வறுக்கவும். தண்ணீர் (அரிசி அளவுக்குமேல் ஒரு அங்குலம் மேலே மூடியிருக்கும் படி) விடவேண்டும். உப்பு, ஏலக்காய், இலவங்கப்பட்டை, கிராம்பு முதலியவைகளை ருசிக்கு தக்கவாறு சேர்த்துக் கொள்ளவும். நன்றாக கிளறி, பாத்திரத்தை மூடி, அரிசியும் பட்டாணியும் பக்குவம் ஆகும்வரை மெது அனலில் சமை. சாதம் முழுபக்குவமாகும் பொழுது கொஞ்சம் தண்ணீர் இருந்தால், மூடியை கொஞ்சம் நகர்த்தி, மூடியின் மேல் சில தணல்கட்டிகளை வை. பொரித்த வெங்காயம், பதாம்பருப்பு, திராக்ஷை முதலியவைகளை தூவு.



ஏன் நாம் மூடிய பாத்திரங்களில்
சமைக்கவேண்டும்?


இது ஊட்டத்தைப்பற்றி முக்கியமாக கவனிக்க
வேண்டிய விஷயம்.

*இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது
என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!*


தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 7923 TM



யாரும்
பிரமிக்கிறார்கள்
"அதைவிட்' விலை அதிகமல்லவா"
என்கிறார்கள்
உண்மையில் அப்படியில்லை. இது வரை உற்பத்தி செய்யப்பட்ட பௌண்டன் பேனாக்களுள் மதிப்பிற் சிறந்தது புதிய கோல்டன் பிளாட்டினம் பேனாதான். என்ரேல் செய்த மூடி - பல்வேறு வர்ணக் கவர்ச்சி - இயாறி வாய்ந்த பிளாட்டினம் முனை, ஆகியவைகளுடன் கூடிய இந்த நவநாகரிகப் பேனாவை உபயோகித்தால்தான் நம்ப முடியும்.
புதிய
கோல்டன்
ரூ. 5/-
Platignum
REGD
பௌண்டன் பேனா
இங்கிலாந்தில் செய்யப்பட்டது
வர்த்தக விசாரணைகளுக்கு முழு உரிமை பெற்ற வினியோகஸ்தர்கள்:
முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்
15, தம்புசெட்டி தெரு, மதராஸ்


டி. வி. குமுதினியின்
நுண்மையான அழகு படுத்திக்
கொள்ளும் முறை
லக்ஸ் டாய்லட் சோப்
LUX
LUX
TOILET SOAP
LTS. 193-111 TM
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★



தற்கால கட்டிட நிர்மாணம்

கிராமச் சாலைகள்.

கிராமப் புனருத்தாரணத்தில் உபயோககரமான சாலை ஓர் முக்கிய அம்சம். இரண்டு பத்தியான கான்கிரீட் பாதைகள் கிராமவாசிக்கு, சமீபத்துப் பட்டணம் அல்லது வியாபாரஸ்தலம் இவற்றுடன் மிகவும் சிக்கனமுறையில், காற்று மழையினால் பாதிக்கப்படாத சம்பந்த சாதனமாகின்றன. கான்கிரீட் சாலைகள் சரக்குகளின் போக்குவரத்தை துரிதப்படுத்துகின்றன. ஆனால், அச்சாலைகளின் நிர்மாணமோ மிகவும் குறைந்த செலவில் முடிகிறது.

மேலும், கான்கிரீட் பாதைகள் கார்களின் பிரயாணத்திற்கு சௌகரியமாயிருப்பதன் மூலம் அவசரவைத்திய உதவி, பாங்கி, தபால் நடவடிக்கைகளுக்கு உதவியாய் இருக்கின்றன. சிறுவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதும் கஷ்டமில்லாமல் இருக்கிறது.

"கிரேட் வேஸ்" சாலைகள் படிப்படியாக முன்னே நடைபெற்று அனுகூலமாய் இருக்கிறது. ஆரம்பத்தில் சாலையின் ஒருபக்கத்தில் மட்டும் ஒற்றைப் பத்தியைத் தயார் செய்து, அதன் மூலம் போக்குவரத்துச் செய்துகொள்ளலாம். பிற்காலத்தில் ஜனநடமாட்டம் அதிகரித்து, பணவசதியும் ஏற்படும்போது மறுபக்கத்தில் மற்றொரு பத்தியை போட்டுக்கொள்ளலாம்.
ஆரம்பகாலத்தில், சரியான பக்கத்தில் வரும் வண்டிக்கு வழிவிட்டு எதிரில் வரும் வண்டி கிரேட்வேயிலிருந்து பக்கத்தில் சௌகரியமாக ஒதுங்கிக்கொள்ளலாம்.

மற்ற விவரங்களுக்கு— தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312 மதராஸ், என்கிற விலாசத்துக்கு எழுதுங்கள்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே!



ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள்,
ஆந்திரா ஜில்லாக்கள் தமிழ் நாடு
களுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை

எந்த வேகத்துக்கும் தகுதியான ஓட்டம்



ஆனால் ஒருபோதும்
அதிகமாக
மை கொட்டாது

நீங்கள் வெகு வேகமாக எழுதுபவராயினும் சரி, அல்லது மெதுவாக எழுதுபவராயினும் சரி, மெண்ட்மோர் ஆடோ-ஃபீனோ பேனாவில் புத்தம் புதிதாக வெகு நவீன முறையில், நிப்புக்குக் கீழ் அமைக்கப்பட்ட நாக்கு, எழுதும் சக்திக்கு ஏற்றபடி, சுலபமாகவும், ஒரே சீரானமாகவும் மைக் கசிவு ஏற்படுமாறு செய்யப்பட்டுள்ளது. இந்த நவீன அடிப்படை மாறுதல், நிப்பின் நுனியில் அதிக மை சேமிப்பைத் தடுப்பதோடு அல்லாமல் கடைசி ஒரு துளி மை தீரும் வரை ஒரே சீரானமாகவும் ஒழுங்காகவும் மைக் கசிவு ஏற்படும்படி உதவுகிறது. மெண்ட்மோர் பேனாக்களில் மட்டுமே எவ்விதக் கஷ்டமுமில்லாமல், இந்த நவ அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

ஆஸ்மி இரிடியம்
தோய்க்கப்பட்ட 14
காரெட் கேட்டித் தங்க
நிப்புடன் கூடியது. ரூ. 15/-



மைக்கசிவதை நவீனமாக நிப்பின் கீழ்
அமைக்கப்பட்டுள்ள நாக்கு மூலம்
நன்கு சரி செய்யப்படுகிறது.

மெண்ட்மோர்
ஆடோ-ஃபீனோ
பௌண்டன் பேனாக்கள்

MENTMORE

இங்கிலாந்தில் செய்யப்பட்டது.

முல்லர் & ஃபிப்ஸ் (இந்தியா) லிமிடெட்.
15, சங்குராம செட்டித் தெரு, மதராஸ்-1

1941 கல்கி 1948
பொருளடக்கம்

மலர் 8
இதழ் 5


ஆகஸ்டு 29

சர்வதாரி
ஆவணி 14

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.




சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பதினாறு ஜில்லாக்களிலிருந்து விரட்டப்பட்ட கள் அரக்கன் மீதியுள்ள ஜில்லாக்களிலாவது சிறிது காலத்துக்கு ஆதிக்கம் செலுத்தி வரலாம் என்று நம்பிக் கொண்டிருந்தான். ஆனால் அந்த நம்பிக்கையிலும் இப்போது மண் விழுந்து விட்டது!


தம்முடைய வழக்கை ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட நைஜாம் தீர்மானித்திருக்கிறார் ஆனால் அவருக்கு யார் பெட்ரோல் சப்ளை செய்யப் போகிறார்கள்?
ஐ. நா. சபைக்கு
H.H.
ஹைதராபாத் வழக்கு

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 5

என்ன சேதி?

காந்திஜியின் பிரதிநிதி

காந்தி மகாத்மாவின் உண்மையான பிரதிநிதி ஒருவர் தமிழ்நாட்டில் உண்டு என்றால், அவர் ஸ்ரீ எல். என். கோபாலசாமிதான் என்று சொல்ல வேண்டும். 1932-ம் வருஷம் அவர் சிறை புகுந்து வெளி வந்ததும் மகாத்மாவுக்கு மிகவும் உகந்த ஹரிஜனத் தொண்டை மேற்கொண்டார். அன்று முதல் இன்று வரை துருவ நட்சத்திரத்தைக் குறி வைத்துக் கடலில் கப்பலைச் செலுத்தும் மாலுமியைப்போல், இடைவிடாமல் ஹரிஜனத் தொண்டே வாழ்க்கையின் ஒரே இலட்சியம் எனக் கொண்டு, ஊழியம் புரிந்து வருகிறார். காந்தி மகானிடமும் காந்திஜியைப் போலவே கண்டிப்புக்குப் பெயர்போன தக்கர் பாபாவிடமும் நல்ல பெயர் வாங்கியிருக்கிறார். கஸ்தூரிபாய் நிதி வசூலில் மற்ற எல்லா மாகாணங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தவர் ஸ்ரீ எல். என். கோபாலசாமி. அத்தகைய ஒப்பற்ற திறமை வாய்ந்த தேசபக்த நிர்மாணத் தொண்டர் திருச்சி - குழித்தலை - கரூர் தொகுதியில் ஏற்பட்ட காலி ஸ்தானத்துக்கு அபேட்சகராக நிற்கிறார். காந்திஜியின் உண்மையான பிரதிநிதி மேற்படி தொகுதி வோட்டர்களின் பிரதிநிதியாக விரும்புகிறார் என்று சொல்ல வேண்டும். இதைக் காட்டிலும் மேற்படி தொகுதி வோட்டர்களுக்குப் பெருமையான விஷயம் வேறொன்றுமில்லை. போட்டியிடும் அபேட்சகர்கள் பெரிய மனது செய்து விலகிக் கொண்டால் உத்தமமாயிருக்கும். அப்படி அவர்கள் செய்யாவிட்டால் வோட்டர்கள் ஸ்ரீ எல். என். கோபாலசாமிக்குப் பெருமிதமான வோட்டுகளினால் வெற்றியை யளித்துக் காந்திஜியின் புனித ஞாபகத்துக்கு மரியாதை செய்வார்கள் என்று நம்புகிறோம்.



ஸ்ரீ. எல். என். கோபாலசாமி

அவசரக் கோலம்!

இலங்கைப் பிரஜா உரிமை மசோதாவை இலங்கை சர்க்கார் அவசரம் அவசரமாக நிறைவேற்றி விட்டார்கள். இலங்கைப் பார்லிமெண்டிலும் எதிர்க் கட்சிகள் யாவும் அந்த மசோதாவைக் கடுமையாக எதிர்த்தன. எனினும் நியமன அங்கத்தினர்களின் ஆதரவைக் கொண்டு இலங்கை சர்க்கார் அதை நிறைவேற்றி விட்டார்கள். அது மாத்திரமல்ல, எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த திருத்தங்களில் ஒன்றைக்கூட மந்திரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கைப் பார்லிமெண்டில் மேற்படி மசோதாவை எதிர்த்துப் பேசிய ஓர் அங்கத்தினர், இந்தியர்களுக்கு விரோதமாக இலங்கை சர்க்கார் கைக்கொள்ள விருக்கும் பிற்போக்கான முறைகளில் முதல் படி தாண்டியாகி விட்டது என்று குறிப்பிட்டார். இலங்கை சர்க்கார் இதைப் போல் இன்னும் எத்தனை படிகளைத் தாண்டப் போகிறார்களோ, தெரியவில்லை!

மற்றும் இலங்கைப் பார்லிமெண்டில் சர்க்கார் கட்சித் தலைவர் கூறியுள்ள வாதம் மிகவும் விசித்திரமானதாக இருக்கிறது. அதாவது இந்தியர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றும் நோக்கத்துடன் தான் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற தோரணையில் அவர் பேசியிருக்கிறார்! இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர்களில் பெரும்பாலோர்

அங்கு இருப்பது அந்தத் தீவின் பொருளாதார சுபிட்சத்துக்கு ஏற்றதல்லவாம். அதாவது எந்தத் தீவின் செழுமைக்காக இந்தியத் தொழிலாளர்கள் தலைமுறை தலைமுறையாக உழைத்தார்களோ, அந்தத் தொழிலாளர்களையே இந்தியாவுக்கு விரட்டி விட வேண்டும் என்று அவர் கூறுகிறார். எந்த ஏணியின் வழியாக ஏறி இலங்கை உயர்வடைந்ததோ, அந்த ஏணியையே இப்போது உதைத்துத் தள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள்! எனவே மேற்படி சட்டத்தின் அநீதியை விளக்க இதைக் காட்டிலும் வேறு உதாரணம் எதுவும் தேவையில்லை.

இந்தியா – இலங்கை சமரசப் பேச்சு வார்த்தைகள் முடிவதற்குள் இலங்கை சர்க்கார் லட்சக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களை,—இலங்கையின் இன்றைய செழுமைக்குக் காரண பூதர்களான ஏழைத் தொழிலாளர்களை அன்னியர்களாகச் செய்யும் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது நேர்மையற்றது என்பதுடன், நன்றி கெட்ட செய்கையுமாகும்.

ஏற்குமோ இந்த அநீதி?

யார் இலங்கைப் பிரஜையாக இருக்கலாம், யார் இருக்கக்கூடாது என்பதை இஷ்டப்படி நிர்ணயிக்க இலங்கைக்குப் பூரண அதிகாரம் உண்டு என்று இலங்கை நிதிமந்திரி ஸ்ரீ ஜயவர்த்தன கூறியுள்ளார். இலங்கைக்கு உள்ள அத்தகைய அதிகாரத்தை யாரும் மறுக்கவில்லை. ஆனால் இலங்கைத் தீவின் பொருளாதார சுபிட்சத்துக்காகத் தங்களுடைய உடலையும் உழைப்பையும் அர்ப்பணம் செய்த இந்தியத் தொழிலாளர்களிடம் சிறிதளவும் ஈவு இரக்கமோ நன்றியோ இல்லாமலும், உலகத்திலேயே இராத ஒரு தனி முறையிலும் அந்த மசோதாவைத் தயாரித்ததுதான் கண்டிக்கத்தக்கதாகும். ஒரு தேசத்தில் பிறந்து வளர்ந்த ஒருவருக்கு அந்தத் தேசத்தின் பிரஜா உரிமை மறுக்கப்படுவது உலகிலே இதுதான் முதல் தடவையாகும்! உழைப்பாளிகளின் உரிமையைப் பறிக்கும் இந்தப் புதிய முறையைக் கண்டு பிடித்த இலங்கை சர்க்காரின் போக்கை எப்படி வர்ணிப்பது? இலங்கைப் பார்லிமெண்டில் மற்றொரு பிரதிநிதி குறிப்பிட்டது போன்று புராதன கிரேக்க, ரோமிய சாம்ராஜ்யங்கள் ஏற்பட்ட காலம் முதல் இன்று வரையில் உலகிலே ஓரிடத்திலும் வழக்கத்திலிராத ஒரு முறையை மாற்றி, உலகம் ஒப்புக் கொள்ளக்கூடிய விதத்தில் மேற்படி மசோதாவைத் திருத்தி யமைக்க இலங்கை சர்க்கார் முற்படுவார்களா?

அந்த மூலையில் நடப்பதென்ன?

காஷ்மீரத்தில் உக்ரமான யுத்தம் நடந்து வருகிறது. இக்கயாவிலோ எத்தனையோ பிரச்னைகள் ஜனங்களின் கவனத்தை ஆகர்ஷித்து வருகின்றன. பெர்லினில் ருஷ்யப் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கும் தினசரி குஸ்திகள் நடந்த வண்ணமாக இருக்கின்றன. இவ்வளவு பரபரப்பான சம்பவங்களுக்கிடையே, இந்தியாவின் வடமேற்கு மூலையில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யாரும் அதிகச் சிரத்தை எடுத்துக் கொள்ள நியாயமில்லை.

வடமேற்கு எல்லைப்புற மாகாணம் பாகிஸ்தானில் சேர்ந்து விட்டதால் அங்கிருந்து உண்மையான செய்தி எதுவும் வெளி உலகத்துக்குத் தெரிய இடம் இராததே அதற்குக் காரணம். எல்லைப் புறப் பட்டாணியர்களின் இணையற்ற தலைவர்களான கான் அப்துல் கபார் கானும், டாக்டர் கான்சாகிபும் மற்றும் பல பிரமுகர்களும், அவர்களுடைய மாஜி சகாவும் அந்த மாகாணத்தின் தற்போதைய பிரதம மந்திரியுமான அப்துல் காயம் சர்க்காரால் சிறைப் பட்டிருந்தும், அங்கு பட்டாணியர்களின் கிளர்ச்சி கட்டுக்கு அடங்காமல் இருந்து வருகிறது என்று தெரிகிறது. அங்கு அப்போதைக்கப்போது நடக்கும் துப்பாக்கிப் பிரயோகங்களால் பல பட்டாணியர் பலியாகின்றனர் என்பது மாத்திரம் வடமேற்கு எல்லைப்புற சர்க்காரின் அறிக்கைகளிலிருந்து வெளியாகிறது. இதில் ஒரு விசேஷம் என்னவெனில் இப்போதுதான் முதன் முறையாக ஒரு முஸ்லிம் சர்க்கார் பட்டாணியர்களான முஸ்லிம்களைப் படுகொலை செய்து வருகிறார்கள்.

பட்டாணியர்களை நசுக்க பிரிட்டிஷார் நூறு ஆண்டு பாடுபட்டும் பலனில்லாமல் போயிற்று. கார்வாலி சிப்பாய்கள் பட்டாணியர்களைச் சுட மறுக்கவே, அவர்களைப் படுகொலை செய்வதற்கு பிரிட்டிஷார் பிரிட்டிஷ் சிப்பாய்களையும் பிரிட்டிஷ் விமானங்களையுமே உபயோகித்தனர். ஆனால் இன்றோ அரசியல் அபிப்பிராய பேதம் காரணமாக சாத்வீக முறையில் நம்பிக்கை கொண்ட செஞ்சட்டைத் தொண்டர்களை பாகிஸ்தான் சர்க்கார் படுகொலை செய்து வருகிறார்கள். நேர்மையும் நல்லொழுக்கமும் உருவான கான் சகோதரர்கள் சிறைப்படுவதும், அவர்களுடைய அருமைத் தொண்டர்கள் நாள்தோறும் பலியாவதும் சகிக்க முடியாத விபரீதம் அல்லவா?

உங்களுக்கு ஏன் அந்தக் கவலை?

நடுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவன் எதைக் கண்டாலும் அதை இறுகப் பிடித்துக் கொள்வானும். துரும்பையும் பிடித்துக் கொள்வான்! தும்பட்டையையும் பிடித்துக் கொள்வான்! தன்னை மீட்க வருபவனின் கழுத்தையும் இறுகப் பிடித்துக் கொண்டு அவனையும் தன்னுடன் தண்ணீருக்குள் இழுப்பான்! தன்னை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஒரே எண்ணமும், தான் எங்கு மூழ்கி மாய்ந்து விடுவோமோ என்ற பீதியும் அவனது அறிவையே அடியோடு மழுங்கச் செய்து விடும்.

திரைகடலில் தவிக்கும் தன்னைத் தூசி தும்பட்டைகள் காப்பாற்ற முடியாது என்ற சர்வ சாதாரண விஷயம் கூட அப்போது அவன் புத்திக்கு எட்டுவதில்லை. பெரும் பீதியினுல் பிரமை பிடித்த அவனுக்கு, தன்னை மீட்க வந்தவனின் உதவி பெற்று உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்காமல் உதவிக்கு வந்தவனையும் தண்ணீருக்குள் இழுக்கும் நிலைமைக்கு வந்துள்ள அவனுக்கு, தன்னை உண்மையில் காப்பாற்றக் கூடிய ஓடம் ஒன்று சிறிது தூரத்தில் இருப்பது எங்கு கண்ணுக்குத் தெரியப் போகிறது?

குழப்பக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நைஜாமின் கண்களின் பீதியினுலும் துவேஷத்தினுலும் துர்ப்போதனையினுலும் மறைக்கப்பட்டிருக்கின்றன. எனவே தன்னைக் காப்பாற்றும் சக்தி வாய்ந்த ஓடம் இந்தியா தான் என்பது அவரது கண்களுக்குப் புலப்படவில்லை. தான் கடைத்தேறுவதற்குள்ள அந்த ஒரே வழியை விட்டு விட்டு நைஜாம் தூசி தும்பட்டைகளின் உதவியை நாடி வருகிருர்.

* * *

தத்தளித்துக் கொண்டிருக்கும் நைஜாமைக் காப்பாற்றுவதற்காக முயற்சி செய்த சர் மிர்ஸா இஸ்மெயிலை நைஜாம் தாசர்கள் இந்திய சர்க்காரின் பொம்மை என்று வர்ணிக்கிருர்கள்.

நைஜாமுக்கு நல்ல புத்தி கூறிய நைஜாம் சமஸ்தான முஸ்லிம் பிரமுகர்கள் இப்போது சிறைப்பட்டிருக்கிருர்கள்.

நைஜாமும் நைஜாம் சமஸ்தானமும் சீரழிந்து போகாமல் உருப்பட வேண்டுமாயின், இந்தியாவுடன் சேரவேண்டியதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை என்று எடுத்துக் காட்டிய மேற்படி சமஸ்தானத்தின் மாஜி உயர்தர முஸ்லிம் உத்தியோகஸ்தர்கள் பென்ஷன் தொகைகளை இழக்கும்படி நேர்ந்திருக்கிறது.

இவ்வாருக பொறுப்புள்ள பிரமுகர்களின் நற்போதனை எதுவும் நைஜாமின் செவிகளில் ஏறவில்லை.

எனினும் அதற்கு மாருக கொள்ளைக் கூட்டத்தின் தலைவரான ரஸ்வியின் துர்ப்போதனையோ, சர் மாங்டனின் ஆலோசனையோ, சர்ச்சிலின் போர்சோ, ஆகாயத் திருடனுன ஸிட்னி காட்டனின் ஆயுதங்களோ நைஜாமைக் காப்பாற்ற முடியாது என்பதும் இப்போது நிச்சயமாகி விட்டது.

அதனுல் தான் நைஜாம் கடைசியாக ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட முற்பட்டிருக்கிருர். தனிப்பட்ட சுதந்திர அந்தஸ்து தமக்கு உண்டு என்ற எண்ணத்துடன் தான் நைஜாம் மேற்படி சபையில் முறையிட்டுக் கொள்ளத் துணிந்திருக்கிருர்!

* * *

சரித்திர காலத்திலிருந்து நைஜாமுக்கு ஒரு நாளும் சுதந்திர அந்தஸ்து இருந்ததில்லை. இந்த விஷயத்தில் இதற்குமுன் சிலருக்குச் சந்தேகம் இருப்பினும், ஹைதராபாத் பிரச்னையைப் பற்றி சமீபத்தில் இந்திய சர்க்கார் அறிக்கை வெளியானதிலிருந்து அத்தகைய சந்தேகம் அடியோடு நிவர்த்தியாகி விட்டது.

ஹைதராபாத் ஆதியிலேயே இந்தியாவுடன் சேர்ந்திருந்தால், பாமரரும் அறிந்து சிரிக்கக் கூடிய வகையில்

அதன் பூர்வாசிரம வரலாறுகள் வெளியாகவேண்டியதில்லை. நைஜாம் எந்தக் காலத்திலும் சுதந்திர மன்னராக இருந்ததில்லை என்பது சரித்திர பூர்வமான உண்மை. மற்றும் ஒரு காலத்தில் சில இந்திய சமஸ்தானாதிபதிகள் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்தது போல் நைஜாம் தியாகம் செய்ததுமில்லை.

தற்போதைய நைஜாமின் முன்னோர்கள் சிறிது காலம் மொகலாய சக்கரவர்த்தியின் அடிமைகளாக இருந்தார்கள்; பின்னர் பிரஞ்சுக்காரர்களின் கை ஓங்கியபோது அவர்களுடைய அடிமைகளாக இருந்தார்கள்; அதன் பிறகு பிரிட்டிஷாரின் அடிமைகளாயினர்!

அதாவது யாருடைய கை ஓங்கி நின்றதோ அவர்களுக்குத் தலை வணங்கும் தாசர்களாவதே நைஜாம் வம்சத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது!

குறிப்பாக 1800-ம் வருஷத்திலிருந்து நைஜாம் சமஸ்தான உள்நாட்டு விஷயங்களும் வெளிநாட்டு விஷயங்களும் முற்றிலும் பிரிட்டிஷாரின் நிர்வாகத்திலேயே இருந்து வந்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மற்றும் அரசியல் விஷயங்களில் ஹைதராபாத் சமஸ்தானம் மிகவும் பிற்போக்காக இருப்பதை பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டி நைஜாமை எச்சரித்து வந்திருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

• • •

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிய பின், சமஸ்தானங்களின் நிர்வாக விஷயத்தில் அவர்களுக்கு இருந்த மேலதிகாரம் காலாவதியாகி விட்டதாகவும், எனவே இந்தியாவில் மூன்றில் ஒன்றாக இருக்கும் சமஸ்தானங்கள் நெல்லிக்காய்களைப் போல் சிதறித் தனித்தனியாகச் சுதந்திரம் கோரலாம் என்றும் சென்ற வருஷம் சிலர் வியாக்கியானம் செய்தனர். அந்த விபரீத வியாக்கியானத்துக்குச் சில சமஸ்தான மன்னர்கள் செவி சாய்த்தனரெனினும், நிலைமை முற்றுவதற்கு முன் நைஜாமைத் தவிர மற்றவர்கள் மயக்கம் தெளிந்து இந்தியாவுடன் ஐக்கியமாகியதன் மூலம் தங்களுடைய சமஸ்தானங்களைக் காப்பாற்றிக் கொண்டதுடன் தங்களுக்கும் பெருமையைத் தேடிக் கொண்டார்கள்.

பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறியதும், சமஸ்தானங்கள் விஷயத்தில் அவர்களுக்கு இருந்த மேலதிகாரம் காலாவதியாகி விட்டது என்று கூறுவது எவ்வளவு தவறானது என்பதை கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"இந்தியாவில் ரயில் பாதைகளையும் தந்திப் போக்குவரத்தையும் அமைத்தவர்கள் பிரிட்டிஷார்தான். எனவே, அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறும்போது அவை எல்லாவற்றையும் உடைத்தெறிந்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று பிரிட்டிஷ் இஞ்ஜினீர்கள் கூறினால் எப்படியிருக்கும்?

பிரிட்டிஷார் அதிகாரத்தை இந்தியர்களிடம் ஒப்படைத்தபோது இந்தியாவில் தங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட எல்லாவற்றையும் அப்படியே ஒப்புவிப்பதுதான் நியாயமாகும். ரயில்வேக்களும் தந்திக் கம்பிகளும் எவ்வாறு இந்திய சர்க்காரின் சொத்துக்களோ, அவற்றைப் போலவே ஏற்கெனவே இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு இருந்த சகல அதிகாரங்களும் இந்திய சர்க்காரின் சொத்துக்களே ஆகும்.

ஆனால் பிரிட்டிஷார் அதற்கு நேர் மாறான கொள்கையையே அனுஷ்டித்தனர். நூறு ஆண்டுகளாகச் செய்த நிர்மாண வேலைகள் ஒரே நிமிஷத்தில் உருக்குலைக்கப் பட்டன. சுதந்திரமாகிற பரிசுடன் இந்தியாவின் மூன்றில் ஒரு பாகத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடிய வினைகளும் இருந்தன. எனினும் மகத்தான கஷ்டத்துடனும் இறைவனின் திருவருளாலும் அத்தகைய விபரீதம் ஏற்படாமல் தடுப்பதில் ஓரளவு வெற்றி பெற்றோம். அவ்வாறு வெற்றி பெறுவதற்கு உதவி புரிந்து ஒத்துழைத்த மன்னர்களுக்கு இந்திய மகாஜனங்கள் நன்றி செலுத்துகின்றனர்."

சென்ற வாரம் கொச்சி மகாராஜாவின் தர்பாரில் பேசிய ராஜாஜி, பிரிட்டிஷாரின் மேலதிகாரம் பற்றிய சிக்கலான விஷயத்தை மேலே கூறிய விதம் தெளிவாக்கியிருக்கிறார்.

• • •

சிறந்த ராஜதந்திரியான லார்டு மவுண்ட் பாட்டன், ஹைதராபாத் விஷயத்தில் விருப்பு அல்லது வெறுப்பு இருக்க நியாயமில்லாத பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி, சமஸ்தான நிர்

வாகத்தில் ஊறித் திளைத்துக் கீர்த்தி பெற்றவரும், ஹைதராபாத்தின் க்ஷேமத்தில் சிரத்தையுடையவருமான சர் மிர்ஸா இஸ்மெயில் போன்ற பிரமுகர்களின் அறிவுரைகள் நைஜாமின் செவிகளில் ஏறவில்லை. அதற்கு மாறாக ரஸ்வி கோஷ்டியினரின் துர்ப்போதனைக்கு இணங்கவே நைஜாம் ஐக்கிய நாடுகளின் சபையில் முறையிட்டுக் கொள்ள முற்பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நைஜாமின் கட்சியை எடுத்துக் கூற சர்ச்சில் முன் வந்தது போல, ஐ. நா. சபையிலும் நைஜாமின் முறையீட்டைச் சமர்ப்பிக்க ஒருவர் முன் வரலாம். பிரிட்டிஷ் பார்லிமெண்டின் சர்ச்சிலின் மூக்கு உடைபட்டது போன்று, ஐ. நா. சபையிலும் நைஜாம் கட்சியை எடுத்துக் கூறும் பிரதிநிதிக்கு மரியாதை கிடைக்கலாம்!

* * *

நிற்க, ரஸாக்கர்களின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன. ரஸாக்கர்களுடன் நைஜாம் சர்க்கார் போலீசாரும் இராணுவத்தினரும் சேர்ந்து கொண்டு பகிரங்கமாக ஜனங்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

நைஜாம் சமஸ்தானத்தைச் சேர்ந்த சில முஸ்லிம் பிரமுகர்கள்கூட ரஸாக்கர்களின் காட்டுமிராண்டித்தனம் எல்லை மீறிப் போய்விட்டது என்பதை ஒப்புக் கொண்டு, அவ்வாறு உண்மையை எடுத்துக் கூறிய பாவத்துக்காகச் சித்திரவதைக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

ஹைதராபாத் உருது தினசரியின் ஆசிரியரான ஒரு முஸ்லிம் பிரமுகர், ஹைதராபாத்தின் எதிர்கால சுபிட்சம் அது இந்தியாவுடன் சேர்ந்து ஒத்துழைப்பதையே பொறுத்திருக்கிறது என்றும், நைஜாம் இந்தியாவுடன் சேர்ந்து தமது சமஸ்தானத்திலும் தாமதமின்றிப் பொறுப்பாட்சியை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் புத்திமதி கூறியதற்காக அவரை ரஸாக்கர்கள் படுகொலை செய்துவிட்டார்கள்.

சென்ற 15-ந் தேதி இந்தியாவின் சுதந்திர விழாவை ரஸாக்கர்கள் "கொண்டாடிய" விதம் எவரையும் பதைபதைக்கும்படி செய்வதாக இருக்கிறது. அன்று பல கிராமங்களையும் எரித்து, பெண்களையும் சிசுக்களையும் கொன்று குவித்தார்களாம்.

மேற்படி அரக்கர்களுடைய அக்கிரமங்களை நேரில் கண்டு மனம் பதறிய இந்து மந்திரிகள் ஹைதராபாத் சர்க்காரிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார்கள்.

இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஹைதராபாத் பிரச்னை இறுதியாகத் தீருவது எக்காலம் என்று நேயர்கள் கவலைப்படுவது இயற்கையே.


ஹைதராபாத் விஷயமாக ஏற்கெனவே தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது நிலைமைக்குத் தகுந்தவாறு மேற்கொண்டு உற்ற நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படும் என்று சமீபத்தில் இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு கூறினார்.

ஹைதராபாத் பிரச்னை இன்னும் பழுக்கவில்லை; அது பழுக்கும்போது "ஆபரேஷன்" செய்யப்படும் என்று சர்தார் வல்லபாய் பட்டேலும் சில வாரங்களுக்கு முன் குறிப்பிட்டார்.

புயலுக்கு முன் பூரண அமைதி என்று சொல்லுவார்கள். அது போலவே ஹைதராபாத் பிரச்னையையொட்டி இந்திய சர்க்கார் இப்போது மிகவும் அமைதியாக இருந்து வருவது, எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பெரும் புயலுக்கு அறிகுறியாகும் என்று டில்லிச் செய்திகள் கூறுகின்றன.

"கவர்னர் ஜெனரல் என்ற ஹோதாவில் நான் சொல்லுகிறேன். ஹைதராபாத்தைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம். அவ்விஷயமாக கவலைப்படவும் வேண்டாம். அந்தப் பொறுப்பையெல்லாம் வகிக்க சர்க்கார் இருக்கிறார்கள். ஆனால் பின்புறமிருந்து சர்க்காரின் காலை மாத்திரம் வாரி விடாதீர்கள்" என்று ராஜாஜி சொல்கிறார்.

ஆம், ஜனங்களின் பிரதிநிதிகளான, ஜனங்களின் க்ஷேமத்தையே தங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்ட தலைவர்கள் சர்க்கார் நிர்வாகத்தை நடத்தும்போது, அவர்களுடைய காலை வாரி விடாமல் அவர்களுடன் ஒத்துழைப்பதுதான் ஜனங்களின் முக்கிய கடமை. அவ்விதமின்றி வீண் கவலைப் படுவதால் தங்களுக்கோ அல்லது தேசத்துக்கோ என்ன லாபம் ஏற்படப் போகிறது?



"ஏனப்பா, மரமாக நிற்கிறாய்?" என்று ஒருவனைப் பார்த்துச் சொன்னால், அதை ஒரு வசைமொழியாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. "பெரிய பரோபகாரியப்பா, நீ!" என்று புகழ்வதாகவே கொள்ள வேண்டும். மனித சமூகத்துக்கு மரம் அவ்வளவு மகத்தான நன்மையைச் செய்கிறது. வானத்தில் செல்லும் மேகங்களைப் பிடித்திழுத்து மழையைப் பொழியச் செய்வது மரம். பொழிந்த மழை உடனே மண்ணைக் கரைத்துக் கொண்டு ஓடிவிடாமல் அதைத் தரையில் தேங்கச் செய்து கசியப் பண்ணுவது மரம். நிலத்துக்குச் சிறந்த உரம் மரங்களின் தழைகள். வெயிலில் நின்றவனுக்கு மர நிழலின் அருமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இன்னும், உழவுக்கும் தொழிலுக்கும் வீடுகட்டி வாழ்வதற்கும் மரம் எத்தனை அத்தியாவசியமானது என்று சொல்ல வேண்டியதில்லை. இதையெல்லாம் எண்ணித்தான் மரத்துக்குத் தெய்வத் தன்மையை அளித்து வணங்கிப் போற்றினார்கள் நமது முன்னோர்கள். இந்தக் காலத்தில் உள்ள நமது தேசத் தலைவர்களும் மரம் வளர்ப்பதின் அவசியத்தை உணர்ந்து இந்தியா சுதந்திரம் பெற்ற சுபதினத்திலும் அந்த வாரம் முழுவதிலும் மரம் நாட்டும் விழாக் கொண்டாட வேண்டும் என்று சொன்னார்கள். ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிமுதல் ஒரு வாரம் வடநாட்டில் பல இடங்களில் விருட்சாரோகண உற்சவம் நடைபெற்றது.

தமிழ்நாட்டிலும் சில இடங்களில் சுதந்திரத் திருநாள் வாரத்தை மரம் வைத்துக் கொண்டாடினார்கள். அத்தகைய விழாக்காட்சி ஒன்றை இந்த வாரத்துக் "கல்கி" அட்டை தாங்கி வருகிறது. சுறுசுறுப்பு மிகவாய்ந்த நமது விவசாய மந்திரி கனம் மாதவ மேனன் அவர்களின் மனைவியார், — நாற்பது நாள் கைக் குழந்தையுடனே சிறை சென்ற தியாகியும் சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள், கல்யாணமுருங்கை மரத்தை நடுகிறார்கள். பின்வரிசையில் கனம் மாதவ மேனன் கனம் பக்தவத்சலம் முதலியவர்கள் நிற்பதைக் காணலாம்.

இந்தப் பக்கத்தின் தலைப்பில் உள்ள படத்தில் கனம் மாதவ மேனன் அவர்களும் புது விவசாய டைரக்டர் ஸ்ரீ ஆர். எம். சுந்தரம் அவர்களும் மரம் நடுகிறார்கள்.



ராஜாஜி மண்டபத்தில் மாதர் சங்கத்தின் வரவேற்பு.

•

சட்டசபை மண்டபத்தில் சபாநாயகரின் வரவேற்பு.





மேலேயும் கீழேயும்: சென்னை நகரசபை ஸ்டேடியம் மைதானத்தில் ராஜாஜியை வரவேற்கக் கூடியிருந்த மாபெருங் கூட்டத்தின் பகுதிகள். மத்தியில்: ராஜாஜியும் கொச்சி மகாராஜாவும்.



எட்டாம் அத்தியாயம்

சீதாவின் பதில்

லலிதாவின் கடிதம் சீதாவின் உள்ளத்தில் பலவித உணர்ச்சிகளை உண்டாக்கியது. லலிதாவின் புக்கக வாழ்க்கையைக் குறித்து அநுதாபம் ஏற்பட்டது. அதே சமயத்தில் லலிதாவின் நிலையுடன் தன்னுடைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தபோது அவளுடைய அந்தரங்கத்தில் ஒருவித மகிழ்ச்சியும் உண்டாயிற்று. "என்னதான் இருந்தாலும் இவள் இவ்வளவு குறை சொல்லிப் புலம்பக் கூடாது!" என்று ஒரு பக்கத்தில் தோன்றியது. உடனே "பாவம்! வேறு யாரிடத்தில் சொல்லிக் கொள்வாள்? அவள் அம்மாவோ பெரும் பைத்தியம்!" என்ற எண்ணமும் தோன்றியது. "அம்மம்மா! எத்தனை நீளம கடிதம் எழுதுகிறாள்? ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டியதை ஒன்பது வார்த்தைகளில் சொல்கிறாளே?" என்று அலுப்புப்பட்டுக் கொண்டாள். கடைசியாக ஒருவாறு கடிதத்தைப் படித்து முடித்தபிறகு பின்வரும் பதிலை எழுதினாள்:—

"என் பிரியமுள்ள தோழி லலிதாவுக்கு: உன்னுடைய கடிதம் கிடைத்தது. அதைப் படித்தபோது கொஞ்சம் வருத்தம் உண்டாயிற்று. உன் பேரில் கோபமாயும் இருந்தது. இவ்வளவு விஷயங்களையும் உன் மனதிற்குள் இத்தனை நாட்களும் மூடிவைத்துக் கொண்டிருந்தாயல்லவா? இதுதானா உண்மையான சிநேகிதத்துக்கு இலட்சணம்? போனது போகட்டும். இனிமேல் இன்பமோ, துன்பமோ, சுகமோ, துக்கமோ, எதுவாயிருந்தாலும் உடனுக்குடனே எனக்கு நீ விஸ்தாரமாகக் கடிதம் எழுதிவிட வேண்டும். ஒருவருக்கொருவர் சிநேகிதமாயிருப்பது பின் எதற்காக? சுக துக்கங்களைப் பரஸ்பரம் பகிர்ந்து அநுபவிப்பதற்குத்தானல்லவா?

காதல் என்பது கதைகளிலே மட்டும் அல்ல;—இந்த உலகத்திலும் உண்டு என்பது நிச்சயம். அதற்கு என்னுடைய வாழ்க்கையே அத்தாட்சி! அடியே! லலிதா! உண்மையில் நான் பாக்கியசாலிதானடி! ஆனால் இந்த பாக்கியம் ஒருவிதத்தில் உன்னால்தான் எனக்குக் கிடைத்தது என்பதை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். எனக்குப் பதிலாக இன்றைக்கு நீ இங்கே,— இந்த அழகான புதுடில்லி பங்களாவில்,— இருந்திருக்கலாம் என்பதை நினைக்கும் போது எனக்கு என்னவோ பண்ணுகிறது. உனக்கு எப்படி நான் நன்றி செலுத்துவேன்!

என்னுடைய சமாசாரம் இருக்கட்டும். உன்னுடைய புக்ககத்து வாழ்க்கையைப் பற்றி நீ எழுதியிருப்பதைப் படித்து வருத்தம் அடைந்தேன்.

உலகம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கும்போது,—நாகரிகம் இவ்வளவாகப் பரவியிருக்கும் காலத்தில்,—உன் புக்ககத்து மனிதர்களைப் போன்றவர்களும் இருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது! உன்னை ஜெயிலில் போட்டு அடைத்து வைத்திருப்பதுபோல் அல்லவா வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது? அதை நினைத்தால் எனக்கு அசாத்திய கோபம் வருகிறதடி!

ஆனால் ஒரு விஷயம். உன் கணவன் பட்டாபிராமன் உன்னைச் சினிமாவுக்கு அழைத்துப் போகாததினாலேயே அவனுக்கு உன் பேரில் காதல் இல்லை என்று நினைத்து விடாதே! இதெல்லாம் பட்டிக்காட்டுப் பெண்கள் பேசுகிற பேச்சு. புருஷர்களுக்கு எத்தனையோ சௌகரிய அசௌகரியங்கள் இருக்கும். அதையெல்லாம் கவனித்து நாம்தான் நல்ல மாதிரி நடந்துகொள்ள வேண்டும். நம்முடைய புருஷன் வேறொரு பெண்ணிடம் பேசிவிட்டால் அதனால் குடி முழுகிப் போய்விட்டது என்று நாம் நினைத்துக் கொள்ளக் கூடாது. நாகரிகமே தெரியாத படிப்பற்ற ஸ்திரீகள்தான் அப்படியெல்லாம் சந்தேகப்படுவார்கள்.

உன் மாமியாரைப்பற்றி நீ எழுதியிருப்பதையும் நான் முழுதும் ஒப்புக்கொண்டு விட முடியாது. எல்லாம் நாம் நடந்து கொள்வதைப் பொறுத்தது, லலிதா! பிறந்தகத்தை விட்டுப் புக்ககத்துக்குப் போனால் அப்புறம் பிறந்தகத்துப் பாசமே இருக்கக் கூடாது. மாமனார் மாமியார்தான் தாயார் தகப்பனார் என்று எண்ணி நடந்து கொள்ள வேண்டும். என்னுடைய 'ஓர்ப்படி' மாமியாரிடம் இருந்து குடித்தனம் செய்ய முடியாது என்று நினைத்துத்தான் பிறந்த வீட்டுக்குப் புருஷனையும் அழைத்துக் கொண்டு போய் விட்டாள். ஆனால் நான் எப்படியிருக்கிறேன், பார்! என் மாமியார் என்னிடம் வைத்திருக்கும் அபிமானத்துக்கு அளவே கிடையாது. 'பெற்ற பெண் கூட இவ்வளவு பிரியமாயிருக்க மாட்டாள்' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார். நீயும் உன் தாயார் தகப்பனாரை அடியோடு மறந்துவிட்டு மாமியாரும் மாமனாரும் தான் பெற்ற தாயும் தகப்பனும் என்று நினைத்து நடந்துகொள்ளு. அப்போது அவர்கள் எப்படி மாறி விடுகிறார்கள், பார்!

சூரியா காங்கிரஸுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து விட்டான். லலிதா! ஒரு மிகவும் சந்தோஷமான செய்தி. என் அகத்துக்காரருக்குச் சூரியாவை ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது. இருவரும் அன்னியோன்ய சிநேகிதர்களாகி விட்டார்கள். ஓயாமல் காங்கிரஸைப் பற்றியும் இங்கிலீஷ் சர்க்காரைப் பற்றியும் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். பேச ஆரம்பித்து விட்டால் பேச்சின் சுவாரஸ்யத்தில் சாப்பாட்டைக் கூட மறந்து விடுகிறார்கள். சில சமயம் நான் ஒருத்தி இருப்பதைக் கூட மறந்து விடுகிறார்களடி! எப்படியிருக்கிறது வேடிக்கை!

சென்ற ஞாயிற்றுக்கிழமை எல்லாருமாக இந்த டில்லியிலுள்ள குதுப்மினார், கோட்டை, ஜந்தர் மந்தர் முதலிய இடங்களுக்குப் போய் எல்லாவற்றையும் பார்த்து விட்டு வந்தோம். சூரியாவும் எங்களுடன் வந்ததுதான் மிகவும் சந்தோஷமாயிருந்தது.

லலிதா! என்னுடைய வாழ்க்கையிலேயே மிகவும் முக்கியமான சம்பவம் நாளை மறு நாள் நடக்கப் போகிறது. நாளை இரவு நாங்கள் ஆக்ராவுக்குப் புறப்படுகிறோம். சூரியாவும் எங்களுடன் கூட வருகிறான். ஆனால் என் மாமியார் வரவில்லை. குழந்தையைப் பார்த்துக்கொண்டு வீட்டில் இருப்பதாகச் சொல்லி விட்டார்.

உலகத்தின் ஒன்பது மகா அதிசயங்களில் ஒன்றாகிய தாஜ்மகால் ஆக்ராவில்தான் இருக்கிறது. நீ சரித்திரப் புத்தகத்தில் படித்திருக்கிறாய் அல்லவா? ஷாஜஹான் சக்கரவர்த்தி தன்னுடைய பட்டத்து ராணி மும்தாஜின் ஞாபகார்த்தமாகக் கட்டிய அற்புதக் கட்டிடம் தாஜ் மகால். முக்கியமாக, அதைப் பார்த்து விட்டு வரத்தான் நாங்கள் போகிறோம்.

ஆக்ராவிலிருந்து ஓர் இரவு ரயில் பிரயாணம் செய்தால் ரஜனிபூர் என்று ஒரு ஊர் இருக்கிறதாம். அது ஒரு சுதேச ராஜாவின் ஊராம். அங்கே ஒரு விஸ்தாரமான ஏரியும்

ஏரியின் நடுவில் ஒரு அழகான நீராழி மண்டபமும் இருக்கின்றனவாம். ஏரிக் கரை ஓரத்தில் ஆயிரம் பல்லாயிரக் கணக்கில் வெள்ளை வெளேர் என்ற நிறமுடைய கொக்குகள் வந்து மந்தை மந்தையாய் உட்கார்ந்து விட்டு, அவ்வளவும் சேர்ந்தாற்போல் பறந்து போகுமாம். அதைப் போன்ற அழகான காட்சி உலகத்திலேயே கிடையாதாம். ஆக்ராவிலிருந்து அங்கேயும் போய் வரலாமென்று இவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் சூரியா ஆக்ராவிலிருந்து திரும்ப வந்துவிட வேண்டுமென்றும் ஏதோ ஒரு மீட்டிங் தனக்கு இருக்கிறதென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறான். 'மீட்டிங்கும் ஆச்சு! மண்ணாங்கட்டியும் ஆச்சு!" என்று இவர் நேற்றைக்குச் சூரியாவுடன் சண்டை பிடித்தார்.

சூரியாவை நான் கவனமாகப் பார்த்துக் கொள்கிறேன், லலிதா! அவனைப் பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். சூரியா நம்மிருவருக்கும் செய்திருக்கிற உதவிக்கு நான் அவனுக்கு எவ்வளவு செய்தாலும் தகும். நல்ல சமயம் பார்த்து இவரிடம் சொல்லி அவனுக்கு ஒரு உத்தியோகம் பண்ணிவைக்கச் செய்யலாமென்று எண்ணியிருக்கிறேன். என்னுடைய மாமியாருடைய தங்கை பெண் ஒருத்திக்கு வரன் தேடிக் கொண்டிருக்கிறார்களாம். சூரியாவுக்குப் பண்ணிக் கொள்ளலாம் என்று மாமியார் சொல்கிறார். அந்த மாதிரி நடந்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். சூரியாவும் இங்கேயே குடியும் குடித்தனமுமாய்த் தங்கிவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அப்போது நீ கூடச் சில சமயம் இங்கே வந்துவிட்டுப் போவாய் அல்லவா?

பம்பாயில் உன்னை எல்லா இடங்களுக்கும் அழைத்துக் கொண்டு போய்க் காட்டிய நினைவு எனக்கு வருகிறது. டில்லியிலும் பார்க்கவேண்டிய இடங்களுக்கெல்லாம் உன்னை அழைத்துக் கொண்டு போய்க் காட்டுவது எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும் தெரியுமா?

இதோ இவர் 'வெளியில் உலாவப் போவதற்கு நேரமாகிவிட்டது' என்று அவசரப்படுத்துகிறார். ஆகையால் இந்தக் கடிதத்தை இங்கேயே நிறுத்திக் கொள்கிறேன். ஆக்ராவிலிருந்து திரும்பி வந்தபிறகு மறுபடியும் விவரமான கடிதம் எழுதுகிறேன்.

இப்படிக்கு,

உன் பிரிய சிநேகிதி,

சீதா

குறிப்பு:— நான் டில்லிக்கு வந்த அன்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு சிறு சம்பவம் நடந்தது. அதைப் பற்றி என்னமோ ஏதோ என்று எனக்கு ரொம்பவும் கவலையாயிருந்தது. ஆனால் கவலைக்குச் சிறிதும் இடம் இல்லையென்று இப்போது நிச்சயமாகி விட்டது. என்னுடைய அசட்டுத்தனமான சந்தேகத்தைப் பற்றி மறுமுறை நாம் நேரில் சந்திக்கும் போது சொல்கிறேன். அதைக் கேட்டால் நீ விழுந்து விழுந்து சிரிப்பாய் —சீதா."

ஒன்பதாம் அத்தியாயம்

மல்லிகை மாடம்

ரயில் வண்டி ஆக்ராவை நெருங்கிக் கொண்டிருந்தபோது, சூரியாவுக்கும் ராகவனுக்கும் விவகாரம் முற்றி அவர்களுடைய குரல் ரயிலின் சத்தத்தையும் மிஞ்சிக் கேட்டது.

"காங்கிரஸை வரவர மிதவாதம் பற்றிக் கொண்டு வருகிறது. மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டதினால் என்ன மாறுதலைக் கண்டோம்? ஒன்றுமில்லை! கவர்னர் முதல் கிராம முன்சீப் வரையில் முன் போலவே அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். போலீஸ் கெடுபிடியும் முன்போலவே தான் இருக்கிறது!" என்று சொன்னான் சூரியா.

"அது மட்டுமா? ரயில் முன் போலவே ஓடிக் கொண்டிருக்கிறது. தபால்கள் முன் போலவே டெலிவரி ஆகிக் கொண்டிருக்கின்றன. மாஜிஸ்ட்ரேட்டுகள் முன் போலவே திருடர்களைத் தண்டித்து வருகிறார்கள்.— இப்படியெல்லாம் புகார் செய்வாய்

போயிருக்கிறதே! நல்ல சோஷலிஸ்ட் நீ! பின்னே, என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்? கவர்னர் முதல் கிராம முனிசிப் வரையில்—போலீஸ்காரர்கள் உள்பட—எல்லா உத்தியோகங்களையும் அதிகாரங்களையும் சட்ட திட்டங்களையும் ஒழித்துவிட வேண்டும் என்கிறாயா? ஒழித்து விட்டால் அரசாங்கம் எப்படி நடக்கும்? அரசாங்கமே வேண்டாம் என்கிறாயா?" என்றான் ராகவன்.

"அரசாங்கமே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் என்றால், இங்கிலீஷ்காரர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஐ. சி. எஸ். அரசாங்கந்தான் என்பது உங்களுடைய எண்ணம். இங்கிலீஷ்காரர்கள் வருவதற்கு முன்னால் நம்முடைய தேசத்தில் அரசாங்கமே கிடையாதா?"

"ஏன் கிடையாது? பேஷாக உண்டு! இங்கிலீஷ்காரர்கள் வருவதற்கு முன்னால் நம் தேசத்தில் அங்க, வங்க, கலிங்க, குக்குட, கர்நாடக, மராட்ட முதலிய ஐம்பத்தாறு ராஜாங்கங்கள் இருந்தன; ராஜாக்களும் இருந்தார்கள். சுல்தான்களும், பாதுஷாக்களும் கூட இருந்தார்கள். அவரவர்கள் இஷ்டமே சட்டமாக அரசாட்சி நடத்தினார்கள். அத்தகைய ராஜாக்களின் ஆட்சிக்கு நாம் திரும்பிப் போகவேண்டும் என்கிறாயா? நீதான் சுதேச சமஸ்தானங்களையே ஒழித்துவிட வேண்டும் என்கிறாயே?"


"ஆம்; சுதேச ராஜ்யங்களையெல்லாம் ஒழித்துவிட வேண்டியதுதான். அந்தப் பழைய ஹைதர் காலத்து ஆட்சிக்கோ, பேஷ்வா காலத்து ஆட்சிக்கோ போகவேண்டும் என்று நான் சொல்லவில்லை. பழைய ஆட்சி வேண்டாம் என்றால், புதிய ஆட்சி என்பது இங்கிலீஷ்காரர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஐ. சி. எஸ். ஆட்சிதானா? உலகத்தில் வேறு தேசங்கள் இல்லையா? அந்தந்த தேசங்களில் அரசாங்கம் நடக்கவில்லையா?"

"நடக்கிறது அப்பனே, நடக்கிறது. ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சி நடக்கிறது. இத்தாலியில் முஸோலினி ஆட்சியும் நடக்கிறது. இங்கிலாந்திலிருந்து திரும்பும்போது ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் நான் போய் விட்டு



வந்தேன். கல்விக்கும் நாகரிகத்துக்கும் பெயர்போன ஐரோப்பாவில் நடக்கும் அரசாங்க முறைகளைப் பார்த்தால் ஆங்கில ஆட்சி முறை எவ்வளவு மேலானது என்று உனக்குத் தெரியும். அங்கேயெல்லாம் ஜனநாயகம் என்பது மருந்துக்கும் கிடையாது. சுதந்திரம் என்று பேச்சையே எடுக்கக் கூடாது.........."

"அதைப்பற்றி நமக்கென்ன கவலை? ஹிட்லரும் முஸோலினியும் எவ்வளவு பொல்லாதவர்களாயிருந்தபோதிலும் அவரவர்களுடைய நாட்டுக்குள்ளே தானே இருக்கிறார்கள்? இங்கிலீஷ்காரர்களைப் போல உலகத்தையே



கட்டியான அவர்கள் ஆசைப்பட வில்லையே? பிறநாடுகளை யெல்லாம் தங்களுடைய கொடுங்கோல் ஆட்சிக்கு உள்ளாக்க வில்லையே?......

"உனக்கு எப்படித் தெரியும்? அவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் தங்கள் சொரூபத்தைக் காட்டுவார்கள். இங்கிலீஷ்காரர்களை விட எவ்வளவோ பொல்லாதவர்களாயிருப்பார்கள். சீனாவில் ஜப்பான் செய்கிற அநியாயத்தைப் பார்!"

"இங்கிலீஷ்காரர்களுடைய கொட்டத்தை அடக்கக்கூடிய கீழ்நாடு ஜப்பான் ஒன்றுதான். சீனாவில் ஜப்பான் அக்கிரமம் செய்வதாகச் சொல்கிறதெல்லாம் இங்கிலீஷ்காரர்கள் செய்யும் பிரசாரந்தானே? உண்மை நமக்கு எப்படித் தெரியும்? என்னைக் கேட்டால், இங்கிலீஷ்காரர்களின் அரசாட்சியைக் காட்டிலும் வேறு எந்த அரசாட்சியும் மேல் என்று சொல்லுவேன். இங்கிலீஷ் ஆட்சி ஒரு தேசத்தின் ஆத்மாவையே அழித்து விடுகிறது. தேச மக்களுக்குள் பிரிவையும் பிணக்கையும் உண்டாக்குகிறது..."

"சூரியா! நன்றாகச் சொன்னாய்? நமது தேசத்தில் ஏற்கெனவேயுள்ள பிணக்குகளையும் பிரிவுகளையும் விடவா

இங்கிலீஷ் ஆட்சியால் அதிகம் உண்டாகிவிட்டது?"

"இங்கிலீஷ்காரர்கள் தலையிடாமலிருந்தால் நம்மிடையே யிருந்த பிளவுகளும் பிரிவுகளும் இதற்குள் தீர்ந்து போயிருக்கும்!"

"சரித்திரத்தையே பொய் என்று நீ சாதிக்கப் பார்க்கிறாய்! உன்னோடு எப்படி விவாதம் செய்வது?" என்று அலுத்துக் கொண்டான் ராகவன்.

இந்தச் சமயத்தில், "போதும் உங்கள் பேச்சு! சண்டையை நிறுத்துங்கள்; இதோ ஆக்ரா ஸ்டேஷன் வந்து விட்டது!" என்றாள் சீதா.

• • •

"நேபிள்ஸ் நகரத்தைப் பார்த்து விட்டுச் செத்துப் போங்கள்!" என்று மேனாட்டில் ஒரு வசனம் வழங்குகிறது. "ஆக்ராவைப் பார்க்கும் வரையில் உயிரோடிருங்கள்!" என்று இந்தியாவில் பிறந்தவர்களுக்கு நாம் சொல்கிறோம்.

இந்திய தேசத்தின் மத்திய கால மகோந்நதத்தையும் கலை வளத்தையும் அறிந்து கொள்ள விரும்புவோர் ஆக்ரா நகரைப் பார்க்க வேண்டும். மனிதனுடைய உள்ளமானது கற்பனை செய்யக்கூடிய இன்பமயமான சொர்க்க பூமியும் கந்தர்வ லோகமும் எப்படி யிருக்குமென்று தெரிந்து கொள்ள விரும்புவோர் ஆக்ராவை அவசியம் பார்க்க வேண்டும்.

அக்பர் சக்கரவர்த்தி மொகலாய சாம்ராஜ்யத்தின் தலை நகரை டில்லியிலிருந்து ஆக்ராவுக்கு மாற்றி ஆக்ராவுக்கு உயர்வையளித்தார். ஷாஜஹான் சக்கரவர்த்தி ஆக்ராவில் சொப்பனபுரியைப் போன்ற பற்பல பளிங்கு மாளிகைகளையும் தாஜ்மகாலையும் கட்டி ஆக்ரா நகரை உலக சரித்திரத்தில் என்றும் நிலைபெறக்கூடிய அமரபுரியாக்கினார்.

ஆக்ராவுக்குப் போகிறவர்கள் சாதாரணமாக முதலில் அந் நகரின் பழைய கோட்டையிலுள்ள அரண்மனைகளைப் பார்க்கப் போவார்கள். பார்த்து வியந்து "இதைக் காட்டிலும் அதிகமான அற்புதம் என்ன இருக்கப் போகிறது?" என்று எண்ணிக் கொண்டு தாஜ்மகாலைப் பார்க்கச் செல்வார்கள். தாஜ்மகாலைப் பார்த்ததும், அதிசயிக்கும் சக்தியையும்கூட இழந்து பிரமித்து நிற்பார்கள்.

அந்த முறையைப் பின்பற்றி ராகவனும் சீதாவும் சூரியாவும் முதலில் ஆக்ரா கோட்டைக்குப் போனார்கள். கோட்டைச் சுவரின் உயரத்தையும் நேற்றுத்தான் கட்டியதுபோல் புத்தப் புதியதாக விளங்கிய அதன் தோற்றத்தையும் கண்டு வியந்தார்கள். கோட்டை வாசலின் கம்பீரமான அமைப்பைப் பார்த்து அதிசயித்தார்கள். பிறகு உள்ளே பிரவேசித்துத் திவானி ஆம் என்னும் பொதுஜன சபா மண்டபத்தை நோக்கிச் செல்கையில் பக்கத்தில் காணப்பட்ட ரோஜா மலர்த் தோட்டத்தைச் சீதா பார்த்தாள். உடனே அந்தப் பக்கம் ஓடினாள். சில நிமிஷத்துக்கெல்லாம் திரும்பி வந்து, "ஏக், ஸார்! அனார்க்கலி இங்கேதான் புஷ்பம் விற்றுக் கொண்டிருந் திருப்பாள்; ஸலீம் இங்கேதான் அவளைச் சந்தித் திருப்பான்; இல்லையா? இருவரும் எந்தச் சுரங்க வழியாக யமுனைக் கரைக்குப் போனார்களோ!" என்றாள்.

"அனார்க்கலியின் ஞாபகம் இன்னும் உன்னை விடவில்லையா?" என்று நகைத்தான் ராகவன்.

"அதெப்படி அனார்க்கலியை நான் மறக்க முடியும்? அனார்க்கலி புஷ்பம் விற்ற இடத்தைப் பார்ப்பதற்காகத்தானே நான் முக்கியமாக இங்கே வந்தேன்?" என்றாள் சீதா.

"அனார்க்கலி என்றால் யார்!" என்று சூரியா கேட்டான்.

"அதுகூடத் தெரியாதா உனக்கு? அனார்க்கலி கதையை நீ வாசித்ததே இல்லையா?" என்றாள் சீதா.

"வாசித்ததில்லை, அத்தங்கா! எனக்குக் கதையும் நாவலும் அவ்வளவாகப் பிடிக்காது!" என்றான் சூரியா.

"நம்ம சூரியாவுக்கு நாவலும் கதையும் படிக்க நேரம் ஏது? கார்ல் மார்க்ஸைக் கட்டிக்கொண்டு அழுவதற்குத்தான் அவனுக்குப் பொழுது சரியாயிருக்குமே?" என்று எகத்தாளம் செய்தான் ராகவன்.

"அம்மாஞ்சி! நான் சொல்கிறேன், கேள்! அனார்க்கலி என்றால் மாதுளை மொக்கு என்று அர்த்தம். இளவரசன் ஸலீம் அவளுக்குக் கொடுத்த பெயர் அது!........."

"ஸலீம் என்பது யார்?"

"அதுகூடவா தெரியாது? ஜஹாங்கீர் சக்கரவர்த்தியாவதற்கு முன்னால் அவன் பெயர் ஸலீம்......"

"சீதாவை என்னமோ என்று நினைக்காதே சூரியா! மொகலாயர் சரித்திரத்தில் அவள் பெரிய எக்ஸ்பர்ட்! ஜதுநாத் சர்க்காருக்கும் வின்செண்ட் ஸ்மித்துக்கும் ஏதேனும் சந்தேகம் வந்தால் சீதாவினிடம்தான் அவர்கள் வருவது வழக்கம்."

"இவர் அப்படித்தான் பரிகாசம் பண்ணுவார், அம்மாஞ்சி! நான் சொல்லுவதைக் கேட்டுக்கொள். ஜஹாங்கீர் சிறுபிள்ளையாயிருந்தபோது அவனை வளர்த்த தாய் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு ஒரு பெண் இருந்தாள். அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்துவிட்டு ஸலீம் அவளுக்கு 'மாதுளை மொக்கு' என்று பெயரிட்டு அழைத்தான். அவளையே கலியாணம் செய்து கொள்வதாகவும் வாக்களித்திருந்தான்......"

இப்படிக் கதை சொல்லிக் கொண்டே அவர்கள் திவானி காஸ் என்னும் அழகிய பளிங்குக் கல் சபா மண்டபத்தை அடைந்தார்கள். மண்டபத்தின் அழகிய தூண்களையும் மேல் விதானத்தையும் விதவிதமான சித்திர வேலைப்பாடுகளையும் கண்டு அதிசயித்தார்கள்.

பிறகு அரண்மனையின் அந்தப்புரத்துக்குச் சென்றார்கள். அங்கே ஷாஜஹானின் புதல்விகள் ரோஷனாராவும் ஜஹானாராவும் வசித்த இடங்களைப் பார்த்தார்கள். கண்ணாடி மகாலைப் பார்த்தார்கள். பிறகு அந்தப்புரத்து ராணிகளும் சேடிகளும் ஜலக்கிரீடை செய்வதற்காக அமைத்த பளிங்குக் கல் குளங்களைப் பார்த்தார்கள். ராணிகளின் நூபுரங்களோடும் சிலம்புகளோடும் போட்டியிட்டுக் கொண்டு சல சல வென்ற சத்தத்துடன் ஒரு காலத்தில் தெளிந்த நீர் ஓடிக் கொண்டிருந்த பளிங்குக் கல் ஓடைகளைப் பார்த்தார்கள்.

"அடாடா! இந்த அரண்மனை அந்தப் புரத்தில் ராணிகளும் ராஜகுமாரிகளும் வசித்துக் கொண்டிருந்த காலத்தில் எப்படியிருந்திருக்கும்?" என்றாள் சீதா.

"எப்படியிருந்திருக்கும்? இங்கே வசித்தவர்களுக்கு நரகமாக இருந்திருக்கும்; சிறைச் சாலையாக இருந்திருக்கும்; கூண்டில் அடைக்கப்பட்ட கிளிக்குத்தான் இருக்கும் கூண்டைப் பார்த்தால் என்ன தோன்றும்? தங்கத்தினால் செய்து ரத்தினங்கள் இழைத்த கூண்டாயிருந்தாலும், கிளிக்கு அதன் கூண்டு சிறைச்சாலை தானே?" என்றான் சூரியா.

"பலே சூரியா! அத்தங்காளுக்குச் சரியான அம்மாஞ்சி நீதான்!" என்றான் ராகவன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் இரண்டு பேருமாய்ச் சேர்ந்து கொண்டு எனக்கு அசட்டுப் பட்டம் கட்டப் பார்க்கிறீர்கள். இந்த மாதிரி சலவைக் கல் அரண்மனையைச் சிறைச்சாலை என்று சொன்னால் அது உண்மையாகி விடுமா? இந்த மாதிரி ஒரு சிறைச்சாலை கட்டி அதில் இருக்கச் சொன்னால் யார்தான் இருக்கமாட்டேன் என்பார்கள்? என்னை இருக்கும்படி சொன்னால்கூட இருந்து விடுவேன்!" என்றாள் சீதா.

"சீதா! இந்த அரண்மனைகளைப் பார்த்து அவ்வளவு மயங்கி விடாதே! இதையெல்லாம் கட்டிய பாதுஷாக்களும் ராஜாக்களும் இருந்த காலத்தில் இந்த நாட்டில் எந்த ஸ்திரீயும் பத்திரமாயிருக்க முடியவில்லை. அரசனுடைய கண் பார்வைக்கு எந்தப் பெண்ணாவது ஆளாகி விட்டால், ஒன்று அவள் உயிரை இழக்க வேண்டும் அல்லது கற்பை இழக்க வேண்டும் என்ற நிலைமையாயிருந்தது. ஏதோ கடவுள் அருளால் இங்கிலீஷ் அரசாங்கம் வந்தது" என்றான் ராகவன்.

"அதை நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். இங்கிலீஷ் ஆட்சி வந்ததினால் என்ன ஆகிவிட்டது? இன்றைக்கும் இங்கிலீஷ் மேலதிகாரத்துக்கு உட்பட்ட சுதேச சமஸ்தானங்களில் மகாராஜாக்கள் என்னவெல்லாம் அக்கிரமம் பண்ணுகிறார்கள்?"

"உங்கள் சண்டையை மறுபடியும் ஆரம்பித்து விடாதீர்கள். நீங்கள் சொல்வது ஒன்றும் சரியில்லை. நானும் கொஞ்சம் சரித்திரம் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன். சிவாஜி மகாராஜாவின் முன்னால் முஸ்லிம் ஜாகிர்தாரின் பெண்ணைக் கொண்டு போய் நிறுத்தியதும் என்ன சொன்னார்? 'அம்மணி! என்னுடைய தாயார் உன்னைப்போல அழகாயிருந்தால் நானும் எத்தனையோ அழகா

யிருந்திருப்பேனே?' என்று சொல்லி விட்டு அந்தப் பெண்ணைச் சகல மரியாதைகளுடன் தகப்பனாரிடம் சேர்ப்பித்துவிடவில்லையா? இந்த அரண்மனையைக் கட்டிய ஷாஜஹானையே பாருங்கள். மும்தாஜ் பேகத்தைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு இன்னொரு ஸ்திரீயை அவன் கண்ணெடுத்துப் பார்த்தானா? மும்தாஜ் செத்த பிறகு கூட அவளை ஷாஜஹான் மறக்கவில்லையே? அவளுக்காக எத்தனை கோடி ரூபாய் செலவு செய்து தாஜ் மகாலைக் கட்டினான்? அதோ பாருங்கள்!'' என்றாள் சீதா.

அப்போது அவர்கள் மல்லிகை மாடம் என்று பெயர் பெற்ற அரண்மனைப் பகுதியின் மேல் தாழ்வாரத்தின் வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து பார்த்தால் யமுனை நதிக்கு அக்கரையில் தாஜ்மகாலின் அற்புதத்தோற்றம்காணப்படும்.

மூன்று பேருமே சிறிது நேரம் வரையில் அந்தக் காட்சிக்குத் தங்கள் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்களாய்ப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

பிறகு சீதா "நீங்கள் இரண்டு பேருமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியமாக்கப் பார்க்கிறீர்களே? ஷாஜஹான் சக்கரவர்த்தி எப்பேர்ப்பட்டவர் என்று தாஜ்மகாலைப் பார்த்தால் தெரியவில்லையா? எவ்வளவு சிரமம் எடுத்து, எவ்வளவு பிரயத்தனம் பண்ணி, எவ்வளவு செலவு செய்து, தாஜ்மகாலை ஷாஜஹான் கட்டியிருக்க வேண்டும்? மும்தாஜிடம் அவருக்கு எவ்வளவு ஆசை, எவ்வளவு காதல் இருந்திருக்க வேண்டும்? தாஜ்மகாலைக் கட்டியது மட்டுமா? கட்டியபிறகு ஆயுள் முடியும் வரையில் தினம் தினம் தாஜ்மகாலைப் பார்த்துக் கொண்டேயிருந்து கடைசியில் செத்துப் போனாராம். அவர் தாஜ்மகாலைப் பார்த்துக் கொண்டேயிருந்தது இந்த மல்லிகை மாடத்திலிருந்து தான் போலிருக்கிறது!'' என்றாள்.

"ஆமாம், சீதா! உன்னுடைய ஊகம் உண்மைதான். இந்த இடத்திலேயிருந்துதான் ஷாஜஹான் தாஜ்மகாலைப் பார்த்துக் கொண்டே செத்துப் போனாராம்!'' என்றான் ராகவன்.

"ஏன் தெரியுமா, அத்தங்கா! நான் படித்த சரித்திரத்தைச் சொல்கிறேன். ஷாஜஹான் அரசாங்கப் பொக்கிஷத்தை இப்படியெல்லாம் வீண் வ்யயம் செய்தது அவருடைய மகன் அவுரங்கஜீப்புக்குப் பிடிக்கவில்லையாம். தகப்பனாரைச் சிறைப்படுத்தி இந்தக் கோட்டையிலே அடைத்து வைத்து, 'நீங்கள் உங்களுடைய அருமை பத்தினியின் ஞாபகமாகக் கட்டிய கட்டிடத்தைச் சதா சர்வ காலமும் பார்த்துக் கொண்டிருங்கள்!' என்று சொல்லி விட்டானாம். ஷாஜஹான் இங்கேயே இருந்து தாஜ்மகாலைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே இறந்தானாம்!'' என்றான் சூரியா.

"ஷாஜஹானுக்குச் சரியான தண்டனைதான். நான் அவுரங்கஜீப்பாயிருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பேன்!'' என்றான் ராகவன்.

"ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! இப்பேர்ப்பட்ட அற்புதமான காட்சிகளைப் பார்த்துவிட்டு இந்த மாதிரி பேசுகிறீர்களே! உங்களுக்கெல்லாம் கண் எங்கே போயிற்று?'' என்றாள் சீதா.

உண்மையில் அந்தச் சமயம் ராகவன், சூர்யா இருவருடைய கண்களும் தூரத்தில் தெரிந்த தாஜ்மகாலையோ, அல்லது பக்கத்திலே இருந்த அற்புதமான பளிங்குக் கல் சித்திரங்களையோ பார்க்கவில்லை. அந்த மல்லிகை மாடத்தின் தாழ்வாரத்தின் வழியாக எதிர்ப்புறமிருந்து வந்து கொண்டிருந்தவர்களின் மீது அவர்களுடைய பார்வை போயிருந்தது.

மூன்று பேர் வந்து கொண்டிருந்தார்கள். இருவர் ஸ்திரீகள்; ஒருவர் ஆடவர். கராச்சி காங்கிரஸின்போது விமான கூடத்தில் ராகவன் பார்த்த பெண்கள் தான் அவர்கள் இருவரும். ஒருத்தி தாரிணி; இன்னொருத்தி அவளுடைய சிநேகிதி. ராகவன் செயலற்று நின்றான். தாரிணியின் முகத்திலிருந்து அவனுடைய கண்கள் அப்பால் இப்பால நகரவில்லை. வேறு யாரையும் எதையும் அவனால் பார்க்க முடியவில்லை. எங்கே இருக்கிறோம், யாருடன் வந்திருக்கிறோம் என்பதையெல்லாம் அவனுடைய உள்ளம் மறந்து விட்டது. எதிரில் தாரிணி வருகிறாள் என்கிற ஒரு நினைவுதான் அவனுடைய மனதில் நிலைபெற்றிருந்தது.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

223. குறுகிய காட்சியான்!

"வாயுபகவானது அருளினால் வந்தேன்!" என்று அனுமன் சொன்னான். விஷயம் விளங்கவில்லை சீதைக்கு. "இவ்வளவு சிறிய, பொருட்படுத்த முடியாத, உடலுடையவனாய் இருக்கிறாய். எப்படிக் கடலை கடக்க முடிந்தது?" என்று கேட்கிறாள்.

'இத்துணைச் சிறியதோர்
    எண்ணில் யாக்கையை,
தத்தினை கடல், அது
    தவத்தின் ஆயதோ,
சித்தியின் இயன்றதோ
    செப்புவாய்' என்றாள்,—
முத்தினும் நிலவினும்
    முறுவல் முற்றினள்.

[இத்துணைச் சிறியதோர்: இவ்வளவு குறுகிய; எண்ணில் யாக்கையை: பொருட்படுத்த முடியாத உடம்பினனாய்; தத்தினைக் கடல்: கடலைத் தாண்டினாய் அது தவத்தின் ஆயதோ சித்தியின் இயைவதோ: அருந்தவத்தின் பயனாய் முடிந்ததோ, அல்லது மந்திர சக்தியினால் ஏற்பட்டதோ; முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினள்: முத்தின் ஒளியும் நிலவின் ஒளியும் கலந்து விளைந்தது போல அவளது பல்லின் பிரகாசம் தோன்றப் புன்னகை கொண்டவளாய் — செப்புவாய் என்றாள்.

குறிப்பு: சிறையிலிருந்த சீதைக்கு இதயம் இடிந்தே போய்விட்டது. எதிர்பாராதபடி திடமென்று ராமன் தன்னை மீட்கப் போகிறான் என்ற உறுதி ஏற்பட்டு விட்டது. அவ்வளவுதான்; இதயம் நெகிழ்ந்து அதில் ஒரு ஆனந்தமே குடிகொண்டு விட்டது. குழந்தை யுள்ளமாகிய அவளது உள்ளம் ஒரு உல்லாசத்தையே மேற்கொண்டு விட்டது. இந்தக் குரங்கல்லவா நம்மை மீட்கப் போகிறது என்ற எண்ணம் வரவும் அவளுக்குச் சிரிப்பே வந்துவிட்டது. மனோதத்துவத்தின் அரிய உண்மை யொன்றைச் சீதையின் உல்லாசச் சிரிப்பு விளக்குகிறது.]

இந்தச் சிறு உருவத்தோடு கடலை எப்படிக் கடந்தாய் என்று சீதை கேட்ட மாத்திரத்தில், அந்த க்ஷணத்திலேயே தன் விசுவ ரூபத்தோடு நின்று விட்டான் அனுமன்.

கட்டினில் நின்றனன்,
    தொழுத கையினன்
விட்டுயர் தோளினன்
    விசும்பின் மேக்குயர்
எட்டுரு நெடுமுகட்(டு)
    எய்தி; — நீருமேல்
முட்டுமென்(று) உணர்வொடு
    வளைந்த மூர்த்தியான்.

[கட்டினில் நின்றனன்: ஒரு நொடியிலேயே உயர்ந்து நின்றான்—எப்படி நின்றான்? தொழுத கையினன்: கைகளைக் கூப்பியவனாய்; விட்டு உயர் தோளினன்: இருபக்கமும் படர்ந்து மேலே உயர்ந்துள்ள தோளினனாய்; விசும்பின் மேக்குயர் எட்டுரு நெடு



சாம்பூர் வடகரை கே. பத்மநாபன் ஆகஸ்டு 2வ. மாலை புது டில்லி ரேடியோவில் அருமையாக வீணை வாசித்தார்.

முகடு எய்தி: விண்ணுலகத்துக்கும் மேலே போயுள்ள எட்ட முடியாத வான் முகட்டைத் தொட்டு—கட்டிலின் நின்றனன்; நீளுமேல்: அதற்கு மேல் போனால்; முட்டும் என்ற உணர்வோடு வளைந்த மூர்த்தியான்: வான் முகடு முட்டிவிடும் என்று உணர்ந்து பணிந்துள்ள அனுமன்.

குறிப்பு: அனுமன் பெரிய யோகி. பல சக்திகள் வாய்ந்தவன். இத்தகைய பாத்திரத்தை இதிகாசத்தில் எடுத்துச் சொல்லும் போது அசாதாரணமான அடையாளங்களைக் கையாளுவது மரபு. அந்த மரபை யொட்டி அனுமனது பெருமையை விசுவரூபமாகக் காட்டி விளக்குகிறார் கவிஞர்.]

விசுவ ரூபத்தைப் பார்த்துவிட்டு அதிசயத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கிவிடுகிறாள் சீதை "இந்த விசுவ ரூபத்தை பூராவும் கண்டு அனுபவிப்பதற்கு உலகத்தார் முழுவதும் இங்கு வந்து கூடவேண்டும். அப்படிக் கூடவில்லை. ஆகையால் உன்னுடைய பழைய உருவத்துக்கு வந்துவிடலாம்" என்றாள்.

அனுமனது சக்தியை நிதர்சனமாகப் பார்த்த மாத்திரத்தில் மனதுக்கு எவ்வளவோ உறுதியும் ஆனந்தமும் உண்டாய்விட்டது சீதைக்கு.



கல்யாணசோமபுரம் சங்கீத பூஷணம் ஸ்ரீ எஸ். துரைசாமி திருச்சி ரேடியோவில் ஆகஸ்டு 5ல் அரங்கேற்றுக் கச்சேரி செய்தார்.

'முழுவதும் இவ்வுருக்
காண முற்றிய
குழுவில(து) உல(கு), இனிக்
குறுகு வாய்' என்றாள்,—
எழுவினும் எழில் இலங்(கு)
இராமன் தோள்களைத்
தழுவின ளாமெனத்
தளிர்க்கும் சிந்தையாள்.

[எழுவினும் எழில் இலங்கு: கருங்கல் தூணினும் அதிகமான அழகு வாய்ந்த; இராமன் தோள்களைத் தழுவினளாம் என: ராமன் அங்கேயே வர அவனது தோள்களை அப்படியே தழுவினள் என்று சொல்லும்படி; தளிர்க்கும் சிந்தையாள்: அவ்வளவு பூரிக்கும் உள்ளத்தாள்.]

"பழைய உருவத்தை அடைவாய்!" என்று சீதை சொல்லவும், அனுமனும் "அப்படியே செய்கிறேன்!" என்று சொல்லி, வான் முகட்டுக்கும் அப்பால் போகாமல் மீண்டவனாய்ச் சாமான்ய உருவத்தோடு நின்றான்.

ஆண்தகை அனுமனும்,
அருள் அதாம்எனு
மீண்டனன் விசும்பெனும்
பதத்தை மீச்செல்வான்;—
காண்டலுக் குரியதோர்
உருவங் காட்டினான்;—
தூண்டரு விளக்கனாள்
இனிய சொல்லினாள்.

[ஆண்தகை அனுமனும்: மகா வீரனான அனுமனும்; அருள் அதாம்எனு: 'சரி, உத்தரவுப்படியே செய்கிறேன்' என்று சொல்லி; மீண்டனன் விசும்பு எனும் பதத்தை மீச் செல்வான்: வானுலகத்துக்கு மேல் செல்ல எண்ணியவன் அதை விட்டுவிட்டு மீண்டனன்; காண்டலுக்கு உரியதோர் உருவங் காட்டினான்: சாமான்யமாகப் பார்க்கும்படியான உருவத்தோடே நின்றான்; தூண்டரு விளக்கனாள்: தூண்ட வேண்டாத ஒரே பிரகாசமயமுள்ள விளக்கை யொத்த சீதையானவள்; இனிய சொல்லினாள்: இந்த விதமாகப் பேசினாள்.]

சீதை என்ன சொல்லுகிறாள் என்பதை அடுத்த இதழில் பார்க்கலாம்.

அடிமை வாழ்வைத் தகர்க்க

புரட்சி பூகம்பங்கள்

ஜெயமணி

6. சீனா

குடியரசு ஏற்பட்ட பின்னரும் முடிவில்லாத உள்நாட்டுக் கலகங்களுக்கு இரையாகி வரும் ஒரு தேசம் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறது. அது தான் துர்ப்பாக்கியம் வாய்ந்த சீனா.

சீனாவின் இயற்கை அமைப்பு,— அது மூன்று புறங்களிலும் மலைகளாலும் பாலைவனப் பிரதேசங்களாலும் சூழப்பட்டிருப்பது, அதற்கு ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் பாதுகாப்பு அளித்து வந்தது. எனினும் இந்தியாவில் அன்னியர்களின் ஆட்சி ஏற்பட்ட பின், சீனாவும் அன்னியர்களின் மறைமுகமான ஆதிக்கத்துக்கு இலக்காக நேர்ந்தது.

அதாவது சீனாவில் அன்னியரின் நேரடியான நிர்வாக ஆதிக்கம் ஏற்படவில்லையாயினும், வர்த்தகத் துறையில் அன்னியரின் சூழ்ச்சிகளைத் தடுக்க அந்தேச மக்களால் முடியவில்லை.

லாகிரி வஸ்துவான அபினை யாரும் இறக்குமதி செய்யக் கூடாதென்று சீன சர்க்கார் தடுத்தனர். ஆனால், அந்தத் தடையை மீறி பிரிட்டிஷ் கப்பல்கள் ஏராளமாக அபினை ஏற்றுமதி செய்து கொண்டு சீனத் துறைமுகங்களுக்குச் சென்றன. அபின் மனிதனின் உடலைக் கசக்கிப் பிழிந்து அவனை நடைப் பிணமாகச் செய்யக் கூடிய தன்மை வாய்ந்ததல்லவா? எனவே சீனர்கள் ஆத்திரம் அடைந்து அபினுடன் பிரிட்டிஷ் கப்பல்களையும் பாதாள லோகத்துக்கு அனுப்பி விட்டார்கள். அதிலிருந்து சீனாவுக்கும் பிரிட்டனுக்கும் இரண்டு வருஷங்கள் வரையில் யுத்தம் நடந்தது. அதில் பிரிட்டிஷாரே வெற்றி பெற்றதால், சீனர்கள் தங்களுடைய துறைமுகங்களை பிரிட்டிஷாரின் வியாபாரத்துக்குத் திறந்து விட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன் ஹாங்காங் துறைமுகத்தையும் பிரிட்டிஷார் கைப்பற்றிக் கொண்டனர்.

சீனாவில் பிரிட்டிஷாருக்குக் கிடைத்த வெற்றி காரணமாக மற்ற நாடுகளுக்கும் சபலம் ஏற்பட்டது. சீன எல்லையை அடுத்துள்ள பிரதேசங்களை அன்னிய நாடுகள் அபகரிக்க முற்பட்டன. பர்மாவைப் பிரிட்டன் பிடித்துக் கொண்டது. இந்தோசீனாவைப் பிரான்ஸ் கபளீகரம் செய்தது. ஆமூர் பிரதேசத்தை ருஷ்யா கைப்பற்றியது. சீனாவைச் சேர்ந்த கொரியாவை ஜப்பானியர் ஆக்கிரமித்துக் கொண்டனர். சீனாவில் பல நாடுகளும் வர்த்தகச் சலுகைகளைப் பெற்றன.

எனினும் மேற்படி நாடுகள் சீனாவில் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் சீனா விழித்துக் கொண்டது. இந்தியாவில் பிரிட்டிஷார் செய்த சூழ்ச்சிதான், வெள்ளம் தலைக்கு மேல் போகு முன் சீனர்கள் விழித்துக் கொள்வதற்குக் காரணமாக இருந்தது. இந்தியாவில் பிரிட்டிஷார் ஆதியில் வர்த்தகச் சலுகைகள் கோரினர். பிறகு வர்த்தக ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். அதன் பிறகு நாட்டையே கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள்!

அதேபோன்ற நாடகம் சீனாவிலும் ஆரம்பமாயிற்று. ஆனால், சீன மக்களைப் பிடித்த நல்லகாலம் அவர்கள் அந்த நாடகத்துக்கு இடம் கொடுக்கவில்லை. அன்னியரின் மாய வலைகளை முளையிலேயே கிள்ளி எறிய சங்கல்பம் கொண்டார்கள். சீன இரகசியச் சங்கத்தினர் ஐரோப்பியரின் ஆலயங்களையும் கடைகளையும் வீடுகளையும் சூறையாடத் தொடங்கினர்.

உலகப் பிரசித்தி பெற்ற ஸன் யாட் ஸென்னின் தலைமையில் சீனாவில் புரட்சி பூகம்பம் உண்டாயிற்று. சீனாவின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக இருந்த மஞ்சு வம்ச சக்கரவர்த்தியை

எதிர்த்து ஆரம்பமான புரட்சியை, ஸன்யாட் ஸென் குடியரசுப் புரட்சியாக மாற்றினார். சீனாவில் மூன்று நூற்றாண்டுகளாக எதேச்சாதிகார ஆட்சி புரிந்து ருசி கண்ட மஞ்சு சக்கரவர்த்தி, தன் முடிக்கு ஆபத்து வருவதைச் சகியாது, சீன மக்கள் கோரும் சகல அரசியல் சீர்திருத்தங்களுக்கும் இணங்குவதாக மன்றாடினார். ஆனால் சீன ஜனங்கள் மேற்படி சக்கரவர்த்தியுடன் எவ்வித ராஜியும் செய்து கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள் ஆயுதங்களைக் கையிலேந்தி நான்கிங் நகரைக் கைப்பற்றிக் குடியரசுப் பிரகடனம் செய்தனர். நிலைமை கட்டுக்கு அடங்காமல் முற்றி விட்டது என்பதை உணர்ந்த மஞ்சு வம்சத்தின் கடைசிச் சக்கரவர்த்தி பட்டம் துறந்தார்.



ஸன் யாட் ஸென்

பின்னர் சீனக் குடியரசைப் பலப் படுத்துவதில் ஸன்யாட் ஸென் ஓரளவு வெற்றி பெற்றார் என்றாலும், 1925-ம் வருஷம் அவருடைய மரணத்துக்குப்பின் மீண்டும் சீனாவை உள்நாட்டுக் கலகமாகிற சைத்தான் பிடித்துக்கொண்டது. அது இன்றும் சீனாவை விட்டபாடில்லை!

7. அயர்லாந்து

பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே பிரிட்டிஷார் அயர்லாந்துக்குள் பிரவேசித்து விட்டதால், பல நூற்றாண்டுகள் வரையில் அடிமைப் பட்டுக் கிடக்க வேண்டிய அலங்கோல நிலை அயர்லாந்துக்கு ஏற்பட்டது. வெளிப்பார்வைக்கு அயர்லாந்து அமைதியாக இருந்து வருவதுபோல் தோன்றியதெனினும், அயர்லாந்து ஜனங்களிடையே உள்ளூறப் புகைந்துகொண்டிருந்த சுதந்திரக் கனலை ஆங்கிலேயர்கள் அறிந்து கொண்டனர். அந்தக் கனலை அணைப்பதற்காக அவர்கள் அயர்லாந்தில் ஆங்கில பாஷையைப் புகுத்தி ஐரிஷ் பாஷையைச் சிதைக்க முற்பட்டார்கள். அயர்லாந்தைச் சேர்ந்த பல பிரதேசங்களிலும் ஆங்கிலேயரைக் கொண்டு போய்க் குடியேற்றினர். அல்ஸ்டர் மாகாணம் ஆங்கிலேயர் மயமாகியது. அங்கு ஆங்கிலேயருக்கு எல்லையற்ற சலுகைகள் அளிக்கப்பட்டனவாதலால், அவர்களுக்கு அயர்லாந்து மக்களின் சொத்துக்களை அபகரித்துக் கொள்வது சுலபமாயிற்று.

அவ்வாறாகச் சில வருஷங்களில் ஆங்கிலேயர் அயர்லாந்தில் லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைச் சொந்தமாக்கிக் கொண்டனர். அவர்களுடைய சூழ்ச்சியைத் தெரிந்துகொண்ட அயர்லாந்து மக்களிடையே தேசியப் புரட்சிகள் ஏற்படத் தொடங்கின. எனினும் பிரிட்டனில் முடிசூடா மன்னனாக விளங்கிய ஆலிவர் க்ராம்வெல்லின் இரும்பு ஆட்சி முறை, மேற்படி புரட்சிகளை அடக்கி நசுக்கியது. அப்போது ஏற்பட்ட பஞ்சத்தினால் லட்சக் கணக்கான ஐரிஷ்மக்கள் மாண்டனர்.

வெகு காலம் வரையில் அயர்லாந்து பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நிர்வாகத்தில் இருந்து வந்ததால், அதை எதிர்த்து டேனியல் ஓகானெல் என்ற தலைவர் 'ஹோம் ரூல்' கிளர்ச்சியை – அதாவது சுயாட்சிக் கிளர்ச்சியை ஆரம்பித்தார். பிறகு சார்லஸ் ஸ்டுவர்ட் பார்னெல் தொடர்ந்து மேற்படி கிளர்ச்சியைத் திறம்பட நடத்தினார். அதற்காக அவர்கள் பிரிட்டிஷாரால் சிறைப்படவும் நேர்ந்தது.

அதன்பின், பிரிட்டனிலிருந்து அயர்லாந்து அறவே பிரிந்து விடவேண்டும் என்ற இயக்கம் தீவிரமாகியது. சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸின்பீன் கட்சியின் தலைமையில் மேற்படி இயக்கம் நடந்தது. அக்கட்சியினர் ஐரிஷ் தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டு ஐரிஷ் குடியரசுப் பிரகடனம் செய்தனர். பிரிட்டிஷார் துருப்புகளைக் கொண்டு அந்தப் புரட்சியை நசுக்கியதுடன், அதன் தலைவர்களையும் இரக்கமின்றித் தூக்கிலிட்டார்கள்.

பூசாரி வரம் கொடுக்கவில்லை!

கடைசியாக அயர்லாந்து மக்களின் புரட்சி வேகத்தைத் தடுக்க முடியாமல் பிரிட்டிஷார் 1912-ம் வருஷம் அயர்லாந்துக்குச் சொந்தமாக ஒரு பார்லிமெண்டை நிறுவ முற்பட்டனர்.

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை! அநேக ஆண்டுகளாக அல்லும் பகலும் அயராது சுதந்திரப் போரை நடத்திவந்த அயர்

லாந்தின் கோரிக்கைக்குப் பிரிட்டன் ஓரளவு இணங்கும் சமயத்தில், அயர்லாந்தின் ஒரு பகுதியான அல்ஸ்டர் மாகாணமே அதன் கண்ணைக் குத்தி ஐரிஷ் மக்களுக்குச் சனியனாக அமைந்தது. பிரிட்டிஷ் தாசர்களும், ஐரிஷ் சுதந்திர விரோதிகளும், கூலி பெற்றுத் துரோகம் செய்பவர்களுமான அல்ஸ்டர் தலைவர்கள் ஐரிஷ் பார்லிமெண்டு அமைவதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்தத் துரோகிகள் ஜெர்மனியிலிருந்து திருட்டுத்தனமாகப் போர்க் கருவிகளைத் தருவித்து யுத்தத்துக்குத் தயாராயினர். எனவே உள்நாட்டு யுத்தம் எந்த வினாடியில் ஏற்படுமோ என்ற கலக்கம் உண்டாயிற்று. அல்ஸ்டர்காரர்களைச் சமாதானப் படுத்துவது போல் பிரிட்டிஷாரும் அவர்களுக்குச் சில சலுகைகள் அளித்தனர். ஆனால் அல்ஸ்டரைச் சேர்ந்தவர்கள் சமாதானத்துக்குத் தயாராக இல்லை. அவர்களின் நோக்கம் அயர்லாந்தைத் துண்டாடுவது என்று இருக்கும்போது, அவர்கள் சமாதானத்துக்கு வருவார்களா?



சர் ரோஜர் கேஸ்மெண்ட்

அத்தகைய தர்மசங்கடமான நிலைமையிலிருந்து தன்மீது குற்றம் இல்லாமல் தப்புவது எப்படி என்று பிரிட்டிஷார் சிந்திக்கலாயினர். அவர்களை அவ்வாறு தப்புவிக்க முதலாவது மகாயுத்தம் மூண்டது. ஐரிஷ் பார்லிமெண்டை அமைப்பதென்ற மசோதாவும் அந்தரகதியாயிற்று!

அவ்வளவுதான்; பிரிட்டிஷாரின் மேற்படி துரோகமானது அயர்லாந்து மக்களைத் துடிக்கச் செய்தது. பிரிட்டனுடன் அயர்லாந்து தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று அதற்கு முன் நினைத்தவர்களும், பிரிட்டனுடன் உள்ள தொடர்பை அறவே கத்தரித்துக் கொண்டு விடவேண்டும் என்ற ஸின்பீன் கட்சியினரை முழுமனதுடன் ஆதரிக்கலாயினர். அதுதான் சமயம் என்று ஜெர்மனியர் அயர்லாந்து மக்களுக்கு யுத்த தளவாடங்கள் கொடுத்து உதவ, ஐரிஷ் ஜனங்கள் சர் ரோஜர் கேஸ்மெண்ட் என்ற பிரபல தலைவரின் தலைமையில் ஐரிஷ் தலைநகரான டப்ளினில் மகத்தான புரட்சியை ஆரம்பித்தார்கள். அதன் காரணமாக ஐரிஷ் தெருக்களில் உதிர வெள்ளம் ஓடியது. இரு கட்சியிலும் ஏராளமானவர்கள் பலியாயினர். எனினும் பிரிட்டிஷ் இராணுவ பலத்தை எதிர்த்து நிற்க முடியுமா? இறுதியில் ஐரிஷ் புரட்சி நசுக்குண்டது. அதன் தலைவர் சர் ரோஜர் கேஸ்மெண்ட் தூக்கு மேடையில் ஏறி வீர சொர்க்கம் அடைந்தார்.

அருமைத் தலைவரை இழந்த ஐரிஷ் மக்கள் அராஜகத் தீயில் குதித்து விளையாட முற்பட்டார்கள்! இணையற்ற உறுதியும் அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் படைத்த டி வேலரா மேற்படி அகோர கடமைக்குத் தலைமை வகித்தார். அந்த அராஜகத்தை அடக்கப் பிரிட்டிஷார் கையாண்ட முறைகளை "இருள் சூழ்ந்த பயங்கரப் படலம்" என்று பிரிட்டிஷ் சரித்திராசிரியர்களே வர்ணிக்கின்றனர் எனில், அதைக் கண்டித்து மேற்கொண்டு எதுவும் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை!

கடைசியாக 1921-ம் வருஷம் அயர்லாந்தில் ஐரிஷ் மக்களுக்காக ஐரிஷ் மக்களுடைய பார்லிமெண்டு ஏற்பட்டது. சுதந்திர பீடத்துக்குப் பலியாக அயர்லாந்து ஒரு கண்ணை இழந்தது. அதாவது அயர்லாந்து, வட அயர்லாந்து என்றும் தெற்கு அயர்லாந்து என்றும் துண்டாடப் பட்டது.

அதன் பின்னரும் அயர்லாந்தை உள்நாட்டுக் கலகங்கள் உருக்குலைத்து வந்தன. அந்நாடு துண்டாடப் பட்டதே அக் கலகங்களுக்குக் காரணமாகும். பின்னர் அயர்லாந்து டி வேலராவின் தலைமையில் தன்னைப் பிரிட்டனுடன் பிணைத்த ராஜவிசுவாசப் பிரமாணம் முதல் ஒவ்வொரு தளையாக அறுத்தெறிந்து, இன்று பிரிட்டிஷ் தொடர்பு அற்ற பரிபூரண சுதந்திரம் பெறும் தறுவாயில் இருந்து வருகிறது!

8. இந்தியா

1857-ம் வருஷம் இந்தியாவில் பிரிட்டிஷாரின் கொடுங்கோன்மை சகிக்க முடியாத கட்டத்துக்கு வந்தது. அதன் விளைவாக உள்ளூறக் குமுறிக் கொண்டிருந்த புரட்சி பூகம்பமும் பீறிட்டு எழுந்தது. இந்திய ஜன சமூகம் மிகவும் அமைதியாக இருந்து வருகிறது என்று ஆங்கிலேயர்கள் சந்தோஷம் அடைந்து வந்தனர். இந்தியத் துருப்புகளின் எஜமான விசுவாசத்துக்கு ஈடு கிடையாது என்று ஆங்கில இராணுவ அதிகாரிகள் மேற்படி துருப்புகளைத் தட்டிக்கொடுத்து

வந்தார்கள். அதே சமயம் இந்தியர்கள் உதைத்த காலை முத்தமிடும் கோழைகள் என்று அவர்கள் இரகசியமாகத் தங்களுக்குள் இகழ்ந்து கூறினர். ஆனால் இந்தியாவில் மூண்ட முதலாவது சுதந்திர யுத்தம் ஆங்கிலேயர்களைத் திக்பிரமை கொள்ளும்படி செய்ததுடன், அவர்கள் கண்டுவந்த கனவையும் தவிடுபொடியாக்கி விட்டது!

மேற்படி சுதந்திர யுத்தத்தைப் பற்றிய ஆச்சரியகரமான ஒரு விசேஷம் என்னவெனில், இந்திய தேச பக்தர்கள் பரந்த முறையில் செய்துவந்த யுத்த ஏற்பாடுகளையொட்டி ஆங்கிலேயர்கள் என்னவும் சந்தேகம் கொள்ளாமல் இருந்ததுதான். இந்தியத் தலைவர்கள் அவ்வளவு திறமையுடனும் இரகசியமாகவும் தங்களுடைய காரியங்களைச் செய்து வந்தார்கள்!

சகிக்க முடியாத அநீதியின் விளைவாக 1857-ல் மூண்ட தீ வானளாவ எரிந்தது. மீரத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் பாரத தேசம் எங்கும் சுதந்திரப் போர்த்தீயை மூட்டும் ஒரு நெருப்புப் பொறியாக அமைந்தது. அதன் விளைவாக அஷ்ட திக்குகளிலும் அக்னி ஜ்வாலைகள் சீறிக் கொண்டு கிளம்பின. புரட்சி பூகம்பத்துடன் இரத்தமாரியும் சேர்ந்து கொண்டது. பதினாயிரக் கணக்கான வீரர்கள் போர் புரிந்து வீர சொர்க்கம் எய்தினர்.

சுதந்திரப் போர் புரியும்படி இந்திய சிப்பாய்களைத் தூண்டி விட்டதற்காக மங்கள பாண்டே என்ற இளம் சிங்கத்தைப் பிரிட்டிஷார் தூக்கிலிட்டனர். முதலாவது சுதந்திர யுத்தத்தில் முதன் முதலாக தமது உயிரை அர்ப்பணம் செய்த அந்த வீரத் தியாகியை பாரத நாட்டு மக்கள் என்றென்றும் மறக்க முடியாது.

மங்கள பாண்டேயின் உதிரத்தினால் பாய்ச்சப்பட்ட சுதந்திர யுத்த விதை அதி சீக்கிரத்தில் முளை விட்டுச் செடியாகி மரமாகியது! மீரத்திலிருந்து இந்திய சிப்பாய்கள் "சலோ டில்லி" என்ற ஜயகோஷத்துடன் புறப்பட்டார்கள். அவர்களுடைய திடீர்த் தாக்குதலால் டில்லி நகரில் ஆங்கிலேயரின் ஆட்சி ஒழிந்து இந்தியரின் ஆட்சி ஏற்பட்டது!



யானை மீது நானா சாகிப்


டில்லி சுதந்திரம் பெற்றது என்ற செய்தி மின்னல் வேகத்தில் தேச முழுவதும் பரவியது. யாரும் எதிர்பாராத விதமாகத் திடீரென்று அந்தச் செய்தி கிடைத்ததால் அன்னியர்கள் மாத்திரமல்ல, இந்தியர்களும் பிரமித்துப் போயினர். அப்போது இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லார்டு கானிங், இந்தியா முழுதும் அமைதி நிலவி வருகிறது என்ற எண்ணத்துடன் கல்கத்தாவில் தூங்கிக் கொண்டிருந்தான். பிரதம தளபதி ஆன்ஸன் குளிர்ந்த சிம்லா மலையுச்சிக்குச் சென்று கொண்டிருந்தான். டில்லி ஆங்கிலேயர்களின் கையிலிருந்து நழுவி விட்டது என்ற தந்தியைக் கண்ட கானிங்கின் கலக்கம் தீர்ந்து அவன் சுய உணர்வு பெறுவதற்கு வெகு நேரம் ஆயிற்று!

வெற்றிக்கு அஸ்திவாரம்

முதலாவது சுதந்திரயுத்தம் இரண்டு வருஷகாலம் வரையில் வெகு உக்ரமாக நடந்தது. ஆங்கிலேயர்களை விரட்டியடித்து விட்டு இந்திய வீரர்கள் பல இடங்களையும் மீண்டும் கைப்பற்றினர். நேரடியான யுத்தத்தில் தோல்வியுற்ற ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி, துரோகம் என்ற இரண்டு பயங்கரமான ஆயுதங்களையும் பிரயோகிக்க முற்பட்டார்கள். அவர்கள் கூறிய ஆசை வார்த்தைகளை நம்பி சில சுதேச மன்னர்கள் தங்களுடைய சகோதரர்களையே காட்டிக் கொடுத்தனர்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காக டில்லி சக்கரவர்த்தி பகதூர் ஷாவும், இதர தேசபக்தர்களும் தங்களுடைய உயிரைத் துச்சமாக மதித்து உக்ரமாகப் போராடியபோது,—டில்லி இளவரசர்களான மிர்ஸா மொகல், மிர்ஸா கிஸிர் சுல்தான், மிர்ஸா அபு பேக்கர் இந்த மூன்று பாலர்களையும் ஹாட்ஸன் என்ற பிரிட்டிஷ் தளபதி இரக்கமின்றிப் படுகொலை செய்தபோது, — நீலன் என்ற மற்றொரு பிரிட்டிஷ் தளபதி பல அழகிய இந்திய நகரங்களையும் எரித்துப் பாழாக்கியபோது, ஹைதராபாத் நிஜாம் அப்ஸல் உத் தௌலா மாத்திரம் என்ன செய்து கொண்டிருந்தார் தெரியுமா? ஹைதராபாத்திலுள்ள பிரிட்டிஷ்

ஆகஸ்டு 15உ



"ஊர் எல்லாம் சுதந்திரத் திருநாள் கொண்டாடுகிறார்கள்; நீர் மட்டும் ஏன் இப்படி சோர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்?"

"எனக்கு இன்று சுதந்திரம் பறிபோன நாள்!"

"அது எப்படி?"

"சென்ற வருஷம் இந்தத் தேதியிலே தான் எனக்குக் கல்யாணம் ஆயிற்று!"

ரெஸிடென்ஸிக்கு நேரில் சென்று விழுந்து விழுந்து சலாம் செய்து பிரிட்டிஷாரிடம் தமது விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டார்!

எனவே யுத்தத்தின் ஆரம்பத்தில் வெற்றி யடைந்த வீர ராணி லக்ஷ்மி பாய், குமார சிம்மன், வீர கேசரி தாதியா தோபே, அலி முல்லாகான், மௌல்வி அகமது ஷா, குஜரான் சிங் போன்ற தேசபக்தர்கள் இறுதியில் பலியாயினர். நானா சாஹிப் கானகம் சென்று மறைந்தார். சக்கரவர்த்தி பகதூர் ஷா பிரிட்டிஷாரால் கைது செய்யப்பட்டு பர்மா சிறையில் உயிர் துறந்தார். முதலாவது சுதந்திர யுத்தத்தின் முன்னணி வீரர்களான அவர்கள் இந்திய சரித்திரத்தில் என்றும் அழியாத புகழிடம் பெற்றனர்; இந்தியர்களின் ஹிருதயத்திலும் நிரந்தரமான இடம் பெற்றனர்.

1848-ம் வருஷம் இத்தாலியில் ஏற்பட்ட மகத்தான சுதந்திரப் புரட்சி தோல்வி யடைந்தது. எனினும் அதன் பெருமை குன்றவில்லை. பின்னர் நடந்த சுதந்திரப் போரில் இத்தாலிக்குக் கிடைத்த மகத்தான வெற்றிக்கு அது அஸ்திவாரமாக அமைந்தது. அது போலவே இந்தியாவில் நிகழ்ந்த முதலாவது சுதந்திர யுத்தம், அதன் பின் தொண்ணூறு வருஷ காலம் வரையில் நிகழ்ந்த சுதந்திரப் போர்களுக்கும், இறுதியில் பாரதநாடு பெற்ற வெற்றிக்கும் அஸ்திவாரமாக அமைந்தது என்றே கூறவேண்டும்.

உலகத்துக்கு ஒரு புதுமை!

1944-ம் வருஷம் கிழக்கு ஆசியாவில் வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் ஆரம்பமான சுதந்திர யுத்தம், முதலாவது சுதந்திர யுத்தத்தின் தொடர்ச்சியே ஆகும். 1857ல் சுதந்திர யுத்தத்தை ஆரம்பித்த தேசபக்தர்கள் "சலோ டில்லி" என்று கோஷம் செய்து கொண்டே புறப்பட்டார்கள். நேதாஜி போஸின் தலைமையிலும் இந்திய தேசிய வீரர்கள் அதே கோஷத்துடன்தான் புறப்பட்டனர்.

இம்பால் போர் முனையில் அந்த வீரர்கள் வீழ்ச்சி யடைந்தபோது, நேதாஜியால் உபதேசிக்கப்பட்ட 'ஜெய் ஹிந்த்' என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே வீர சொர்க்கம் அடைந்தனர். 1857-லும், 1944-லும் போர் முனையில் இந்திய தேசபக்தர்கள் வீழ்ச்சியுற்றார்களெனினும், அவர்களுடைய இலட்சியம் இறுதியில் வெற்றி பெற்றது! அதுவும் சந்திர சூரியர் உள்ளளவும் உலகம் முழுதும் கொண்டாடக் கூடிய விதத்தில் அந்த இலட்சியம் வெற்றி பெற்றது!

இது வரையில் உலகிலுள்ள பல நாடுகள் அடிமை வாழ்வைத் தகர்த்து எறிந்து சுதந்திரம் பெற்றுள்ளன. ஆனால் பலாத்கார யுத்தம் புரிந்து பகைவர்களை வெட்டி வீழ்த்தியே அவைகள் சுதந்திரம் பெற முடிந்தது. இந்தியாவோ மகாத்மா காந்தியின் தலைமையில் கத்தியின்றி, இரத்தமின்றி, சகல நவீன ஆயுதங்களுடனும் கூடிய வல்லரசை எதிர்த்து நின்று, அடிமை வாழ்வைத் தகர்த்து எறிந்து, சுதந்திரத்தை ஸ்தாபித்தது!

மகாத்மா காந்தியின் தலைமையில் நடந்த சாத்வீகப் போர் ஏழு உலகிலும் அன்றும் இன்றும் என்றும் கண்டிராத அதிசயமாகும். இவ்வாறு ஆயுதமற்ற அறப் போரில் தான் பாரதநாடு வெற்றி பெற்று பாரெங்கும் போற்றப்பட வேண்டும் என்பது எல்லாம் வல்ல இறைவனின் சித்தமாக இருக்கும்போது, அதற்குமுன் இந்திய தேசபக்தர்கள் நடத்திய பலாத்காரப் போர் தோல்வியுற்றதைக் குறித்து நாம் வருந்துவதற்கு என்ன இருக்கிறது?

ஜய பாரத சமுதாயம் வாழ்கவே!

முற்றிற்று.

[illegible]

இன்று நினைத்துக் கொண்டாலும் எல்லாம் நேற்று நடந்ததைப்போல் தோன்றுகின்றன. சின்னஞ் சிறிய சிட்டிப் பாவாடையைக் கட்டிக்கொண்டு குதித்துக் குதித்து மரத்தடியில் விளையாடிய அந்தக் காலம் என்ன? தலை வாரிப் பின்னிக் கொண்டு நுனியில் தொங்கும் 'ஜடைக் குச்சு' இரண்டு பக்கமும் மாறி மாறி இடையில் இடித்துக்கொண்டிருக்க, 'பாண்டி' ஆடிக்கொண்டு தோழிகளுடன் சண்டை போட்ட காலம் என்ன? முகத்திலே பெருமை பொங்கி வழிய அப்பாவிடம் நான் அன்றைய ஆட்டத்தில் ஜயித்ததைப் பற்றிச் சொல்லும்போது, அப்பா தான் எவ்வளவு சந்தோஷம் அடைவார்!...... இன்று என்னைப் பார்க்கும்போது ஒரு காலத்தில் அப்படியெல்லாம் இருந்தவள் என்று யாராலும் சொல்ல முடியுமா?

என்னுடைய கையிலிருந்த கண்ணாடியில் தோன்றிய முகம் மேற்கண்ட விதமாக என் யோசனையை வெகு தூரம் இழுத்துச் சென்றது. முப்பது வயதுக்குரிய குடும்ப பாரம் சுமந்ததற்கு அறிகுறியான நிதானப் பார்வை, அடக்கத்தின் களை, நெற்றியில் குங்குமம், புதிதாக முளைத்த இரண்டொரு இள நரை மயிர்கள் எல்லாம் சேர்ந்து பெண்மையின் அழகை எடுத்துக் காட்டின. மேற்கண்ட விதமாக, என் ஸ்திரீ லட்சணத்தின் பாதி எல்லையைக் கடக்க முயன்று கொண்டிருந்த என் உருவத்தைப் பார்த்தபடி அன்று நான் யோசனையில் ஆழ்ந்திருந்தேன்.

"என்ன, உஷா! காப்பிகூடக் கொண்டு வராமல் பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டாயே!" என்று கேட்டுக் கொண்டே என் கணவர் முதுகுப்புறமாக வந்து, என்னுடைய முகத்தருகே தம்முடைய முகத்தைக் கொண்டு வந்தார். எனக்கு வெட்கம் தாங்கவில்லை. "பகலில் யாராவது பார்க்கப் போகிறார்கள்; பேசாமலிருங்கள்!" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன். என் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

'ஆண்கள் பெண்களின் இளமைப் பருவத்தைத்தான் விரும்புவார்கள். வயதாகி விட்டால் வேறு பெண்களின் மீதுதான் அவர்களுடைய கவனம் செல்லும்' என்று சொல்கிறார்களே, அது என் விஷயத்தில் எவ்வளவு பிசகாய்ப் போய்விட்டது! அவர் பெண்மையை என்றும் போற்றுகிறாரே தவிர, தூற்றுவதில்லை. ஒரு நாள் — ஏன், ஒரு நிமிஷம் கூட அவர் என்னை வெறுத்து ஒரு வார்த்தை சொன்னதில்லை. அப்படிப்பட்ட உத்தமருக்கு நான் ஒரு காலத்தில் செய்த அபசாரத்தை இன்று நினைக்கும்போது என்னுடைய நெஞ்சு பிளந்துவிடும் போலிருக்கிறது.





ருக்மணி

நான் பிறந்தது மலையாள தேசத்தில். அப்பா அங்கு ஏதோ உத்தியோகத்திலிருந்தார். நான் அப்பாவுக்கு ஒரே பெண்ணானதால் அளவற்ற செல்வாக்கில் வளர்ந்து வந்தேன். மலையாளத்தின் வளமை மிக்க இயற்கை வனப்பு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடும். மாலை வேளையிலே கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டு சமுத்திரக் கரைப் பக்கம் போய் விடுவேன். அங்கிருக்கும் ஒரு பாறையின் மேல் உட்கார்ந்து என்னை மறந்து புத்தகத்தில் ஆழ்ந்து விடுவேன். இதெல்லாம் என் கலாசாலைப் படிப்புக்குப் பிறகுதான்.

சில சமயம் நான் வீணையுடன் சென்று கடற் பாறையின் மீது உட்கார்ந்து

இரண்டாவது பரிசுக் கதை 3



கொண்டு நாதம் இசைப்பதுண்டு. அப்போது என்னை மறந்து என்னுடைய உள்ளம் என் கணவனைத் தேடிச் சென்றுவிடும். என் பிற்கால மன்மதன் — ஆம், அவர் மன்மதனாகத் தான் வரவேண்டும் என்று நான் அப்போது நினைத்தேன். நல்ல ரோஜா நிறம்; அதற்கேற்ற உயரம், பருமன்; முகத்திலே இளமையின் களை, உதட்டிலே புன்சிரிப்பு; இந்த லட்சணங்கள் கொண்ட உருவமே என் மானசீகக் கணவர்.

இந்நிலையில் அப்பா என்னுடைய கல்யாண விஷயமாக அடிக்கடி எங்கெங்கேயோ போய்க் கொண்டிருந்தார். கடைசியில் ஒரு நாள் அவர், "பையன் முந்நூறு ரூபாய் சம்பளத்தில் ஏதோ ஒரு உத்தியோகத்தில் இருக்கிறானாம். திருவனந்தபுரம்தான் சொந்த ஊராம். என்றைக்காவது ஒரு நாள் அவன் தற்செயலாக வந்து உன்னைப் பார்க்கப் போகிறானாம்!" என்றார்.

மயிலுக்கு மந்தாரமான வானத்தைக் கண்டால் ஆனந்தம் தலைக்கேறி ஆடத் தொடங்கி விடும் என்பார்கள். அது பொய்யோ, நிஜமோ எனக்குத் தெரியாது. ஆனால் அன்று என்னமோ அந்த மந்தாரப் பொழுதும், சிலுசிலுத்த காற்றும் என்னைப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டன. மேக வர்ணச் சிற்றாடை அணிந்து, தலை மயிரை நன்றாக வாரி விட்டு, நெற்றியில் குங்குமத்தை இட்டுக்கொண்டு கையில் வீணையுடன் கடற்கரைக்குச் சென்றேன். என்ன தான் அடக்கி வாரியிருந்தாலும் தலைமயிர் கட்டுக் கடங்காமல் நெற்றியில் விழுந்து புரண்டது. வழக்கம் போல் அங்கிருந்த பாறையின் மேல் உட்கார்ந்தேன். என் உள்ளம் ஏனோ படபடவென்று அடித்துக் கொண்டது. இதயத்திலும் அமைதியில்லை; அது எதையோ வரவேற்பது போல் அலைந்து கொண்டிருந்தது. நான் வீணையை எடுத்து மீட்டினேன்.

டிங், டிங்......

இந்த நாதம் என் இதயத்தையும் சேர்ந்து மீட்டியது. எதிரே பரந்த கடல், உயரே வானம், நடுவே காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. அலைகள் பாறையின் மேல் மோதி என் வருங்காலத்தை ஆரவாரத்துடன் வரவேற்றுக் கொண்டிருந்தன. நான் சுருதி சேர்த்துப் பாட ஆரம்பித்தேன்.

"......கூண்டுக் கிளியினைப்போல் தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்
வேண்டும் பொருளை யெல்லாம் மனது
வெறுத்து விட்டதடி......!"

என் மனம் ஏனோ அப்போது ரொம்பவும் சோர்ந்திருந்தது. உள்ளத்தில் ஏதோ கல்லைத் தூக்கி வைத்ததுபோல் கனமாக இருந்தது. அந்தச் சுமையிலிருந்து எழுந்த நாதம் என்னையும், கடலையும், வானத்தையும் ஒன்று சேர்த்தது. நான் எங்கே இருக்கிறேன் என்ற நினைவே எனக்கு இல்லை; என்னை மறந்து பாடிக் கொண்டிருந்தேன்.

"......பாயின் மிசை நானும்—தனியே
படுத் திருக்கையிலே
தாயினைக் கண்டாலும்—சகியே!
சலிப்பு வந்ததடி.........!"

இந்தச் சமயத்தில், "உஷா, உஷா!" என்று யாரோ என்னை இரைந்து கூப்பிடுவதுபோலிருந்தது. வீணையி லிருந்த விரலை எடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். என் முன்னே என் தந்தையும், அவரோடு ஒரு இளைஞரும் வந்து நின்று கொண்டிருந்தனர். மரியாதைக்காக நான் எழுந்திருக்க முயன்றேன். அந்த இளைஞர், "நீங்கள் எழுந்திருக்க வேண்டாம்; சிரமமில்லாமலிருக்குமானால் இன்னும் இரண்டு பாட்டுப் பாடுங்கள்!" என்றார்.

நான் அவர் யாராயிருக்கும் என்ற யோசனையுடன் அப்பாவையும் அந்த இளைஞரையும் ஏற இறங்கப் பார்த்தேன். நல்ல கறுப்பு நிறம்; ஆஜானுபாகு; ஆங்கிலப் பாணியில் அவர் உடை யணிந்திருந்தார். என்னுடைய திகைப்பை என் முகத் தோற்றத்திலிருந்து அறிந்து கொண்ட அப்பா, "இதோ பார், உஷா! இவர்தான் மிஸ்டர் ரங்கநாதன் எம். ஏ.!" என்றார். பிறகு அந்த இளைஞரின் பக்கம் திரும்பி, "இவள்தான் என் ஒரே பெண் உஷா!" என்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

அடுத்த நிமிஷம் அப்பாவின் முகத்திலே புன்முறுவல் பூத்தது. ஆனால் என் தேகமோ 'திடு திடு'வென நடுங்க ஆரம்பித்து விட்டது. ஏன்? அந்த ரங்கநாதன் எம். ஏ.க்குத்தான் என்னை மணம் செய்ய நிச்சயித்திருந்தார் என் அப்பா. நிச்சயித் திருந்தால் என்ன? அதற்கு ஏன் இந்த நடுக்கம்?

அதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. என் மானசீகக் கணவர் நல்ல சிவப்பு நிறம்; கோவைப் பழம் போன்ற உதடுகள்; கருத்த விழிகள்; என்னதான் வாரி விட்டாலும் அடங்காமல் முன் நெற்றியில் விழுந்து புரண்டு கொண்டிருக்கும் கருண்ட கேசத்தை அவர் தமது இடது கையினால் தூக்கிவிட்டுக்கொண்டு என்னைக் கம்பீரமாகப் பார்ப்பார்! அந்த மனமோகன உருவத்துக்குப் பதிலாக இப்பொழுது என் எதிரே நின்ற இளைஞரின் நிறத்தையும், உருவத்தையும் பார்த்ததும் என்னை என்னவோ செய்தது. கரங்கள் நடுங்கின; இதயம் 'டிக், டிக்' என்று அடித்துக் கொண்டது.

"உஷா! அவருடைய விருப்பப்படி ஏதாவது நல்லதாக இரண்டு பாட்டுப் பாடு!" என்றார் அப்பா. நடுங்கும் கரத்தில் வீணையை எடுத்து மீட்டினேன்.

"......நீல விழியும் வேல் உருவமும்
மீள வழியின்றி என்னுள் பாயுதே...!"

என்ற அடியைப் பாடும்போது என் உள்ளம் கரைந்து கண்களில் 'கலகல' வென்று நீர் வழிந்தது. என்னுடைய காதலை—ஆம், என் கற்பனை காதலைத்தான்!—நினைந்து நினைந்து நான் உருகினேன்.

வீட்டுக்கு வந்ததும் அவர் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போய் விட்டார். என் மனமோ கட்டுக்கடங்காமல் தவித்துக் கொண்டிருந்தது. அன்று இரவு மணி பதினொன்று இருக்கும். படுக்கையை விட்டு மெதுவாக எழுந்தேன். தயக்கத்துடன் அடிமேல் அடி [எடுத்து வைத்து அப்பாவின் அறைப் பக்கம் வந்தேன். அப்பா ஏதோ படித்துக்கொண்டிருந்தார். மெதுவாக "அப்பா!" என்றேன்.

"என்ன, உஷா! என்ன சமாசாரம், இந்த நடுநிசியில்?" என்று கேட்டார்.

நான் தயக்கத்துடன், "அப்பா! அவரை எனக்குப் பிடிக்கவில்லை!" என்றேன்.

"பிடிக்க வில்லையா! ஏன்?" என்றார் ஆச்சரியத்துடன்.


"அவர் கறுப்பாயிருக்கிறார், அப்பா!" என்றேன் மெதுவாக.

"அட, அசடே! நான் கூடக் கறுப்புதான். என்னை உன் அம்மா கல்யாணம் செய்து கொள்ள வில்லையா?" என்று கேட்டு விட்டு, அப்பா 'கட கட' வென்று சிரித்தார். நான் பேசாமல் என் அறைக்கு வந்து படுத்துக்கொண்டு விம்மினேன்.

2

கல்யாணம் முடிந்து நான் கணவன் வீட்டுக்கு வந்து விட்டேன். நானும் என் கணவரும் ஒரே வீட்டில்தான் வசித்





தோம். ஆயினும் எனக்கும் அவருக்குமிடையே எவ்வளவு தூரம்!

அன்று என் கணவர் கட்டிலின் மேல் உட்கார்ந்திருந்தார். நான் ஜன்னலருகே நின்று வான வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அறை மிகவும் நிசப்தமாக இருந்தது. அவர் மெதுவாக, "உஷா!" என்றார். நான் திரும்பிப் பார்க்கவில்லை.

"உஷா! என் உஷா!" என்றார் மீண்டும்.

அப்போதும் நான் அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால், அவர் கட்டிலை விட்டு இறங்கி மெதுவாக எனக்குப் பின்னால் வந்து கொண்டிருக்கிறார் என்பதைக் காலடி ஓசையிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர் என்னை நெருங்கி வந்து முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு "உஷா, என் மேல் கோபமா? ஏன் இப்படி நிற்கிறாய்? உட்கார்ந்து வீணையில் ஏதேனும் பாடு!" என்றார்.

மனதில் இருந்த சுமையுடன் மௌனமாக வீணையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு சுருதி சேர்த்துப் பாட ஆரம்பித்தேன்.

என் கணவர் என் முகத்தையே உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். நான் ஒரு முறை அவர் முகத்தைப் பார்த்து விட்டுச் சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டேன். உலகமே துக்க மயத்தில் இருப்பது போல் எனக்குத் தோன்றியது. எழில் நிறைந்த என் இதயக் கோயிலில் கருநிறமுள்ள ஒரு விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டதை நினைத்தபோது என்னுடைய நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. பாதியில் பாட்டை நிறுத்தி விட்டு வீணையின் மீது முகத்தை வைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதேன்.

திடீரென்று நிறுத்திய பாட்டையும், என்னுடைய விம்மலையும் கேட்ட என் கணவர், "உஷா, ஏன் பாட்டை நிறுத்தி விட்டாய்? ஏன்? ஏன்? — என்ன? என்ன?" என்று பதட்டத்துடன் கேட்ட வண்ணம் கட்டிலை விட்டு இறங்கி ஓடி வந்தார். கண்ணீரும் கம்பலையுமாயிருந்த என் முகத்தைத் தூக்கிப் பார்த்ததும் அவருக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, "உஷா, ஏன் அழுகிறாய்? உன்னை எந்தவிதத்தில் நான் வருத்துகிறேன் என்பதை எனக்குக் கூற மாட்டாயா?" என்றார். அப்போது அவருடைய கரிய கரங்களில் ஒன்று தாழம்பூ நிறத்தையொத்த என் கரத்துடன் இணைந்திருந்தது. இன்னொரு கை என் முகவாயைத் தொட்டுக் கொண்டிருந்தது. அந்த இருகரங்களுக்கிடையே இருந்த நிற வேற்றுமை காகத்துக்கும் கொக்குக்கும் உள்ள வேற்றுமையை எனக்கு நினைவூட்டியது.

இந் நிலையில் என் உள்ளம் அருவருப்பின் எல்லையைத் தாண்டிவிட்டது. என்னுடைய கரத்தில் இணைந்திருந்த அவருடைய கரத்தை உதறிவிட்டு 'விடு விடு' வென்று நடந்து சென்று அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன். பரந்த வெளி முற்றத்தில் குப்புறப் படுத்துக் கொண்டு விசித்து விசித்து அழுதேன். என் அழுகையின் எதிரொலி ஆகாயத்தைத் தொட்டது.

அவர் என் பின்புறமாக வந்து நின்று கொண்டார். "உஷா, இதோ பார்! நீ என்னை விரும்பவில்லை என்பதை நான் இப்போதுதான் தெரிந்து கொண்டேன். என் வாழ்நாளில் நான் செய்த முதல் தவறு இதுதான். உன்னுடைய மனப்போக்குத் தெரியாமல் நான் உன்னை மணந்து உன் வாழ்க்கையைப் பாழ்படுத்தி விட்டேன். அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். ஆயினும் என்னால் நீ எந்தவிதமான துன்பத்துக்கும் ஆளாக வேண்டியதில்லை. இனி உன் அனுமதியின்றி நான் உன்னைத் தொட மாட்டேன். உலகுக்கு மட்டும் நாம் தம்பதிகளாயிருப்போம்; உள்ளத்துக்கு வேண்டாம். நீ உன்னுடைய விருப்பப்படி உனக்குச் சந்தோஷமான எதையும் செய்துகொள். நான் ஆக்ஷேபிக்க மாட்

டேன். என்னுடைய தவறை மட்டும் தயவு செய்து மறந்து விடு!'' என்றார்.

அவர் இதைச் சொல்லும்போது அடிக்கடி அவருடைய குரல் கம்மியது. பிறகு மெதுவாக எழுந்து தம் அறைக்குப் போய் விட்டார். கர்வம் பிடித்த என் உள்ளம் அதற்காகக் கவலைப்படவில்லை. 'இந்த மட்டில் விடுதலை கிடைத்ததே!' என்று எண்ணி மகிழ்ந்தது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவர் என் கண்ணில் படுவதேயில்லை. எனக்கு என்னென்ன தேவையோ அவையெல்லாம் என் உத்தரவை எதிர்பாராமலே வந்து சேர்ந்தன. அவர் என் வாழ்க்கையில் குறுக்கிடாமல் தனியாகவே விட்டிருப்பது எனக்கு ரொம்பவும் உற்சாகமாக இருந்தது. அந்நகர் லேடீஸ் கிளப்புக்கு நான்தான் தலைவி; பெண்கள் முன்னேற்றச் சங்கத்திற்கு நான்தான் காரியதரிசி. இன்னும் எந்தவிதமான பெண்கள் சங்கங்களுக்கும் நானே தலைமை வகித்து என் பொழுதைச் சிறிதும் வீணாக்காமல் சதா காலமும் ஓடியாடி வேலை செய்து வந்தேன். வீட்டைப் பற்றியோ கணவனைப் பற்றியோ எனக்கு எந்தவிதமான கவலையும் இல்லை.

அன்று கிளப்பில் நான் பேசுவதாக ஏற்பாடாகி இருந்தது. அவசர அவசரமாக 'டிரஸ்' செய்து கொண்டு கீழே இறங்கி வந்து, ''டிரைவர், டிரைவர்!'' என்று கத்தினேன். டிரைவரும் இல்லை; 'ஷெட்'டில் காரும் இல்லை. ''கார் எங்கே போய் விட்டது?'' என்று அங்கிருந்த வேலைக்காரனை அதிகாரத்துடன் கேட்டேன்.

''ஐயாவுக்கு ஜுரம் அடிக்குதுங்க! டாக்டரை அழைத்து வரக் காரில் போயிருக்கிறாரு டிரைவரு!'' என்று சொன்னான் அவன். நான் தாமதிக்கவில்லை; ஒரு ரிக்ஷா வண்டியில் ஏறி வேகமாகச் சென்றுவிட்டேன். அன்று நான் பேசிய ''பெண்களும் கடமையும்'' என்ற பிரசங்கம் அருமையாக இருந்தது என்று ஏதோ ஒரு தினப் பத்திரிகையில் கூட வெளி வந்திருந்தது. அது மட்டுமா? அந்தப் பிரசங்கத்துக்காக எல்லோரும் என்னை மெச்சிக் கொண்டார்கள்.

3

நான் புக்ககத்துக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அப்பாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் நாளுக்குநாள் பலப்பட்டு வந்தது. அதற்காக என் கணவரை நேரில் கேட்டு அனுமதி வாங்கி விடுவதென்று மெதுவாக அவருடைய அறைக்குள் நுழைந்தேன்.

இந்த இரண்டு வருட காலத்தில் அவருடைய அறையில் நான் கால் எடுத்து



வைத்தது கிடையாது. இன்று புதிதாக அந்த அறைக்குப் போவது எனக்கு என்னவோ போலிருந்தது. இருந்தாலும் தயக்கத்துடன் சென்று மெல்ல எட்டிப் பார்த்தேன். அறையில் என் கணவர் இல்லை. என்ன செய்வதெனத் தெரியாமல் சுற்று முற்றும் பார்த்தேன்.

அறையின் எதிர்ச் சுவரில் லோகமாதா பாரததேவியின் திரு உருவப் படம் பெரிதாக மாட்டியிருந்தது. அதற்கு இரு பக்கங்களிலும் மகாத்மா, ஜவாஹர் முதலியோரின் உருவப்படங்கள் மாட்டியிருந்தன. ஒரு புறத்திலே புறாவிற்காகத் தன் சதையைக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் படம்; இன்னொரு புறத்திலே உலகத்திற்கு அஹிம்சையைப் போதித்த புத்த பகவான் திரு உருவம். இவற்றுக்கு மத்தியில், அவரை உதாசீனம் செய்து தள்ளிய இந்த அகங்காரப் பேயின் படம் பெரிதாக 'என்லார்ஜ்' செய்து மாட்டியிருந்தது. அதன்மேல் ரோஜா புஷ்பஹாரம் ஒன்று புத்தம் புதிதாகப் போட்டிருந்தது. அவரை வெறுத்துத் தள்ளிய இந்த மமதை பிடித்தவளுக்கா இவ்வளவு மதிப்பு?

அவ்வளவுதான்; என்னுடைய நெஞ்சில் ஆயிரம் தேள்கள் கொட்டியதைப் போன்ற வேதனை யுண்டாயிற்று. நான் அவரை எவ்வளவோ வெறுத்துங்கூட அவர் என் மேல் இவ்வளவு அன்புடன் இருக்கிறாரே!—இதை நினைக்க நினைக்க என் மூச்சு திணறிற்று. பித்துப் பிடித்தவள் போல் அந்த அறை முழுவதையும் ஒரு முறை பார்த்தேன். அவருடைய படுக்கை தாறுமாறாகக் கிடந்தது. 'கோட் ஸ்டாண்'டிலே அவருடைய சட்டை, கோட்டு முதலியவை யெல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன. இந்த அநாதரவான செய்கைகளெல்லாம் என்னால் தானே வந்தது......?

ஒரு நிமிஷம் காந்தி மகான் படத்தை உற்றுப் பார்த்தேன். 'நிறம் கறுப்பு என்பதற்காக அவரை அவமதித்தாயே, உன்னுடைய நிறம் ரோஜா புஷ்பம் போலிருந்து என்ன பயன்? மனிதர்களுக்கு வேண்டுவது அக அழகே தவிரப் புற அழகல்ல!' என்று அவர் சொல்வது போல் தோன்றியது. அடுத்த நிமிஷம் என் கணவரின் உருவப் படத்தை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொள்வதற்காக இரண்டடி நகர்ந்தேன். முடியவில்லை; மனதிலிருந்த உணர்ச்சிகள் உந்த, மார்பு 'பட பட' வென அடித்துக் கொள்ள, பக்கத்தில் கிடந்த என் கணவரது படுக்கையின் மேல் 'தொப்'பென்று விழுந்து மூர்ச்சையானேன்

எனக்கு நினைவு வந்தபோது அதே படுக்கையில் என் கணவரது மடியின் மேல் நான் தலைவைத்துப் படுத்திருப்பதைக் கண்டேன். 'சட்'டென்று லஜ்ஜையுடன் எழுந்திருக்க முயன்ற என்னை நோக்கி, "உஷா! உன்னுடைய உடம்புக்கு என்ன? — இப்போது எழுந்திருக்காதே; பேசாமல் படுத்துக் கொள்!" என்றார் என் கணவர்.

என்னால் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. கண்களில் கண்ணீர் வழிய அவருடைய கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு ரொம்பவும் அபராதம் செய்து விட்டேன் .....!" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தேன்.

"பைத்தியமா, உனக்கு? என்னென்னவோ பிதற்றுகிறாயே! நீ என்றும் என் உஷாதான்; வருத்தப்படாதே!" என்று என் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு அவர் சொன்னார்.

இருவரது கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பொழிந்தது. இப்போது அவருடைய நிறம் என் கண்ணில் படவில்லை; அவரது தூய்மையான உள்ளம்தான் என் கண்ணில் பட்டது. பொங்கி வந்த உணர்ச்சியைத் தாங்க மாட்டாமல் குழந்தையைப் போல் அவருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மினேன், விம்மினேன், விம்மினேன்—என் உள்ளச் சுமையும் செய்த பாவமும் கழியும் வரை விம்மினேன்!

• • •

நான் உள்ளே சென்று காப்பியைக் கலந்து கொண்டிருந்தபோது, "உஷா, காப்பிக் கொட்டைக்கு நீலகிரிக்கே போய் விட்டாய்போலிருக்கிறதே!" என்று சொல்லிக் கொண்டே என் கணவர் வந்தார். காப்பியை எடுத்து அவருக்கருகில் வைத்தேன். அதை எடுத்துக் குடித்துக் கொண்டே, "உஷா, இன்று நீ 'லேடிஸ் கிளப்'புக்குப் போகவில்லையா?" என்று கேட்டார். நான் "இல்லை" என்று தலையசைத்தேன்.


"ஏன், நீ சமூகத் தொண்டு செய்வதை விட்டுவிடலாமா? சாதாரணப் பெண்கள் போல் குடும்பத்திலேயே உழன்று கொண்டிருந்தால் உனக்கும் படிக்காத பெண்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார்.

"என் சமூகத் தொண்டு, பெண்கள் சங்கம், சிசு பரிபாலனம்—ஏன், என் உலகமே இதோ இருக்கிறதே!" என்று என் கணவரைச் சுட்டிக் காட்டினேன்.

சுயமாகவே

நேரம் காட்ட

● **No. 2323**
ஜீகர் லீகொல்ட்ரி தானே சாவி கொடுத்துக் கொள்ளும் அமைப்பு மாடல். ஸ்டீல் கேஸ், ஸ்வீப் செகண்டு முள், பளபளப்பான டயலுடன் கூடியது. ரூ. 300



● **No. 2233** ஜீகர் லீகொல்ட்ரி சாடபிரைட் ஷாக் ப்ரூபுடனும் டயதி துள்ளது போன்ற செகண்டு முள்ளுடனும் கூடியது ரூ.297

No. 2483 மெருகேறிய மாதிரி விலேயே உதிய செகண்டு முள்ளுடன் கூடியது. ரூ. 275

பாகுபாடறிந்து, கன்யமுள்ள ஆடவரும் பெண்டிரும் விரும்பும் பார்வைக்கு அழகாகவும் வருஷக் கணக்கில் நீடித்து நன்கு உழைக்கக் கூடியதுமான ஜீகர் லீகொல்ட்ரி யாரால் தயார் செய்யப்பட்ட இரண்டு கடிகாரங்கள் படத்தில் விளக்கப்பட்டுள்ளன.

FAVRE-LEUBA

பேவர் - லூபா & கம்பெனி லிமிடெட், பம்பாய் - கல்கத்தா

காலக்ஷேபம்

அற்புதம்!

பையன் (அவசரமாக ஒரு போட்டோ கம்பெனிக்குள் ஓடி வந்து):—

ஸார்! ஸார்! என் மாமாவை ஒரு மாடு துரத்திக் கொண்டு ஓடுகிறது. எப்படிப் போனாலும் தப்பவிடமாட்டேன் என்கிறது! வாருங்கள், அவசரம்! அவசரம்!

கம்பெனிக்காரர் (பரபரப்புடன்):—தம்பி, உன் மாமாவை மாடு துரத்தினால் அதற்கு என்னை என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?

பையன்:—எனக்கு உடனே இந்தக் காமிராவுக்குச் சரியான 'பிலிம்' சுருள் ஒன்று வேண்டும். அந்த அற்புதக் காட்சியைப் படம் எடுக்க வேண்டும். சீக்கிரம் கொடுங்கள்!

★

இது எப்படி?

நண்பன்:—என் அப்பா, என் மழைக் கோட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு போய் விட்டாயே? நல்ல மழையில் மழைக் கோட்டு இல்லாமல் நான் எப்படி வெளியே போவது என்று நினைத்துக் கொண்டாய்?

மற்றவன்.—உன் ஸூட்டைத்தான் நான் போட்டுக் கொண்டு போக வேண்டியிருந்தது. அது நனைந்து போய் விட்டால் நீ சண்டைக்கு வருவாயே என்று உன் மழைக்கோட்டைப் போட்டுக் கொண்டு போனேன்!

★

ஒப்புக்கொண்ட விஷயம்!

ஒரு பெரிய மனிதருக்கு உடம்பு சரியில்லாமலிருந்தது. என்னென்னவோ வைத்தியம் செய்து பார்த்தும் குணமாகிற வழியாயில்லை. அவர் மனைவி பிரபல டாக்டர்களை வரவழைத்து அவர்களிடம் தன் கணவரை வைத்தியப் பரிசோதனை செய்யும்படி கூறினாள்.



டாக்டர்களில் ஒருவர் (நோயாளியின் மனைவியைப் பார்த்து):- அம்மணி, நான், என் வைத்திய நண்பர்களான டாக்டர் பஞ்சாட்சரம், டாக்டர் ராமன, டாக்டர் பரஞ்சோதி, டாக்டர் அருள்நாதன் எல்லோரும் உங்கள் கணவரின் உடம்பைக் கவனித்துப் பார்த்தோம். உங்கள் கணவர் மிகவும் **கோடிய வியாதி**யினால் அவதிப்படுகிறார் என்பதை ஒருமுகமாக ஒப்புக் கொள்ளுகிறோம்.

★

நல்ல மதிப்புரை!

ஒரு நாடக டைரக்டர் புதிதாக எழுதப்பட்ட நாடகத்தை அந்த நாடகாசிரியரைக் கொண்டே படிக்கச் சொல்லிக் கேட்டார். நாடகாசிரியர் உணர்ச்சியுடன் நாடகத்தைப் படித்தார். அவர் படிக்க ஆரம்பித்ததும் டைரக்டர் தூங்க ஆரம்பித்து விட்டார். நாடகாசிரியர் பாதி நாடகத்தைப் படித்து விட்டார்.

நாடகாசிரியர்:—ஸார்! எப்படியிருக்கிறது நாடகம்? மேடையில நடிப்பதற்கு ஏற்றதுதானா?

டைரக்டர்:—இல்லை; என்னை மன்னிக்க வேண்டும். நாடகம் சுவாரஸ்யமாயில்லை!

நாடகாசிரியர் (கோபத்துடன்):—உங்களுக்கு எப்படி நாடகம் சுவாரஸ்யமாயிருக்கும்? நீங்கள் தான் தூங்கினீர்களே!

டைரக்டர்:—அதனால்தான் அவ்வளவு கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன்! நாடகம் சுவாரஸ்யமாயிருந்தால் தூக்கம் ஏன் ஐயா, வருகிறது?

★

சரிதான்!

ஒரு பெரிய மனிதர் புதிதாக ஒரு கார் வாங்க வேண்டுமென்று ஒரு மோட்டார் கம்பெனிக்குச் சென்றார். எத்தனையோ கார்களைப் பார்த்தார். ஆனால் ஒன்றுகூட அவருக்குத் திருப்திகரமாயில்லை. அலுப்படைந்து வீட்டுக்குப் போய் விட்டார். மறுநாள் அதே கம்பெனிக்கு வந்து ஒரு காரைப் பார்த்து வாங்கினார்.

கம்பெனிக்காரர்:—நேற்று அத்தனை நேரம் துருவிப் பார்த்தும் உங்களுக்கு ஒரு கார் கூடப் பிடிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு ஒரு நிமிஷத்தில் இந்தக் காரை வாங்கி விட்டீர்களே! அப்படி என்ன அந்தக் காரில் உங்கள் மனசை மாற்றும்படியாக விசேஷ அம்சம் இருக்கிறது?

பெரிய மனிதர்:—காரில் ஒன்றுமில்லை; என் மனைவியிடம்தான் இருக்கிறது. நேற்று வீட்டில் அவளுடன் யோசித்தேன். இன்று காரை வாங்கி விட்டேன்.

அருமை பெருமை அறிந்தவர்கள்
எப்போதும் ஸ்டேன்ஸ்

Stanes

தேயிலையையே விரும்புகிறார்கள்



ஸ்டேன்ஸ் ஆரஞ்ச பீகோவும் ஸ்பெஷல் ப்ளெண்ட் தேயிலையும் புதிதல்ல. குணத்திலும் மணத்திலும் தலைசிறந்து எல்லோராலும் விரும்பப்படுபவை. ஆரஞ்ச பீகோ 1, ½, ¼ பவுண்டு பாக்கட்டுகளிலும் 5 lb. பெட்டிகளிலும் கிடைக்கும். ஸ்பெஷல் ப்ளெண்ட் 1 பவு. பாக்கட்டுகளில்

தி யுனைட்டட் காபி சப்ளை கம்பெனி லிட்.

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிட்., கோயமுத்தூர்



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

43. பிரம்மசரியம்

போனிக்ஸ் ஆசிரமப் பண்ணையைத் தொடங்கியபோது காந்திஜி கூடிய சீக்கிரத்தில் அங்கே தாமும் போய் வசிக்க வேண்டும் என்ற மோகம் கொண்டிருந்தார். போனிக்ஸ் ஆசிரமத்தில் வசிக்கத் தீர்மானித்த ஒவ்வொருவருக்கும் மூன்று மூன்று ஏக்கரா நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அந்தந்த நிலத்தை அவரவர்களே உழுது பயிர் செய்ய வேண்டும் என்றும், சொந்த உடலுழைப்பைக் கொண்டு ஜீவனம் நடத்த வேண்டும் என்றும் திட்டம் போடப்பட்டது. காந்திஜியின் பங்குக்கு மூன்று ஏக்கரா நிலமும் ஒதுக்கப்பட்டது.

ஆனால் காந்திஜி போனிக்ஸ் பண்ணைக்கு நிரந்தரமாகக் குடிப் போகுதல் பின்னால் நிகழ்ந்த பல சம்பவங்களினால் முடியாததாயிற்று. ஆரம்பத்தில் ஆசிரமத்தை நல்ல முறையில் அமைக்கவும் "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகை நடத்தவும் பணம் வேண்டியதாயிருந்தது. மேலும் பாரிஸ்டர் தொழிலை இத்தனை நாளும் நடத்தி வந்து திடீரென்று நிறுத்துவதால் கட்சிக்காரர்கள் பலர் கஷ்டத்துக்குள்ளாக நேரிடும். ஆகையால் ஆரம்ப நாட்களில் சில காலம் போனிக்ஸிலும் சில காலம் ஜோகானிஸ்பர்க்கிலுமாக வசிக்கக் காந்திஜி உத்தேசித்தார்.


போனிக்ஸ் ஆசிரமப் பண்ணையை ஸ்தாபித்துவிட்டு ஜோகானிஸ்பர்க் போனதும் காந்திஜி மிஸ்டர் போலக்கைச் சந்தித்துப் புது ஏற்பாடுகளைப் பற்றிச் சொன்னார். தாம் கொடுத்த புத்தகம் இவ்வளவு பெரும் பயனை அளித்ததை அறிந்து மிஸ்டர் போலக் அளவிலாத மகிழ்ச்சியடைந்தார். தாமும் காந்திஜியின் புதிய சோதனையில் அவருடன் ஈடுபட விரும்புவதாகக் கூறினார். காந்திஜி சம்மதம் கொடுத்ததும் 'கிரிடிக்' பத்திரிகையில் தாம் பார்த்த உத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டுப் போனிக்ஸ் வந்து சேர்ந்தார். அவ்விடத்திய எளிய வாழ்வு போலக்குக்குப் பெரிதும் பிடித்திருந்தது. ஆனால் அவரும் அதிக காலம் அங்கே இருக்க முடியவில்லை. காந்திஜிக்குப் பாரிஸ்டர் தொழிலில் உதவி செய்து கொண்டிருந்த மிஸ்டர் ரிட்ச் என்பவர் இங்கிலாந்து போக வேண்டியதாயிருந்தது. அப்போது ஜோகானிஸ்பர்க்குக்கு வந்து தமக்கு உதவி செய்யும்படி போலக்கைக் காந்திஜி அழைத்தார். சீக்கிரத்தில் பாரிஸ்டர் தொழிலுக்கு மங்களம் பாடிவிட்டு இரண்டு பேருமாகப் போனிக்ஸ் ஆசிரமத்துக்கு நிரந்தரமாகப் போய் விடலாமென்று தெரிவித்திருந்தார்.

போலக் தங்கமான மனிதர். நண்பர்களிடம் நம்பிக்கை வைத்து விட்டால் வெறுமனே வாதம் செய்து கொண்டிராமல் அவர்களுடன் ஒத்துப் போக முடியும் சுபாவம் உடையவர். ஆகையால் காந்திஜிக்குப் பின்வருமாறு எழுதினார்:—

"போனிக்ஸ் வாழ்க்கை எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது. இங்கே சந்தோஷமாய்க் காலங் கழிக்கிறேன். பண்ணையை அபிவிருத்தி செய்யலாமென்ற நம்பிக்கையிருக்கிறது. ஆயினும் தற்சமயம் இதை விட்டுத் தங்கள் காரியாலயத்துக்கு வருவதால் நமது இலட்சியங்கள் விரைவில் கைகூடுமெனத் தாங்கள் கருதும் பட்சத்தில், அவ்வாறே செய்யத் தயாராயிருக்கிறேன்."

காந்திஜி முடிவாக எழுதியதன் பேரில் போனிக்ஸ் பண்ணையிலிருந்து போலக் ஜோகானிஸ்பர்க் வந்து அட்டர்னி தொழிலில் பயிற்சி பெறலானார். இதே சமயத்தில் மிஸ்டர் மாக்கின்டயர் என்னும் ஒரு ஸ்காத்லந்து தேசத்தவரையும் காந்திஜி வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

போனிக்ஸுக்கு விரைவிலேயே போய்க் குடியேறிவிட வேண்டும் என்ற ஆவலினு



ஹோட்டல் சிப்பந்தி:—ஏன் ஸார், உங்கள் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாரே, அவர் இலையை எங்கே காணோம்?

சாப்பிட்டுவிட்டுப் போகிறவர்:—ஓ, அதுவா! அவர் சாப்பிடும்போது ரேஷன் ரொம்பக் குறைந்து போனதைப் பற்றி வருத்தத்துடன் பேசிக்கொண்டே யிருந்தார். ஒருவேளை பசி அடங்காமல் இலையையும் சாப்பிட்டு விட்டாரோ, என்னவோ!

லேயே பாரிஸ்டர் தொழிலைக் காந்திஜி அதிகமாகக் கவனிக்கும்படி நேர்ந்தது.

போலக்கைக் காந்திஜி தமது வீட்டிலேயே வசிக்கும்படி கூறினார். இருவரும் ஒரு தாய் வயிற்றுச் சோதரர் போலப் பழகினார்கள். சில வருஷங்களுக்கு முன்பே போலக்குக்குக் கலியாணம் நிச்சயமாகி யிருந்தது என்பதைக் காந்திஜி அறிந்தார். அப்படியானால் கலியாணத்தை ஏன் இன்னும் நடத்தாமல் காலங் கடத்த வேண்டும் என்று கேட்டார் "இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்ட பிறகு கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்றார் போலக். இந்தக் காரணத்தை காந்திஜி ஒப்புக் கொள்ளவில்லை. "ரஸ்கினுடைய புத்தகத்தைப் படித்து அதிலுள்ள இலட்சியங்களை ஒப்புக் கொண்டுள்ள உங்களுக்குப் பணத்தைப் பற்றி என்ன கவலை? இதய ஒற்றுமை ஏற்பட்ட பிறகு பணம் இல்லை என்ற காரணத்துக்காகக் கலியாணத்தை ஒத்திப் போடுவது தவறு. பணம் இல்லை யென்பது கலியாணத்துக்கு ஒரு தடையானால் ஏழைகள் எப்படிக் கலியாணம் செய்து கொள்ள முடியும்? மேலும் நீங்கள் இப்போது என்னுடன் வசிப்பதால் வீட்டுச் செலவைப்பற்றிய கவலை இல்லை. ஆகையால் கலியாணத்தைத் தள்ளிப் போட எவ்வித நியாயமு மில்லை" என்றார் காந்திஜி. ஸிநேக தர்மத்தில் அபார நம்பிக்கை கொண்ட மிஸ்டர் போலக்கும் உடனே இங்கிலாந்தில் அவருக்காகக் காத்திருந்த பெண்மணிக்குக் கடிதம் எழுதினார். அவள் உடனே புறப்பட்டு வந்து சேர்ந்தாள். கலியாணத்தை ஆடம்பரங்களும் பணச் செலவும் இல்லாமல் செய்து முடிக்க எல்லாரும் ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். போலக் யூதர்; அவரை மணக்க வந்த பெண்மணி கிறிஸ்துவ மதத்தினள். ஆகையால் கலியாணத்தை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் பதிவு செய்ய வேண்டியதா யிருந்தது. பதிவு செய்வதற்கு மாப்பிள்ளைத் தோழராக யாராவது சென்று சாட்சிக் கையொப்பம் போட வேண்டும். இதற்குக் காந்திஜி தான் வரவேண்டும் என்று போலக் வற்புறுத்தினார்.

அவ்விதமே காந்திஜியும் சென்றார். ஆனால் விவாக ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் எதிர்பாராத தடை ஒன்று குறுக்கிட்டது. காந்திஜி மாப்பிள்ளைத் தோழனாக வந்திருப்பதைப் பார்த்துவிட்டு மணமகனும் மணமகளும் உண்மையான வெள்ளைக்காரர்கள் தானா என்று ரிஜிஸ்ட்ராருக்குச் சந்தேகம் வந்துவிட்டது! விசாரித்து உண்மையறியும் வரையில் விவாகப் பதிவைத் தள்ளிப் போட வேண்டும் என்று சொன்னார். காந்திஜி தமக்குத் தெரிந்திருந்த பெரிய உத்தியோகஸ்தரிடம் போய் அவரிடமிருந்து கடிதம் வாங்கிக் கொண்டு வந்த பிறகுதான் கலியாணம் பதிவு செய்யப்பட்டது.

முன்பின் தெரியாத ஓர் ஆங்கிலப் பெண் இப்போது காந்திஜியின் வீட்டில் வசிக்கலானாள். இதனால் எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை. காந்திஜி சொல்லுகிறார்:

"போலக் தம்பதிகளுடன் எனக்கு எப்போதேனும் வேற்றுமை நேரிட்டதாகவே ஞாபகமில்லை. மிஸ்ஸஸ் போலக்குக்கும் என் மனைவிக்கும் சிற்சில விதண்டாவாதங்கள் அவ்வப்போது நேரிடுவதுண்டு. ஆனால் அவை மிக ஒழுங்காக நடத்தப்படும் தனிக் குடும்பங்களிலும் நேரிடுபவையேயாகும். என் குடும்பமோ பல்வேறு சாதியாரும், பல்வேறு குணவிசேஷங்களை உடையவர்களும் சேர்ந்த கலப்புக் குடும்பம். நன்றாகச் சிந்தித்துப் பார்த்

தோமாயின், சாதி, இனம் என்னும் வித்தியாசங்கள் வெறும் கற்பனை என்பது விளங்கும். உண்மையில் மாந்தர் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே யாவோம்.''

போலக்கைக் கலியாணம் செய்து கொள்ளத் தூண்டியதுபோல் மிஸ்டர் வெஸ்ட் என்னும் ஆங்கில நண்பரையும் காந்திஜி விவாகம் செய்து கொள்ளத் தூண்டினார். அவரும் அவ்விதமே மணம் புரிந்து கொண்டார். இந்தத் தம்பதிகள் போனிக்ஸில் வசிக்கத் தொடங்கினார்கள்.

இந்திய நண்பர்கள் சிலருக்கும் காந்திஜி கலியாணம் செய்து வைத்தார்.

ஆனால் இப்படியெல்லாம் நண்பர்களுக்குக் கலியாணம் பண்ணி வைத்த காந்திஜி சில காலைக்கெல்லாம் தமது இல்வாழ்க்கையில் பரிபூரண பிரம்மசரிய விரதத்தைக் கடைப்பிடிப்பதென்று தீர்மானித்தார். இது எப்படி என்று பார்ப்போம்.

தென்னாப்பிரிக்காவில் இனிமேல் அமைதியான வாழ்க்கை நடத்தலாம் என்று காந்திஜி முடிவு செய்திருந்த சமயத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. நேட்டாலில் ஸுலூக்களின் கலகம் ஏற்பட்டது. ஆப்பிரிக்காவின் பூர்வீகக் குடிகளில் ஒரு இனத்தார் ஸுலூக்காரர். நாகரிகமும் அறிவு வளர்ச்சியும் இல்லாத சாதியார்தான். ஆயினும் அவர்கள் ஆப்பிரிக்கா காட்டுக்குரிய ஆதிக் குடிகள். அவர்கள் கலகம் ஆரம்பித்திருக்கிறார்கள் என்று இங்கிலீஷ்காரர்கள் கூறினார்கள். உண்மையில் 'கலகம்' என்று சொல்லக் கூடியதாக ஒன்றும் நடைபெறவில்லை. ஸுலூக்காரர் மீது ஒரு புதிய வரியை நேட்டால் சர்க்கார் விதித்தனர். அந்தப் புது வரியைக் கொடுக்க வேண்டாம் என்று ஸுலூத் தலைவன் ஒருவன் கூறினானாம்! வரி வசூல் செய்யப் போன சார்ஜண்ட் ஒருவன் ஈட்டியினால் குத்தப் பட்டானாம்! இந்தச் சம்பவங்களுக்கு நேட்டால் சர்க்கார் 'கலகம்' என்று பெயர் கொடுத்து விட்டார்கள். அந்தக் கலகத்தை அடக்குவதற்குப் படைகளையும் அனுப்பி வைத்தார்கள்.

முதலில் காந்திஜிக்கு மேற்படி கலகம் பற்றிய உண்மை விவரம் அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. ஆயினும் எந்த சர்க்காரின் கீழ் வாழ்கிறோமோ அந்த சர்க்காருக்கு அபாயம் வந்த காலத்தில் வலிய உதவி செய்ய வேண்டும் என்பது காந்திஜியின் கொள்கை. எனவே, ஸுலூக் கலகம் சம்பந்தமான போர் நிகழ்ச்சிகளில் காயம் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்ய இந்திய சேவைப் படை ஒன்றை அமைக்கத் தயார் என்று நேட்டால் கவர்னருக்குக் காந்திஜி கடிதம் எழுதினார். காந்திஜியின் சேவையை ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கவர்னரிடமிருந்து உடனே பதில் வந்தது. இவ்வளவு சீக்கிரம் பதில் வரும் என்று காந்திஜி எதிர்பார்க்கவில்லை யானாலும் வேண்டிய முன் ஏற்பாடுகளை யோசனை செய்து வைத்திருந்தார். போலக் தமது மனைவியுடன் சிறு வீடு ஒன்றுக்குக் குடி போனார். ஸ்ரீமதி கஸ்தூரிபாயையும் குழந்தைகளையும் போனிக்ஸ் பண்ணைக்குக் காந்திஜி அனுப்பினார். ஜோகானிஸ்பர்க் வீட்டையும் காலி செய்து வீட்டுச் சொந்தக்காரனிடம் ஒப்புவித்தார். பிறகு டர்பனுக்குச் சென்று இருபத்துநாலு இந்தியர் அடங்கிய சேவைப் படை ஒன்றை அமைத்தார். இந்த சேவைப் படையின் தலைவர் என்ற முறையில் காந்திஜிக்கு 'ஸார்ஜெண்ட் மேஜர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

கலகப் பிரதேசத்துக்குப் போய்ச் சேர்ந்தபோது உண்மையில் அங்கே பெரிய கலகம் ஒன்றும் நடைபெறவில்லையென்று காந்திஜி கண்டார். ஆனால் சர்க்கார் படைகளின் கடுமையான நடவடிக்கைகளினால் ஸுலூக்கள் பலர் காயம் பட்டுக் கிடந்தனர். அவர்



பிளாக் மார்க்கெட் பேய்:—நீங்கள் யார் என்று தெரியக்கில்லையே?

பஞ்சப் பேய்:—நான்தான் பஞ்சம்; என்னை அடையாளம் தெரியவில்லையா, என்ன?

பி. பே.:—அடே, பஞ்சமா! என்னடா இப்படித் துரும்பா இளைக்கப் போயிட்டே?

ப. பே.:—எல்லாம் உங்கள் தயவுதான்!

களுக்குச் சிகிச்சை செய்யும் பணிதான் காந்திஜிக்கும் அவருடைய சகாக்களுக்கும் கிடைத்தது. இது காந்திஜிக்கு ஓரளவு திருப்தி யளித்தது. அந்தத் திக்கற்ற அநாதை ஸுலூக்களுக்குப் பணிவிடை செய்யக் கடவுளே பார்த்துத் தம்மை அனுப்பியதாகக் காந்திஜி கருதினார். காயம் பட்ட ஸுலூக்களும் தங்களைக் கவனித்து உதவி புரிவதற்குக் காந்திஜி தம் சகாக்களுடன் வந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

சுற்றிலும் வேலிக் கம்பி போட்டுத் தாற்காலிகமாக வைத்தியசாலை அமைக்கப்பட்டிருந்தது. அதில் காந்திஜியும் அவருடன் வந்தவர்களும் ஸுலூக்களுக்குப் பணிவிடை செய்தபோது வேலிக்கு வெளியில் வெள்ளைக்கார ஸோல்ஜர்கள் நின்று அவர்களைப் பரிகசித்தார்கள். 'ஸுலூக்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டாம்' என்றும் சொல்லிப் பார்த்தார்கள். இது ஒன்றும் பலியாமற் போகவே ஸுலூக்களைத் திட்டினார்கள்.

காந்திஜி அந்த வெள்ளைக்கார ஸோல்ஜர்களுடனும் கலந்து பழக ஆரம்பித்த போது அவர்களுடைய மனப்பான்மை மாறியது. கர்னல் ஸ்பார்க்ஸ், கர்னல் வைலி என்னும் இராணுவ உத்தியோகஸ்தர்கள் காந்திஜியைச் சந்தித்து அவருடைய சேவைக்காக வந்தனமும் கூறினார்கள். இவ்விருவரும் ஏற்கெனவே டர்பனில் காந்திஜிக்கு விரோதமான கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவர்கள்.

சர்க்காரை எதிர்த்தவர்களைத் தவிரச் சந்தேகத்தின் பேரில் பல ஸுலூக்கள் கைது செய்யப்பட்டுக் கசையடி கொடுக்கப் பட்டிருந்தார்கள். கசையடியினால் உண்டாகியிருந்த புண்களுக்குக் காந்திஜி சிகிச்சை செய்ய நேர்ந்தது.

இதுமட்டு மல்லாமல் 'கலகப் பிரதேச'த்தில் அடிக்கடி நெடுந்தூரப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. கலகத்தை அடக்கச் சர்க்கார் குதிரைப் படை அனுப்பியிருந்தனர். அந்தப் படையைப் பின் தொடர்ந்து காயம் பட்டவர்களைப் பல்லக்கில் வைத்துச் சுமந்து கொண்டு தினம் நாற்பது மைல் வரையில் காந்திஜி கால் நடையாகப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அது கலகமும் அல்ல; கலகத்தை அடக்கும் யுத்தமும் அல்ல; வெறும் மனித வேட்டைதான் என்று காந்திஜி இப்போது நன்கு உணர்ந்திருந்தார். தினந்தோறும் குற்றமற்ற ஜனங்களின் குடிசைகளில் வெள்ளைக்கார ஸோல்ஜர்கள் துப்பாக்கி வெடி தீர்க்கும் சத்தத்தைக் கேட்பது காந்திஜியின் மனத்துக்குப் பெரும் வேதனை யளித்தது. ஆயினும் காயமடைந்த ஸுலூக்களுக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி ஆறுதல் பெற்றார்.

* * *

கள்ளங் கபடற்ற 'அநாகரிக' ஸுலூக்களின் குடிசைகள் குன்றுகளிலும் பள்ளத் தாக்குகளிலும் வெகு தூரத்துக்கு வெகு தூரம் சிதறிக் கிடந்தன. இத்தகைய வழிகளில் காந்திஜி நடந்து செல்கையில் அவருடைய உள்ளம் சிந்தனை செய்துகொண்டிருந்தது.

இம்மாதிரி மனித குலத்துக்குச் சேவை செய்வதே தமது வாழ்வின் பிரதான இலட்சியமாயிருக்கவேண்டும் என்று எண்ணினார். அப்படி முழு நேரமும் மக்களுக்குத் தொண்டு புரிவதிலேயே கழிக்க வேண்டுமானால் குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டே போவதில் பயனில்லை யென்றும் இல்லறத்திலேயே இனிமேல் பிரம்மசரியத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் தோன்றியது. இல்வாழ்க்கையின் சிற்றின்பத்தில் ஈடுபடுவது ஆத்ம சாதனத்துக்குத் தடையாகும் என்ற கருத்து காந்திஜி மனதில் சில காலமாக இடம் பெற்றிருந்தது. அதோடு, குடும்ப சம்ரக்ஷணையிலும் குழந்தைகள் பெற்று வளர்ப்பதிலும் அதிகம் ஈடுபட்டால் மனித குலத்துக்குத் தொண்டு செய்ய நேரும் சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று இப்போது அவருக்குத் தோன்றியது.

நீண்ட யோசனைகளின் பயனாக இனிமேல் வாழ்நாள் முழுவதும் பிரம்மசரியத்தைக் கடைப் பிடிப்பது என்று விரதங் கொள்ளத் தீர்மானித்தார்.

* * *

ஒருவாறு 'கலகம்' அடக்கப் பட்டது. காந்திஜிக்கு நேட்டால் கவர்னர் வந்தனக் கடிதம் எழுதி இனி அவரும் அவருடைய சகாக்களும் சேவைப் படையைக் கலைத்து விட்டு வீட்டுக்குப் போகலாம் என்று தெரியப்படுத்தினார்.

காந்திஜி போனிக்ஸ் போய்ச் சேர்ந்ததும் கஸ்தூரிபாய் அம்மையிடமும் மற்றும் தமது அத்தியந்த சகாக்களான சகன்லால், மகன்லால், வெஸ்ட் ஆகியவர்களிடமும் தமது கருத்தைத் தெரிவித்து விட்டு, இனி முழுதும் பிரம்மசரியத்தைக் கடைப பிடிப்பதாக விரதம் எடுத்துக் கொண்டார். இன்னும் சில சகாக்களும் அவ்விதமே விரதம் எடுத்துக் கொண்டார்கள்.

காந்திஜியின் வாழ்க்கையில் இந்தச் சம்பவம் 1906-ம் ஆண்டில் நடந்தது.



அரண்மனை மாடியில் ராஜகுமாரி மிகவும் சோர்வுடன் ஆழ்ந்த யோசனை செய்து கொண்டிருந்தாள். அவள் கையில் நோட்டுப் புஸ்தகமும் பென்சிலும் இருந்தன. கணக்குப் போடுவதற்குத்தான் அவள் அப்படி வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள். கணக்கில் அவள் மனம் சென்றால்தானே !


"கணக்குப் போடுவது என்றாலே எனக்குப் பிடிக்கவில்லை; ஒரே தலைவலியா யிருக்கிறது. நேற்று வந்தானே அரண்மனைக்கு, மந்திரவாதி! அவன் நினைத்த சாமான்களையெல்லாம் வரவழைத்துக் காட்டினானே! அவன் செய்த வித்தைகளையெல்லாம் நினைக்க நினைக்க ஆச்சரியமா யிருக்கிறது. இந்தப் பாழாய்ப்போன கணக்கைப் போட்டுக் கொண் டிருப்பதைவிட அவன் செய்த வித்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!"—இப்படி நினைத்துக் கொண்டே ராஜகுமாரி ஜன்னல் வழியாகக் குனிந்து பார்த்தாள். கீழே அரண்மனை வாசலுக்கு அருகில் ஒரு சின்னப் பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு சின்ன நோட்டுப் புஸ்தகம் இருந்தது. அந்தப் பெண் அதில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்க்க ராஜகுமாரிக்கு ஆச்சரியமா யிருந்தது. அவளிடம் பேச விருப்பம் கொண்டு மாடியிலிருந்து இறங்கிக் கீழே வந்தாள்.

ராஜகுமாரி வந்ததைக் கூடக் கவனியாமல் அந்தச் சின்னப் பெண் ஏதோ எழுதிக்கொண்டே யிருந்தாள்.

"பெண்ணே, நீ யார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள் ராஜகுமாரி.

உடனே அந்தச் சிறுமி சிரித்துக் கொண்டே, "ராஜகுமாரியே, நான் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறேன். கணக்குப் போடுவதென்றால் எனக்கு ரொம்ப ஆசை. மந்திரவாதியிடம் நான் வேலைக்கு அமர்ந்தது முதல் அவன் வேலையைச் செய்வதற்கே எனக்கு நேரம் சரியாயிருக்கிறது. ஆனால் அவனிடம் ஒரு மந்திரம் கற்றுக் கொண்டிருக்கிறேன். அந்த மந்திர சக்தியினால் ஒரு நிமிஷத்தில் எந்தக் கணக்காயிருந்தாலும் போட்டு விடுவேன்!" என்று சொன்னாள்.

இதைக்கேட்ட ராஜகுமாரிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "பெண்ணே, நீ கொஞ்ச நேரம் என் உடைகளை அணிந்து கொண்டு இங்கேயே இரு. நான் உன் உடையை அணிந்து கொண்டு மந்திரவாதியிடம் போய் அந்த மந்திரத்தை நானும் கற்றுக் கொண்டு வருகிறேன். அப்புறம் எனக்கும் கணக்குப் போடும் தொந்தரவே இருக்காது!" என்று கூறி உடையை மாற்றிக்கொண்டாள்.



உடனே ராஜகுமாரிக்கு ஒரு சந்தேகம் தோன்றியது.

"பெண்ணே, மந்திரவாதி என்னைப் பார்த்து விட்டு 'நீ யார்?' என்று கேட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள் ராஜகுமாரி.

அதற்கு அந்தப் பெண், "ராஜ

குமாரி, நீ பயப்படாதே! பார்ப்பதற்கு நீ என்னைப் போலவே இருக்கிறாய். மந்திரவாதி சொல்லுகிற படி மந்திரப் புஸ்தகங்களையும் மந்திரக் கோல்களையும் சரியாக எடுத்து வைத்தால் போதும். அவன் ஒன்றும் சொல்ல மாட்டான். அங்கிருக்கும் மந்திரப் புஸ்தகங்களுக்குள் பெரிய மந்திரப் புஸ்தகம் ஒன்று இருக்கிறது. அதைப் பார்த்துக் கணக்குப் போடும் மந்திரத்தைத் தெரிந்து கொள்ளலாம்!" என்றாள் அந்தப் பெண்.



உடனே ராஜகுமாரி தைரியத்துடன் மந்திரவாதியின் வீட்டுக்குச் சென்றாள். அங்கே ஒருவரையும் காண வில்லை. ஆனால் அந்த மந்திரவாதியின் அறை திறந்தே யிருந்தது. அவனது மந்திரக் கோல்களும் மந்திரப் புஸ்தகங்களும் இருந்தன. புஸ்தகத்தை மிகவும் ஆவலுடன் ராஜகுமாரி பிரித்துப் பார்த்தாள். அதில் கல்லை 'எப்படி ஜிலேபியாக மாற்றுவது?' என்பது பற்றிக் கொட்டை எழுத்துக்களில் எழுதியிருந்தது. ராஜகுமாரிக்கு ஜிலேபி என்றால் மிகவும் பிரியம். ஆகவே அந்த மந்திரத்தைக் கவனித்துப் பார்த்தாள்.

"சிவப்பு மந்திரக்கோலை எடு. பிறகு நாற்பது கற்களைப் பொறுக்கி வரிசையாக மேஜையின்மீது வை. ஒவ்வொரு கல்லின்மீதும் மந்திரக் கோலினால் ஐந்து முறை தட்டு. பிறகு கற்களின் மீது எத்தனை தடவை தட்டு கிறாயோ அத்தனை தடவை கறுப்பு மந்திரக் கோலினால் பூமியில் தட்டிய வுடன் கற்கள் அவ்வளவும் ஜிலேபியாக மாறிவிடும்!" என்று அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்தது.

ராஜகுமாரிக்குத்தான் கணக்கு சரியாக வராதே! 'ஒவ்வொரு கல்லின் மீதும் ஐந்து தடவை தட்டினால் நாற்பது கற்களுக்கு மொத்தம் நூற்றைம்பது தடவையாகத் தானிருக்கும்' என்று தீர்மானித்துத் தட்டினாள். உடனே ஒரு எதிர்பாராத வேடிக்கையான சம்பவம் நிகழ்ந்தது. தவறாகக் கணக்குப் போட்டதனால் நாற்பது கற்களும் ஜிலேபியாக மாறுவதற்குப் பதிலாக நாற்பது பெரிய தவளைகளாக மாறின. அந்தத் தவளைகள் அறையைச் சுற்றிச் சுற்றி வந்து கத்தின. ராஜகுமாரியைப் பயம் பிடித்துக் கொண்டது. உடனே அவள் ஒன்றும் புரியாமல் மந்திரப் புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்தாள். தவளைகளோ ஒரு நிமிஷமாவது அவளை நிம்மதியாக இருக்க விட வில்லை; ஓயாமல் ஒழியாமல் கத்திக் கொண்டே யிருந்தன. நெடு நேரம் புத்தகத்தைப் புரட்டியபிறகு, கடைசியில் தவளைகளைக் கண்ணாடிப் பாத்திரங்களாக மாற்றுவதற்கு அதில் ஒரு மந்திரம் எழுதியிருந்தது. ராஜகுமாரி அந்த மந்திரத்தைச் சொன்னதும் தவளைகள் கண்ணாடிப் பாத்திரங்களாக மாறி விட்டன. பிறகு ஒன்றோடொன்று மோதி நொறுங்கின.

இதனால் ராஜகுமாரியின் கால்களில் கண்ணாடித் துண்டுகள் பட்டுக் காயங்கள் ஏற்பட்டன. "போதும், போதும்! மந்திரவாதி வருவதற்குள் இவ்விடத்தை விட்டு அரண்மனைக்குப் போனால் போதும்!" என்று சொல்லிக் கொண்டே ராஜகுமாரி அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அது மந்திர நாற்காலியாதலால் உயரப் பறந்து ராஜகுமாரியின் விருப்பப்படி அரண்மனையை நோக்கிச் சென்றது. ஆகாயத்தில் போகும்போது ராஜகுமாரிக்குப் பயமாயிருந்தது.

அரண்மனைக்குப் போனவுடன் ராஜகுமாரிக்கு ஒரு ஆச்சரியம் காத்துக் கிடந்தது. அந்தச் சிறுமியைக் காண வில்லை; அவளுக்குப் பதிலாக அங்கே மந்திரவாதி நின்றுகொண்டிருந்தான்!

"ராஜகுமாரியே, உனக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் சிறுமியாகத் தோன்றினேன். கணக்கு இல்லாமல் உலகத்தில் ஒரு காரியமும் நடக்காது. ஆகையால் சிரத்தையாகக் கணக்கைக் கற்றுக் கொள்!" என்று கூறிவிட்டு மந்திரவாதி மறைந்துவிட்டான். ராஜகுமாரி இப்போதெல்லாம் கணக்குப் போடக் கஷ்டப்படுவதே யில்லை.

வட்ட மேஜை

தியாகராய நகர், சென்னை
8—8—48

உட்கார ஒரு இடம்!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

சிறிது சிரத்தையும் கவனிப்பும் இருந்தால், எத்தனையோ அசௌகரியங்களை போக்கிப் பொது ஜனங்களுக்குச் சௌகரியத்தையும் வசதியையும் அளிக்கலாம் நம்முடைய அரசாங்கம். ஒன்றுமில்லை, இன்றைய ரயில்வே ஸ்டேஷன்களில் எத்தனை பெரிய ஜங்ஷனானாலும் சரி, பட்டிக்காட்டு ஓட்டைப் பெட்டி ஸ்டேஷனானாலும் சரி — பிளாட்பாரத்தைப் பாருங்கள், உட்கார்ந்திருக்கச் சரியானபடி இடம் உண்டா?

புழுதியும் மண்ணும் மண்டிக் கிடக்கும் பிளாட்பாரத்திலே மூட்டை முடிச்சுகளுடன், கீழ அசுத்தத்திலே அமர்ந்து, சாய்ந்து படுத்தும் புரளும் நாஜூக்கான பிரயாணிகள். இதனிடையே ஈயும் எறும்பும் வேட்டையாடும் பலவிதத் தின்பண்டங்கள் விற்பவர்கள். நினைக்கவே குடலைக் கலக்கும் காட்சிகள்! இவற்றைச் சகித்துக் கொண்டு நிற்க வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில், அநேகமாக ரயில் ஸ்டேஷனுக்கு வந்து சேர்வதென்ற பேச்சே இல்லை. அதற்காக மணிக் கணக்கில் பிரயாணிகள் காத்துக் கிடந்து நின்று கடுப்பும் கால்வலியும் அடைவதுதான் மிச்சம்.

எத்தனை தான் வரிமேல் வரி விதிக்கப்பட்டாலும், எவ்வளவுதான் திண்டாடி மண்டை கலங்கிய போதிலும், பொதுஜனங்கள் ரயில் பிரயாணம் செய்யத் தவறுவதில்லை; 'டிக்கட்' வாங்காமல் இலவசமாக ரயிலில் போவதுமில்லை. இப்பேர்ப்பட்ட சாதுவான பொது ஜனங்களைப் புறக்கணிக்கலாமா? அவர்களுடைய சௌகரியத்தைக் கொஞ்சமாவது கவனிக்க வேண்டாமா? பிரமாதமாக சகல வசதிகளும் கொண்ட கண்ணாடி, மெத்தை, டைனிங் ஹால், ரேடியோ உள்ள வண்டிகள் வரப் போகின்றன என்கிற கோட்டை கட்டி அற்ப சந்தோஷமடையத் தயாராக இல்லை பொது மக்கள். அவை வரும்போது வரட்டும். அதற்குள், சற்றுக்கு வெளியே, பிளாட்பாரத்தில் பிரயாணிகளைக் காத்து நிற்க வைக்காமல், உட்காரப் போதிய வசதியை அளிப்பதில் அரசாங்கம் முனைந்தால் பொதுஜனம் எத்தனையோ நன்றி பாராட்டும்.

பு. வெ. சுப்ரமண்யம்.

ஸைதாப்பேட்டை, மதராஸ்
11—8—48

குழாயடியில் நடக்கும் கொடுமை

"கல்கி" மாமா அவர்களுக்கு.

என் போன்ற சிறுமிகளுக்கும், உங்கள் வட்டமேஜையில் கலந்து கொள்ள இடமுண்டு என நினைக்கிறேன். இந்த ஊரில் ஒவ்வொரு தெருவிலும் பிரத்தியேகமான குழாய் வைக்கப்பட்டிருக்கிறது. சில வீடுகளில் குழாயுண்டு. பல வீடுகளில் குழாய் கிடையாது. ஆதலால் யாவரும் தெருக் குழாயில்தான் ஜலம் பிடிக்கவேண்டியிருக்கிறது. சமையலுக்கும், குடி நீருக்கும், இந்த ஜலமே வேண்டியிருக்கிறது. குழாயடியில் வந்திருப்பவர்களில் பலர் மற்றவருடன் சண்டைபோட்டு, "வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்" என்பதற்கேற்ப எப்பாடு பட்டாகிலும் தண்ணீர் பிடித்துச் செல்கின்றனர். ஆனால் என் போன்ற சிறுமிகளின் பாடுதான் திண்டாட்டமாய் விடுகிறது.

வெகுநேரம் காத்திருந்து எங்கள் முறை வரும்போது குழாயே நின்று விடுகிறது. வீட்டில் குடிக்கக் கொஞ்சம்கூட ஜலமில்லை என்று அம்மா சொல்லி விடுகிறாள். அப்பாவுக்கு ஆபீஸ் போக நாழியாகி விடுவதால், அவர் ஜலம் சாப்பிடாமலே போகவேண்டியிருக்கிறது. குழாயடியில், நீண்ட நேரம் ஜலத்திற்காகக் காத்துக்கொண்டு வெய்யிலில் நிற்பதால் தலைவலியும், கால்வலியும் வருவதுதான் மிச்சம்! ஜலம் மேலும் கிடைப்பதில்லை. என்றுதான் இக்கஷ்டம் தீருமோ?

கி. ஸ்வர்ணம்.

பட்டக்காரன்பாளையம்
11—8—48

இதுவா நூல் கண்ட்ரோல்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

எங்கள் ஊரில் குடியிருப்பவர்கள் அனேகரும் நெசவாளிகள். தற்சமயம் ஆலையிலிருந்து வெளிவரும் நூலை சர்க்கார் முடக்கி விட்டபடியால் நெய்வதற்கு எங்குமே நூல் கிடைப்பதில்லை. கொஞ்சம் நூல் வைத்திருக்கும் கடைக்காரர்களோ வாய் கூசாமல் அதிக விலை சொல்லுகிறார்கள். ஈரோட்டில் நூல் கிடைக்காமல் திருப்பூருக்குப் போனேன். நான் நெய்து வைத்திருந்த வெள்ளைப் 'பீஸ்'களையும் விற்பனைக்காக எடுத்துக்கொண்டு போயிருந்தேன். திருப்பூர் ஸ்டேஷனிலிருந்த போலீஸ்காரன் என் மூட்டையைப் பார்த்து விட்டுக் கூப்பிட்டான்; நானும் சென்றேன். உடனே அவன் என் மூட்டையை அவிழ்த்துப் பார்த்துவிட்டு "இதென்ன, மில் துணி போலிருக்கிறதே! எங்கிருந்து வாங்கினாய்? நட போலீஸ் ஸ்டேஷனுக்கு!" என்று மிரட்டினான். 19-ம் நெ. நூலினால் நெய்த 'பீஸ்' துணிக்கும் மில் துணிக்கும் உள்ள வித்தியாசம் அவனுக்குத் தெரியவில்லை. மத்தியில் இருந்தவர்கள் சமாதானம் செய்த பின்பேரில் அந்தப் போலீஸ்காரன் இரண்டு ரூபாய் வாங்கிக்கொண்டு போய்விட்டான். எனக்கு அவைகளில் கிடைக்கும் லாபமே மூன்று ரூபாய்தான். எப்படியிருக்கிறது நூல் கண்ட்ரோல்!

சர்க்கார் இதை உடனே கவனித்து என் போன்ற ஏழை நெசவாளிகள் உயிர் வாழ ஆவன செய்வார்களா? அளவுக்கு மீறிய நடவடிக்கைகள் எடுத்திருந்தும் ஆலைகளி

விருந்து எத்தனையோ நல் பேர்கள் வெளி யேறுவதைச் சர்க்கார் அறிவார்களா?

ந. இராமசாமி.

பெரியகுளம்
8—8—48

ஆவன செய்யுமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

வெள்ளையர்கள் வெளியேறிய பின்னும், வின்னுயர் இமயமும் விந்தியமும் சொண்ட நமது சுதந்திர நாட்டில் பல விந்தையான பாதகச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. சுதந்திர நாட்டின் நகரங்களிலிருந்து கொண்டு சில கம்பெனிகள் வேலையின்றித் தவிப்போர்க்கு வேலை வாங்கித் தருவதாகப் பத்திரிகைகளில் தான் தவறாமல் பிரசாரம் செய்து வருகின்றன.

பணத்தைக் கொண்டுபோய்க் கொட்டி விட்டுப் பரீட்சையில் தேர்ச்சி யடைந்த பின்னர், வேலையின்றி ஆலையில் அகப்பட்ட கரும்புபோல அல்லலுறும் பலர் அவ்விளம் பரங்களைக் கண்டவுடன், அதன் மூலமாவது வேலை கிடைக்கும் என்று எண்ணி ஆர்வத் துடன் அக் கம்பெனிகளுக்கு விண்ணப்பம் செய்கின்றனர். உடனே ஐந்து ரூபாய் அனுப்பினால் வேலை தரப்படும் என்று உத்தரவு வருகிறது. வாழ்க்கையில் துன்பமுள் வாழும் பலர் எப்படியோ பலவிதத் துன்பங்களுக்கிடையே ஐந்து ரூபாய் அனுப்பி வைக்கின்றனர். பெற்றுக்கொண்டதற்காக ரசீது மட்டும் உடனே தவறாமல் வந்துவிடுகிறது. ஆனால்..... ஆனால், என்ன ஆனால்? அதன் பின் வேலையைப் பற்றி விவரம் எதுவும் தெரிவிப்பதில்லை. பல நாட்கள், பல மாதங்கள் சென்ற பின்னும் எச் செய்தியும் அக் கம்பெனிகளிடமிருந்து வருவது கிடையாது.

இப்படிப்பட்ட கம்பெனிகளுக்கும் சூதாட்டக் கம்பெனிகளுக்கும் என்ன வித்தியாசம்? "இரேஸ் பிஸின்" வைத்துச் சூதாட்டம் நடத்திய வருக்கு 25 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதென சமீபத்தில் ஒரு செய்தி வெளி வந்தது. அதே போன்று ஏன் இத்தகைய கம்பெனிகளை அரசாங்கத்தார் கண்டிக்கக் கூடாது? வேலையின்றி விருப்பற்ற வாழ்க்கையில் புண்பட்ட உள்ளத்தோடு உழல்கின்ற பலருக்கு இக்கம்பெனிகளின் செய்கை கூரிய வேல் கொண்டு பாய்ச்சுவது போல் இருக்கின்றன. இம்மாதிரிக் கம்பெனிகளை நாட்டில் அழிய வேண்டியது அவசியமும் அவசரமுமான செய்கை. அரசாங்கம் ஆவன செய்யுமா?

ஆ. சுப்புராயலு.

ஆலங்குளம்
11—8—48

கடன் தொல்லை தீருமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

எங்கள் ஊரில் மழையும் இல்லை; தண்ணீரும் இல்லை; வேறு எவ்வித நீர்ப்பாசன வசதியும் கிடையாது. ஓர் ஒரு மாறுமாரிக் குளம் உண்டு. அதை நம்பியே வேளாண்மையும் நடந்து வருகின்றது. பயமோ, நஷ்டமோ, மன உறுதி இழக்காது. கிராமவாசிகள் பூமியைக் குடைந்தாவது தண்ணீரைக் கொண்டு வந்து, அல்லும் பகலும் உழைத்து வருகின்றனர். வறுமையும் கடனும்தான் அவர்கள் கண்ட பலன்.

'சந்தை வட்டி' என்றொரு கொள்ளை முறை இங்கு பழக்கத்தில் இருந்து வருகிறது. அதன்படி ஒரு ரூபாய்க்கு, ஒரு வாரத்திற்கு ஒரு அணா வட்டி வீதத்தில், பணம் வைத்திருப்பவர்கள் விவரம் தெரியாத விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கின்றனர். பின்னர் எப்படியாவது வேட்டையாடி வட்டியைக் கறந்து விடுகின்றனர்.

மேற்படி சந்தை வட்டியின்படி கடன் கொடுப்பவன், கடன் படுபவனிடம் 'வாக்குறுதிப் பத்திரம்' வேறு எழுதி வாங்கிக் கொள்கிறான். 50 ரூபாய் கடன் என்றால் 100 ரூபாய் அசல் என்று பத்திரம் எழுதப் படுகிறது.

இந்த மாய வலையில் அதிக கல்வி அறிவில்லாத விவசாயிகள் விழுந்து, பணத்தை இழந்து, வாழ வழியின்றி வாடி நிற்கின்றனர். பல குடும்பங்கள் நிர்மூலமாகி விட்டன. இந்த நிலைமை, பொதுவாகக்




சங்கீத வித்வான் மனைவி:—'உங்களிடத்தில் பாட்டுக் கற்றுக் கொள்ள வருகிற சிஷ்யர்களுக் கெல்லாம், வேஷ்டி தோய்க்கக்காரன் கன்றாய் வருகிறது. உங்களுடைய சிஷ்யர்கள் உருப்படுவதேது?

சங்கீத வித்வான்:—அதென்ன அப்படிச் சொல்கிறாய்? முன்னே என்னிடம் எட்டு வருஷம் கிட்டே கற்றுக் கொண்டு போனானே, அவன் இப்போ என்ன செய்கிறான் தெரியுமா?

சங்கீத வித்வான் மனைவி:—என்ன செய்கிறான், சொல்லுங்கள்?

சங்கீத வித்வான்:—வண்டி வைத்துப் பெரும் பணக்காரனாகி விட்டான்!

★ இந்த இதழில் வெளியாகியிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் திருவையாறு நகர் பு. வெ. சுப்ரமணியம் அவர்கள் எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப்பட்டது.



பிரபல திருமணம்

புதுக்கோட்டை ஸ்ரீ எஸ். வெங்கடசுப்பிரமணிய ஐயர் புதல்வி சௌபாக்யவதி ராஜராஜேஸ்வரிக்கும் ஈரோடு அட்வகேட் ஸ்ரீ இ. என். தண்டபாணி ஐயரின் குமாரன் சி. ஆர். சி. சுப்பிரமணியனுக்கும் சென்ற மாதம் பதினாறாந் தேதியன்று தூத்துக்குடியில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமண வைபவத்துக்குப் பல பிரமுகர்கள் விஜயம்செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. வாழ்க, சுப்ரமணியம்—ராஜராஜேஸ்வரி!

கிராமங்கள் தோறும் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

இத்தகைய கயவர்களின் மண்டையில் அடித்து ஏழை மக்களைக் காப்பாற்றுவது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய காரியமாகும். 'நில அடமான பாங்கிகள்' இருக்கின்றன; ஆனால் பெரும்பான்மையான பேர்களுக்கு அவ்விவரம் தெரியாது. தெரிந்திருந்தாலும் அங்கு பணம் கிடைப்பது சுலபம் அல்ல. அவ்வித 'பாங்கி'களும் தொலைவிலேயே இருக்கின்றன. விவசாயிகளின் கடன் தொல்லை எப்பொழுதாவது தீருமா? அவர்கள் வாழ்வு ஓங்குமா?

நா. பாக்கியமுத்து.

சென்னை
11—8—48

பாதசாரிக்கு ஆபத்து!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

ராயப்பேட்டைக்கோ அல்லது மயிலாப்பூருக்கோ டிராமில் செல்லும் மக்கள் வெளாலாஸ் தோட்டத்திலிருந்து 'மதராஸ் கிளப்' வரையில் டிராம் சுவர் ஓரத்தில் எவ்வளவு நெருக்கமாகப் போகின்றது என்பதை அறிந்திருப்பார்கள். பாதசாரிகள் மாலையில் நிழலுக்காகச் சுவர் பக்கமாக நடந்து செல்லுவார்கள். அப்பொழுது டிராம் வந்து விட்டாலோ சுவருக்கும் டிராமிற்குமிடையில் நிற்கப் போதிய இடமில்லை. அந்தச் சுவர் வரையில் உட்பக்கம் மதராஸ் கிளப்பைச் சார்ந்தது. பொதுமக்கள் சௌகரியத்திற்காக நகர பரிபாலன சபையார் சுமார் பத்து அடி நிலம் வாங்கித் தெருவோடு சேர்த்தால் தெரு அகலப்படுவதுடன், மக்கள் பயமின்றி நடந்து செல்ல வசதியும் செய்தவராவர். இக்குறையைக் கவனிப்பார்களா?

அ. வைத்தியலிங்கம்.

திருவல்லிக்கேணி
9—8—48

தேவஸ்தானம் கவனிக்குமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

சென்னைப் பட்டணத்தில் மயிலாப்பூர் பிரசித்தி வாய்ந்தது. அங்கு வசிப்பவர்கள் பாக்யசாலிகள் என்பதுடன் புண்ணியம் செய்தவர்கள் என்பதுகூட என் அபிப்பிராயம். காரணம் கபாலீசுவரர் அங்கு குடிகொண்டிருப்பதுதான்! கோபுர தரிசனம் பாப விமோசனமல்லவா?

ஆஹா! புதுப்பிக்கப் பெற்றுப் பூரணப் பொலிவுடன் — கும்பாபிஷேகமும் செய்யப் பெற்று வானளாவி நிற்கும் — மேகம் பதுமைகள் கொண்ட கோபுரத்தின் உயர்வை என்னென்று உரைப்பது?

இத்தகைய கவர்ச்சிகரமான — புண்யம் நிறைந்த கோவிலுக்கு எதிரிலுள்ள தெப்பக்குளமோ......? கேட்பானேன்! பாசி மிகுந்து பார்க்க, அருவருப்பாக இருக்கிறது. சிலர் அதில் குளிக்கப் போய் பாசியைப் பூசிக் கொள்கிறார்கள் அதுவும் தற்பொழுது. குளத்தின் நீர் கலங்கிப் பாசி குழம்பாகி வருவது கண்கூடு. மேலும் பாசி நாற்றக் கூடவே கலந்த மாசிலைக் காற்று குளத்தின் மகிமையை இன்னும் அதிகப்படுத்துகிறது.

இவ்விஷயத்தில் தேவஸ்தானம் கொஞ்சம் அக்கறை கொண்டு, குளத்திலுள்ள பாசிக் குழம்பை நீக்கி குளத்தைத் 'தூர்' எடுத்தும் புது மழைத் தண்ணீர் குளத்தில் நிரம்பும்படியான மார்க்கத்தைச் செய்ய வேண்டும்.

கே. ருக்மணி நடராஜன்.

மணலூர்ப் பேட்டை
1—8—48

பெண் பாடசாலையில்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

மணலூர்ப் பேட்டை போர்டு பெண் பாடசாலையில் உள்ள ஆசிரியைகள் ஒருவருக்கொருவர் தினம் தகராறும் சச்சரவுகள் செய்து கொண்டும், ஆபாசமாகப் பாடசாலையில் மாணவிகளுக்கு எதிரில் பேசிக்கொண்டும் பாடசாலை நடைமுறையைக் கவனிக்காமல் சுமார் மூன்று மாதங்களாய் நடந்து வந்தது. அதன் பேரில் பிர்க்கா காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி அவர்கள் ஜில்லா போர்டாருக்கும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கும் இவ்விஷயத்தை போன மாதம் தந்தி மூலம் தெரிவித்து உடனே விசாரித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஒருவிதமான நடவடிக்கையும் காணாததால் கிராமப் பொதுஜனங்களால் இவ்விஷயமாய் ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. கிராம மக்கள் கோடை விடுமுறையிலாவது இதற்கு அதிகாரிகள் விசாரணை செய்வார்கள் என எதிர்பார்த்தனர். ஒன்றும் நடைபெறவில்லை.

கடைசியாக 7-8-48-ல் திருக்கோவிலூர் ரேஞ்சு இன்ஸ்பெக்டரவர்கள் வந்து மகஜரில் கையொப்பம் செய்தவர்களிடமும், பெற்றோர் சங்கத் தலைவர், கிராம பிரமுகர்கள், ஆசிரியைகள் முதலியவர்களிடம் ஸ்டேட்மெண்டுகள் வாங்கிச் சென்றார். அதற்குப் பிறகு இதுவரை ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக் கிராமப் பெண்கள் பாடசாலைக்குச் செ

விடப்படும் தொகை சரியான வழியில் பயன்படவும் இனிமேலும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

என். டி. லக்ஷ்மிபதி.

குண்டக்கல்
7—8—48

உயரம் போதாதா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களுடைய வட்ட மேஜையில் என்னைப் போன்ற 'உயரம் இல்லாத' வாலிபர்களுக்கும் இடம் உண்டு என்று நினைக்கிறேன். என் வீட்டில் எல்லோரும் என்னைப் பார்த்து எங்கேயாவது 'வேலை செய்து தொலையேண்டா!' என்று சொல்லுகிறார்கள். எனக்கு நல்ல திடமான சரீரம். எந்த வேலை கொடுத்தாலும் கஷ்டப்பட்டுச் செய்வேன். ஆனால் ரயில்வேயில் எனக்கு வேலை இல்லை என்று சொல்லி விட்டார்கள். காரணம், ஐந்து அடி உள்ளவனை ரயில்வேயில் எடுத்துக்கொள்ள மாட்டார்களாம். என்னைப்போல் ஐந்து அடி உயரம் உள்ள எத்தனையோ வாலிபர்களை உயரம் இல்லை என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். என்னைப்போல் ஐந்து அடி உயரம் உள்ள வாலிபர்களை ஹைதராபாத் எல்லையில் கொண்டு போய் நிறுத்தினாலும் அந்த ரஸாக்கர்களையும் எதிர்த்து வெற்றி அடைவோம். ஆதலால் என்னைப் போன்ற வாலிபர்களைச் சோம்பேறி யாக்காமல் சர்க்கார் வேலை கொடுத்துக் காப்பாற்றுவார்களா?

எம். வி. நித்தியானந்தம்.

பொள்ளாச்சி
10—8—48

விளக்கு வருமா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தென் இந்தியாவில் மிகப்பெரிய சந்தையுடன், வியாபார முக்கியத்வம்பெற்று விளங்கும் பொள்ளாச்சி நகரின் ரயில்வே ஜங்ஷனில் போதிய விளக்கு வசதிகள் இல்லை. இரவு நேரங்களில் டிக்கட்டுகள் வாங்குமிடத்திலும், பாலத்தின் (Over Bridge) வழியாக பிளாட்பாரம் சென்று வண்டியில் ஏறும்போதும், ஜங்ஷனில் வண்டி மாற்றும்போதும், பிரயாணிகள் அநேக கஷ்டங்களையும், இடைஞ்சல்களையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இங்கு மின்சார வசதிகள் இருந்தும், ஏனோ ஜங்ஷனில் மின்சார விளக்குகளின் அவசியம் பற்றி பல பொதுநல ஸ்தாபனங்கள் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருந்தும், மேற்படி குறைகள் இன்னும் நீக்கப்படாமல் இருக்கின்றன.

தற்போது, தென் இந்திய ரெயில்வே ஜெனரல் மானேஜர் மின்சார வசதியுள்ள முக்கிய ஸ்டேஷன்களில் மின்சார விளக்குகள் போடப்படும் என்று அறிவித்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த சந்தர்ப்பத்தில், மேற்படி கஷ்டங்களை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன், இன்னும் காலதாமதம் செய்யாமல் தேவையான ஏற்பாடுகள் செய்து இவ்வூர் ஜங்ஷனுக்கு மின்சார விளக்குகள் போடும்படி வற்புறுத்த வேண்டியது மிகவும் முக்கியமும் அவசியமுமாகும்.

ராமஸ்வாமி.

திருச்சி
15—8—48

நிலைத்து நிற்கட்டும்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் மகிழ்ந்தருளிய 'கல்கி சுதந்திர மலரை' வாங்கி படித்தேன்: படித்து வெகுவாக அநுபவித்தேன். நான் மகிழ்ந்து நினைத்த நினைப்பிலிருந்து முளைத்த கவிதையை "கல்கி" மலருக்கு வாழ்த்தாக அனுப்புகிறேன்.

"மலர்கள் என்பன பற்பல உண்டு
மாறுபட்ட நிறமு மணமும் உண்டு
நறுமணம் வீசும் நல்ல மலர்கள்
மறுகணத்திலே மகிமை குன்றும்
'கல்கி' என்ற கற்பகத் தருவாம்
விதவிதமாக நறுமணங் கொண்டு
'சுதந்திர மலரை' சுமுகமாய் அளிக்கும்.

கண்ணினும் இனிய சுதந்திரத் திருநாளில் இந்தியா அடைந்த சுதந்திரம் ஊழி ஊழி காலம் நிலைபெற்று விளங்க, அன்னை பராசக்தியை வணங்கி நிற்கும்,

ப. சி. தேவராஜன்.

யாரை மறந்தான்?

மாம்பலத்திலிருந்து சென்னைக்குப் போகும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும், "ஒரு பாரீஸ்" என்று சோமுவின் வாய் அவனை அறியாமலே கூறிவிடும். அவன் கையும் பர்ஸிலிருந்து மூன்றணா எடுத்து வைத்துக் கொள்ளும்.

சோமுவுக்கு நேற்றுதான் கல்யாணம் ஆயிற்று. எனினும், அவன் இன்றைக்கே தன் மனைவியை அழைத்துக்கொண்டு ஊர் சுற்றவும், சினிமா பார்க்கவும் கிளம்பி விட்டான். ஆனால் அவன் மனைவிக்கோ அசாத்திய வெட்கம். அவனுடன் பேசுவதுகூட அவளுக்குக் கஷ்டமாயிருந்தது.

சோமுவுக்குத் தன் மனைவியுடன் பிரயாணம் செய்வதில் எவ்வளவோ பெருமை யிருந்தாலும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் "ஒரு பாரீஸ்" என்று வழக்கம் போல் கூறினான். இதைக்கேட்டதும் அவனுடைய மனைவிக்குத் தூக்கி வாரிப் போட்டது. பேசா மடந்தையும் பேசி விட்டாள்:

"என்னங்க, ஒரு டிக்கெட் வாங்கறீங்க?" என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தன்னுடைய தவறு தெரிந்தது. இருந்தாலும், "பார்த்தாயா, கமலம்! உன்னைப் பற்றிய நினைச்சுக்கிட்டு வந்ததிலே, என்னை மறந்து போய்விட்டேன். உனக்கு மட்டும்தான் டிக்கெட் வாங்கினேன்" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டான்.

ராஜாஜி பேசுகிறார்!

ஹிந்தியை தேவநகரி லிபியில் எழுதுவதா, உருது லிபியில் எழுதுவதா என்ற விவாதம் வடக்கே மும்முரமாயிருந்தபோது கூறியது:

வட நாட்டில் ஹிந்திக்கும் உருதுக்கும் நடந்து வரும் சச்சரவு காரணமாகத் தென்னிந்தியாவில் எங்கள் நிலைமை சங்கடத்துக்குள்ளாகி யிருக்கிறது.



ஒரு பெண்: அப்பா அம்மாவுக்கு ரொம்ப செல்லப்பெண். அவளுக்குத் தடபுடலாகக் கல்யாணம் நடந்தது. புக்ககத்துக்கு வந்தபின் தான் தனக்கு இரண்டு மாமியார்கள் என்பது தெரிய வந்தது. அப்புறம் தான் அவளுக்குத் தன் கஷ்டங்களும் தெரிந்தது. பெரிய மாமியாருக்கு சிசுருஷை செய்தால் சின்ன மாமியார் கோபித்துக் கொள்ளுகிறாள். சின்னவள் சொன்னதைக் கேட்டால் பெரியவளுக்கு ஆத்திரம். இருவரையும் சந்தோஷப்படுத்துவது என்பது சிரமமாயிருந்தது. என்ன செய்வது என்று புரியாமல் பெண் அம்மாவுக்குக் கடிதம் எழுதினாள்:— "அம்மா, நான் இங்கே இரண்டு மாமியாரிடமும் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன். எது செய்தாலும் குற்றமாகப் போய் விடுகிறது. எனக்கு இந்தப் புக்ககத்தில் வாழ்ந்த வாழ்வு போதும் என்று தோன்றுகிறது. இந்தத் தொல்லையி லிருந்து என்னைக் காப்பாற்றேன்.'' கடைசியில் தாயார் பெண்ணைப் பிறந்தகத்துக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டாள்! ஹிந்தி கட்சிக்காரர்களும் உருது கட்சிக் காரர்களும் போட்டுக் கொள்ளும் சண்டைகள் தென்னிந்தியர்களாகிய எங்களை அந்தகைய கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறது. ஒரு மாமியாரா யிருந்தால் தான் குடித்தனம் செய்யலாம்.

ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள வேற்றுமையைப் பற்றிக் கூறியது:

நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்தாலொழிய, உலகத்தில் சந்தோஷம் இருக்காது. இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததும், 'இனிமேல் நாம் எல்லோரும் சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருக்கப் போகிறோம்' என்று நினைத்தோம். ஆனால் பழைய சண்டையும் சச்சரவும் புதிய ரூபத்தில் முளைத்திருக்கிறது.


எண்ணெய்க்கும் காஸ்டிக் சோடா உப்புக்கும் இடையே எவ்வளவோ வேற்றுமை இருக்கிறது. எண்ணெய் வழுவழுப்பாகவும் அசுத்தமாகவும் இருக்கிறது. காஸ்டிக் சோடா உப்பு உடம்பில் பட்டால் எரியும், உடம்பு புண்ணாகி விடும். ஆனால், இந்த இரண்டு பொருள்களையும் நாம் ஒன்றாகச் சேர்க்கும்போது நல்ல சோப்பு கிடைக்கிறது. ருஷ்ய காஸ்டிக் சோடா உப்பும் அமெரிக்க எண்ணெயும் என்றாவது ஒருநாள் ஒன்றாகக் கலந்து உலகத்துக்கு ஒரு சோப்பை வழங்குமென்று நாம் நம்புவோமாக.

காந்திஜியின் உபதேசங்களைக் கடைப்பிடிக்கும் முறையைப் பற்றிக் கூறியது:—

யாருக்காவது வியாதி வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். டாக்டர் கொடுத்த மருந்துச் சீட்டை (பிரிஸ்கிருப்ஷன்) அந்த நோயாளி மனப்பாடம் செய்து கொண்டே யிருந்தால் வியாதி தீர்ந்து விடாது; அந்த மருந்துச் சீட்டைப் போலப் பல பிரதிகளை அச்சடித்து அவற்றை விநியோகம் செய்தாலும் நோய் குணமாகி விடாது; அல்லது அந்த மருந்தை வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் வைத்து, அதைக் காலையிலும் மாலையிலும் பயபக்தியுடன் பூஜை செய்தாலும் நோய் தீர்ந்து விடாது. நோயாளிக்கு உடம்பு குணமாக வேண்டுமானால் அவர் மருந்தைச் சாப்பிட வேண்டும். காந்திஜியின் உபதேசங்களைப் பொறுத்த வரை நாம் இவ்விதமாகவே நடந்து கொள்ள வேண்டும். காந்திஜியின் உபதேசங்களை அச்சடித்துப் பயன் இல்லை. காரியத்தில் கடைப்பிடிக்க வேண்டும்.

காங்கிரஸ் மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதற்குக் கவர்னரின் விசேஷாதிகாரத்தை ரத்துசெய்ய வேண்டுமென்று கோரியது. அதைக் குறித்து ராஜாஜி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியது:

சர்க்கார் காங்கிரஸைப் பார்த்து, "வண்டி தயார்; குதிரைகள் பூட்டியிருக்கின்றன. நீங்கள் ஏறி உட்கார்ந்து, லகானைக் கையில் பிடித்து இஷ்டப்படி ஓட்டிச் செல்லுங்கள். எங்களுக்கு ஆட்சேபணை யில்லை'' என்று சொல்லுகிறது. ஆனால் குதிரைகளின் கால்களில் கயிறு கட்டி யிருப்பதும் அந்தக் கயிற்றின்



நுனி கவர்னர் கையிலிருப்பதும் காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாமல் இல்லை. இது எதற்காக? நாம் குதிரையை வேகமாகத் தட்டி ஓட்டிக் கொண்டு போகும் பொழுது ஒரு சாதாரணச் சொடுக்கில் அவர்கள் நம்மைத் தலை குப்புற விழும்படி செய்து விடலாம் அல்லவா? இம்மாதிரி நிலைமையில் நாம் அந்தக் குதிரை வண்டியில் எப்படிச் சவாரி செய்ய முடியும்?

கவர்னரின் விசேஷாதிகாரம் ரத்து செய்யப்படாமற் போகவே, ஸ்ரீ கே. வி. ரெட்டி தலைமையில் தற்காலிக மந்திரிசபை ஒன்று அமைக்கப்பட்டது. அந்தப் பினாமி மந்திரி சபையைக் குறித்துச் சொன்னது:

எல்லாரும் எம். எல். ஏ.க்கள் தான். ஆனால் காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் வாயில் கடிவாளம் பூட்டப்பட்ட குதிரைகளுக்குச் சமானமானவர்கள். கடிவாளக் கயிறு ஓட்டுவதில் கெட்டிக்காரன் கையில் இருக்கிறது. இந்தக் குதிரைகள் சாலையில் போகும் பொழுது சேர்ந்து போக வேண்டும். சுவடு தப்பிப் போகக் கூடாது. கொஞ்சம் தவறினாலும் மேலே இருந்து ஹைகமாண்டு சவுக்கடி கொடுக்கும். ஆனால் மற்ற எம். எல். ஏ.க்கள் அப்படியல்ல. அவர்கள் லகான் இல்லாத குதிரைகள். அவர்கள் வழி தனி. தவறு ஏற்பட்டால் சவுக்கடி கொடுப்பவரோ கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நேரான பாதையில் ஓட்டுபவரோ யாரும் கிடையாது. அப்படியிருக்கும் பொழுது இவை இழுக்கும் வண்டியின் நிலைமை என்ன ஆகும் என்று சொல்லவும் வேண்டுமா?

மேல் சட்டசபையில் ரைட் ஆனரபிள் சாஸ்திரியார் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்தும், எதிர்க்காமலும் செய்த பிரசங்கத்துக்குப் பதில் அளிக்கையில் கூறியது:

ரைட் ஆனரபிள் சாஸ்திரியின் பிரசங்கம் பாரிஸ் லேடியின் குடையைப் போன்றிருக்கிறது. அது குடை தான்; அழகாகவும் இருக்கிறது. ஆனால் அது வெய்யிலிலோ, மழையிலோ, உதவுவதில்லை. அதுபோல் சாஸ்திரியாரின் பிரசங்கம் அழகாயிருக்கிறதே தவிர அது காரியத்துக்குப் பயன்படாது.



கோயமுத்தூர் ஜில்லாவில் நடந்த இடைக்காலத் தேர்தலின் பொழுது தனிப்பட்ட முறையில் ஸ்ரீ பி. வரதராஜுலு நாயுடுவும் காங்கிரஸ் சார்பில் ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியாரும் போட்டியிட்டனர். அப்பொழுது காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்துப் பேசியது:

ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவும் காங்கிரஸ்காரர் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இருவருமே கெட்டிக்காரர்கள்; தேசபக்தர்கள். ஆனால் நாயுடுவின் மீது காங்கிரஸ் முத்திரையில்லை. நீங்கள் எத்தனையோ பேர் வியாபாரிகள் இங்கிருக்கிறீர்கள். முத்திரைக்குத் தான் அதிக மதிப்பு என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. வெள்ளிக்கோ, செம்புக்கோ ஒரு விதமான மதிப்பும் கிடையாது. முத்திரையில்லாத தேய்ந்த காசை காட்டுப்புறத்துச் சின்னஞ்சிறு பையன் கூட வாங்கச் சம்மதிக்க மாட்டான். ஸ்ரீ அவிநாசிலிங்கமும், ஸ்ரீ நாயுடுவும் வெள்ளியாக இருக்கலாம். ஆனால் முத்திரை அவினாசிலிங்கம் மீது தான் இருக்கிறது. நாயுடு அவர்கள் தேய்ந்த நாணயத்தைப் போன்றவர். அதைக் கொண்டு கொடுக்கல் வாங்கல் நடக்காதல்லவா!

மதுவிலக்கினால் விழும் துண்டுத் தொகையைச் சரிக்கட்டுவதற்காக ராஜாஜி பிரதமராயிருந்த காலத்தில் விற்பனை வரி என்னும் புதிய வரியை விதித்தார். விற்பனை வரிக்கு ஏற்பட்ட எதிர்ப்பைக் குறித்துக் கூறியது:

நமக்குக் குடிப்பதற்கு ஒரு டம்ளர் தண்ணீர் போதும். ஆனால் கிணற்றிலிருந்து எடுக்கும் பொழுது நாம் அளவாக ஒரு டம்ளர் மட்டும் எடுத்துக் கொள்வதில்லை. ஒரு வாளியைப் போட்டு மொண்டு நாம் கொஞ்சம் அதிகமாகவே தான் எடுக்கிறோம். ஏனென்றால் அது உயர வருவதற்குள் இடிபட்டுக் குறையவோ தளும்பவோ செய்யலாம் அல்லவா? வரி வருவாய் சம்பந்தமான இந்த பட்ஜெட்டும் அதே மாதிரியானது தான்.

சர்க்கார் ஒரு எருமை. அது மக்களாகிய குடியானவர்களுக்குப் பால் தருகிறது. அது தனக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளுவதில்லை. தான் தின்னும் தீனியை நமக்குத் திருப்பிப் பாலாகவே தந்துவிடுகிறது. குடியானவன் எருமைக்குத் தீனி போடாமல் பாலை மட்டும் கறந்து சாப்பிட வேண்டும் என்று நினைத்தால், அவனை முட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். பட்டினி கிடக்கும் எருமை பால் தருமா? சர்க்காரிடம் நன்மையை எதிர்பார்த்தால் அதற்கும் நல்ல தீனி போட வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு உயர்ந்த நோக்கங்



களையும் கொள்கைகளையும் உடையதாக இருந்தால்கூட, சர்க்காரால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது.

பொதுக் கூட்டம் ஒன்றில் கதர் இயக்கத்தை ஆதரித்துப் பேசியது:

உங்கள் வீட்டுக்கெதிரே நிழல் தரும் மரம் ஒன்று இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதன் நிழலில் இளைப்பாறலாம்; உட்காரலாம்; கடும் பகலைக் கழிக்கலாம். சிற்சில சமயம் பறவைகள் மரத்தின்மீது உட்கார்ந்து தரையை அசிங்கம் செய்து விடுவதும் உண்டு. அந்த மரத்துக்குப் பதிலாக நீங்கள் ஒரு வராந்தா அமைத்துக் கொண்டு விட்டால் நல்லதுதான். ஆனால் உங்களிடம் வராந்தா அமைப்பதற்குப் பணம் வேண்டாமா? உங்களிடம் யாராவது வந்து, 'கையில் காசு உள்ளபொழுது வராந்தா அமைத்துக் கொள்ளலாம். இப்பொழுது முதல் காரியமாக இந்த மரத்தை வெட்டி விடு' என்று ஆலோசனை கூறினால் நீங்கள் அவனைக் கெட்டிக்காரன் என்று எண்ண மாட்டீர்கள். அவனுடைய ஆலோசனையைக் கேட்கவும் மாட்டீர்கள்.



கதரின் நிலைமை அதே போன்றுதான் இருக்கிறது. கதர் ஏழை இந்தியாவுக்கு வாசலில் குளிர்ச்சி தரும் மரத்தைப் போன்றது. நாம் அதை இப்பொழுதே எப்படி வெட்ட முடியும்?

மாணவர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளலாமா, கூடாதா என்ற பிரச்னையைப் பற்றிக் கூறிய அபிப்பிராயம்:

குடியானவன் அடுத்த வருஷம் பயிரிடும் பொருட்டு, விதை சேமித்து வைக்கிறான். பயங்கரப் பஞ்சம் தலைவிரித்தாடும் காலத்தில் கூட, விதைக்காக வைத்திருக்கும் தானியத்தைச் சாப்பாட்டுக்காக உபயோகப்படுத்திக் கொள்ள விரும்ப மாட்டான். நம் மாணவர்கள் வருங்காலச் சமூகத்துக்கு விதை போன்றவர்கள். சுதந்தரப் போரிலோ, நாட்டில் நடக்கும் கிளர்ச்சிகளிலோ அவர்களை ஈடுபடச் செய்வது தவறான காரியம். இந்தியாவின் வருங்கால மேன்மையை உத்தேசித்து அவர்கள் நன்கு படித்து அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும். பிற்காலத்தைச் சமாளிக்கத் தயாராக வேண்டும்.

ராஜாஜி சென்னைப் பிரதமராயிருந்த காலத்தில் மதுரையில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடந்தது. அதைப் பற்றிச் சட்டத் தகராறு ஏற்படாமல் இருப்பதற்காக ஆர்டினன்ஸ் (அவசரச் சட்டம்) பிறப்பித்தபோது கூறியது:

சர்க்கார் 'ஆர்டினென்ஸ்'கள் போடுவது சாதாரணமாக நல்லதில்லைதான். ஆனால் சட்டசபை கூடுவதற்கு இன்னும் அதிக நாள் இருக்கிறது. ஆகவே ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்குப் பொறுப்பானவர்களைக் காப்பாற்றுவதற்கு ஆர்டினென்ஸ் போட வேண்டியது அத்தியாவசியமாகி விட்டது.



ஞாயிற்றுக்கிழமை யன்று பாங்கிகளுக்கெல்லாம் விடுமுறை நாள். கெட்டிக்கார மனிதன் என்ன செய்கிறான்? பணம் தேவையாயிருந்தால் அடுத்த வீட்டுக்காரனிடம் கடன் வாங்கிக் காரியத்தைக் கவனித்துக் கொள்ளுகிறான். மறுநாள் திங்கட்கிழமை பாங்கி திறந்ததும் பணத்தை எடுத்து வாங்கினவனுக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறான். அது மாதிரிதான் ஆலயப் பிரவேச சம்பந்தமான இந்த ஆர்டினென்ஸும்.

மகாகவி பாரதியார் தம் வாழ்நாளில் பட்ட கஷ்டங்களைப் பற்றிச் சிலர் அடிக்கடி பேசுகிறார்கள் அல்லவா? அதைக் குறித்துச் சொன்னது:

அடர்த்தியான ஆலமரம், மக்களுக்குக் குளுமையையும் நிழலையும் தருகிறது. ஆனால், தானோ வெய்யிலில் காய்கிறது. இந்த ஆலமரத்தின் சுபாவந்தான் மகான்களின் சுபாவமும். பிறர் சுகப்படுவதற்காக அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆல மரம் வெய்யிலில் நிற்கிறதே என்று நாம் புலம்புவதினால் என்ன பயன்?

சர்க்காரை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருக்கக் கூடாது என்பதைப் பற்றி ராஜாஜி சென்ற வருஷம் வங்க மக்களிடையே பேசும் போது கூறியது:—

உங்களுக்குத் தொண்டாற்றும் மந்திரிகளுக்கு நீங்கள் போதிய சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நீங்கள் உலையில் அரிசியைப் போட்டுவிட்டு, அடிக்கடி விறகை மாற்றிக்கொண்டேயிருந்தால், அரிசி வேகாது. விறகு தீப்பற்றி நன்றாக எரிவதற்கு நீங்கள் அவகாசம் அளிக்க வேண்டும். ஆனால், நீங்கள் பொறுமை இழந்து, "இந்த விறகு சுகம் இல்லை; இதை எடுத்தெறியப் போகிறேன்" என்று சொன்னால், நீங்கள் போட்ட அரிசி வேகாது. ஆகையால் நீங்கள் ஒரு சர்க்காரைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் அந்த சர்க்காருக்குப் போதிய அவகாசம் அளிக்க வேண்டும்.

ஜன்னல்கள்

சுபமூ

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'மென்றால், ஜன்னல் இல்லாத வீட்டிலும் வசிக்க வேண்டாம் தான்! உப்பில்லாத பண்டம்போல, நீறில்லா நெற்றி போல, ஜன்னலற்ற வீடும் பாழ்தான்.

சரித்திரப் பெருமை வாய்ந்த புராதனக் கட்டிடங்களையோ, அரண்மனைகளையோ நாம் பார்க்கும்போது அவற்றின் வேலைப்பாடமைந்த பிரம்மாண்டமான சாளரங்களைக் கண்டு திகைத்து நிற்கிறோம். உயர்ந்தோங்கிய உப்பரிகைகளில் கதவுகளுக்கு இணையாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்தச் சாளரங்களின் வழியாகத்தான் அந்தக் காலத்துப் பெண்கள் அம்பாரியின் மீது பவனிவரும் அரசகுமாரனையோ, குதிரையின் மீது விரைந்து செல்லும் அழகிய யுவனையோ கண்டு, களித்து, காதல் கொண்டார்களாம்! வானோங்கி வளர்ந்த பழங்கால அரண்மனைக் கட்டிடங்களில் சாளரங்கள் மட்டும் இல்லாமலிருந்தால் விக்கிரமாதித்தன் கதையும், சுவாரஸ்யமான பிற ராஜா-ராணிக் கதைகளும் தமிழிலே இடம் பெற்றிருக்க நியாயமில்லை.

* * *

இங்ஙனம், தொன்மை மிகுந்த காலம் முதல் கட்டிடக் கலையில் முக்கியத்துவம் வகித்துவரும் ஜன்னல்கள் இக்காலத்திலும் பிராதான்ய மடைந்துவருவது ஆச்சரிய மில்லை. விஸ்தாரமான அறையானாலும் காற்றும் வெளிச்சமும் விரவியிருக்க வேண்டுமானால் எதிர் எதிராக அகலமான இரு ஜன்னல்கள் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

இவ்விதம் வீட்டின் பெருமையை உயர்த்தி வைக்கும் ஜன்னல்கள் நமது தினசரி வாழ்க்கையில் எத்தனையோ விதங்களில் பயன்படுகின்றன. வாயிற் கதவுகளைத் திறக்காமலேயே வந்தவர்களைப் பற்றி அறிய வேண்டுமானால், நம் வீட்டு மாதரசிகள் ஜன்னல்களைத்தான் முக்கியமாக உபயோகித்துக் கொள்கின்றனர்.

எப்போதோ கண்பனிடமிருந்து வாங்கிய காவல் ஒன்றை, இடமொன்று தோன்றிய கல்லெண்ணத்தின் காரணமாகத் திருப்பிக் கொடுக்க எண்ணுகிறோம். அவனுடைய அறைக்குப்போனால், இழுத்துச் சாத்தப்பட்டுள்ள கதவைக் கண்டு சற்றே திகைத்து நிற்கும் வேளையில், சமய சஞ்சீவி போல் அபயமளிக்கிறது, ஒருக்களிக்கப்பட்ட அறையின் ஜன்னற் கதவுகள். பளிச்சென்று உதயமாகும் யோசனையின் விளைவாக, கொண்டுவந்த புத்தகத்தை ஜன்னல் வழியாக உள்ளே எறிந்து விட்டுத் திருப்தி அடைந்த உள்ளத்துடன் திரும்பி விடுகிறோம்.


நீங்கள் மட்டுமல்ல; வியர்க்க விருவிருக்கக் கடிதங்களைப் 'பட்டுவாடா' செய்யும் தபாற்காரர்கள் கையாளும் முறையும் இதுதான். பூட்டியுள்ள வீடுகளுக்குரிய கடிதங்களையோ, கனத்த 'பாக்கட்டு'களையோ உள்ளே எறிந்து விட இந்த ஜன்னல்கள் அவர்களுக்கு ரொம்பவும் உதவியாக இருக்கின்றன.

தெருவின் ஓரமாக அவசர அவசரமாகப் போய்க்கொண்டிருக்கும் போது நம் தலைமீது 'பொல பொல' வென்று உதிரும் குப்பையைக் கண்டு பொங்கியெழும் சினத்தோடு மேலே பார்க்கிறோம். நாம் நின்று கொண்டிருக்கும் கட்டிடத்தின் முதல் மாடியிலுள்ள ஜன்னல் வழியாக இரண்டு வளைக் கரங்கள் லாகவமாக உள்ளே சென்று மறைவதைக் கண்டவுடன் நம் கோபமும் மறைந்து விடுகிறது.

* * *

இம்மாதிரி காற்றையும் வெளிச்சத்தையும் உள்ளே விடவும், குப்பை கூளத்தை வெளியே (யார் தலைமீதாவது அல்ல!) எறியவும் பெரிதும் பயன்படுகின்ற ஜன்னல்கள், காதலர்கள் வாழ்வில் புரிந்திடும் சேவைகள் கணக்கிலடங்காது. காதல் வளர்ந்திடக் கடிதங்கள் அவசியமானால், முதலில் காதல் வித்திட ஜன்னல்கள் அதி முக்கியமாகிறது.

அறையின் வசதியான பிறமூலைகளை விட்டுவிட்டு ஜன்னலுக்கு அருகாமையில் தனது மேஜையைப் போட்டுக் கொள்கிறான், படிக்கும் காலேஜ் மாணவன். எதிர்த்த வீட்டுத் திறந்த ஜன்னலில் ஒரு பெண்ணின் நிழலோ, அவளுடைய பின்னல் சடையோ தட்டுப்படும் போதெல்லாம் புத்தகத்தில் பதியாத அவன் கண்கள் அத்திசையையே நோக்கிச் செல்கின்றன. வளைக்கரங்



கணைச் சப்தித்துக் கொண்டு ஒயில் நடை போட்டு வரும் குறும்புக்கார அந்தப் பெண் ஜன்னலின் அருகே வந்தவுடன் அவன் புத்தகத்தை மூடிவிட்டுப் புது உற்சாகமடைவதில் ஆச்சரியமென்ன?

இப்படி உதவிகள் செய்யும் இந்த ஜன்னல்களால் உபத்திரவங்களும் இல்லாமல் இல்லை. யுத்த காலத்தில் அவைகள் விளைவித்த இன்னல்கள் பல. சாவித் துவாரத்தின் வழியாக வரும் காற்றைப்போல, அடைக்கப் பட்டிருக்கும் ஜன்னல் கதவுகளுக்கும் அப்பால் நுழைந்து வெளியேவரும் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு ஏ.ஆர்.பி. காரர் போட்ட கூச்சல் இவ்வளவு அவ்வளவு அல்ல!

வீட்டு ஜன்னல்களுக்கு அடுத்தபடியாக நம் வாழ்வில் குறுக்கிடுவது ரயில் வண்டியிலுள்ள ஜன்னல்கள்.

இந்த ரயில் வண்டியின் ஜன்னலைப் பற்றி ஒரு ரஸமான கதையுண்டு.

ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இரு ஸ்திரீ பிரயாணிகளிடை பிரமாதமாகச் சண்டை மூண்டது. கடைசியில் இருவரும், ஒரு போர்ட்டரை மத்தியஸ்தம் செய்துவிடக் கூப்பிட்டார்கள்.

"இந்த அம்மா ஜன்னலைத் திறந்து வைத்து விடுகிறாள். குளிர் காற்று வீசி, ஜலதோஷம் பிடித்து நான் செத்துப் போய் விடுவேன் போலிருக்கிறது" என்றாள் ஒருத்தி.

மற்றொருத்தி "ஜன்னல் கதவுகளை மூடி விட்டால், காற்று வராமல் புழுக்கத்தினால் நான் செத்துப் போய் விடுவேன் போலிருக்கிறது" என்றாள்.

போர்ட்டர் என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தான்.

உடனே, அந்தப் பெட்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒருவர் "என்ன போர்ட்டர் யோசிக்கிறாய்? முதலில் ஜன்னல் கதவைத் திறந்து வைக்கச் சொல். ஒரு அம்மா ஜலதோஷம் பிடித்துச் செத்துப் போவாள்; பின்னர், மூடிவிடு இன்னொரு அம்மா புழுங்கிச் செத்துப் போவாள். வண்டியிலும் அமைதி நிலவும்" என்றாராம்.

வயதான பெரியவர்கள் முதல் சிறு பையன்கள் வரை ரயிலில் உட்காரும் போது ஜன்னலுக்குப் பக்கத்திலுள்ள இடத்துக்குப் போட்டி போடுவதைக் கண் கூடாகக் காண்கிறோம். ரயில் போகும் திசையை நோக்கி உட்கார்ந்து கொண்டு ஜன்னல்களுக்கு வெளியே தலையை நீட்டி இஞ்ஜின் கரித் துணுக்குகளைக் கண்களில் தேக்கி, ஆனந்தக் கண்ணீர் வடிப்பதில் ஏனோ இந்த மனித ஜன்மத்துக்கு இவ்வளவு ஆர்வம்!



கடிதமும் காவலரும்





பகீரதன்

"என்ன, வெங்கடேசவரலுகாரு! பாக்கி ரொம்ப நாளாகத் தங்கிப் போய் விட்டதே. வட்டியையாவது கொடுக்கக் கூடாதா?" என்று வினயமாகக் கேட்டார் சேட் சொக்கலால்.

"ஆகட்டும். எல்லாவற்றையுமே கொடுத்து விடுகிறேன். பொழுது விடிந்து பொழுதுபோனால் இந்த ஊரில் குடியிருக்கவே பயமாயிருக்கிறது. நீர் என்னமோ வட்டி வட்டி என்று அடித்துக்கொள்கிறீர்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் லாகோடி வெங்கடேசவரலுகாரு.

லாகோடி ஆந்திர நாட்டின் எல்லையோரத்தில் உள்ள ஒரு கிராமம். அந்தக் கிராமத்துக்கு ஹைதராபாத் ரஸாக்கர்களால் எப்போது ஆபத்து நேருமோ என்ற பயம் இருந்து வந்தது. ஆனால் முப்பது வருஷங்களுக்கு முன் லாகோடி ஒரு அமைதியான கிராமமாக இருந்தது. அந்தச் சமயத்தில்தான் சேட் சொக்கலால் லாகோடியில் வந்து குடியேறினார்.

சொக்கலால் லாகோடிக்கு வரும்பொழுது அவருக்கிருந்த ஆஸ்தி எல்லாம் அவருடைய மனைவியும் ஐம்பது ரூபாய் வெள்ளிக் காசும்தான். இன்றோ லாகோடியில் சொக்கலாலைத் தெரியாதவர்களே இல்லை. பல லக்ஷ ரூபாய்களுக்குச் சொக்கலால் அதிபதியாகி விட்டார். பைசாவுக்குப் பைசா வட்டி வாங்கிச் சேர்த்த பணம்தான் அவ்வளவும்.

• • •

"ஸார், தபால்!" என்ற சத்தம் கேட்டு வெங்கடேசவரலுகாரு வெளியே வந்தார். தபால்காரன் ஒரு ரிஜிஸ்தர் தபாலைக் கொடுத்துக் கை எழுத்து வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

சேட் சொக்கலாலின் வக்கீலிடமிருந்து நோட்டீஸ் வந்திருந்தது.

"சொக்கலாலுக்குச் சேர வேண்டிய ரூபாய் பத்தாயிரத்தையும் வட்டியையும் இந்த நோட்டீஸ் கண்ட ஒரு வாரத்துக்குள் கொடுக்க வேண்டும். கொடுக்கத் தவறினால்......" என்றிருந்தது.

இதுபோன்ற எத்தனையோ நோட்டீஸ்களையும் சம்மன்களையும் வாங்கிக் கிழித்து எறியும் வெங்கடேசவரலுவுக்கு இந்த நோட்டீஸைக் கிழித்து எறிய எத்தனை நாழியாகப் போகிறது?

வாரமும் மாதமும் முடிந்துவிட்டன. வெங்கடேசவரலுவிடமிருந்து எந்த விதமான பதிலையும் காணாத சொக்கலாலுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைப்பதும் பிறகு தோளில் போடுவதுமாக வாசல் பக்கத்துக்கும் கூடத்துக்கும் உலாவிக் கொண்டிருந்தார். கோபத்தால் சொக்கலாலின் இரண்டு கண்களும் கோவைப் பழம் போலச் செக்கச் செவேலென்றிருந்தன.

அத்தனை நாளும் சொக்கலாலின் வீட்டை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் சென்று கொண்டிருந்த தபால்காரன் அன்று சொக்கலாலுக்கு ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனான். "வெங்கடேசவரலு மட்டும் எனக்குச் சரியான பதில் எழுதாமல் இருக்கட்டும்; நாளைக்கே அவனைக் கோர்ட்டுக்கு இழுத்துச் சந்தி சிரிக்க அடிக்கிறேன் பார்" என்று சொல்லிக் கொண்டே கையில் வைத்திருந்த தபாலை 'த-ர்-ர்-ர்' என்று கிழித்தார். கடிதத்தைப் படித்தார். சொக்கலாலுக்கு உலகமே சுழலுவது போலிருந்தது. அவர் கையிலிருந்த கடிதமும் அவரைச் சுற்றிச் சுழன்று கொண்டு வந்து கீழே விழுந்துவிட்டது.

திடமொன்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு கீழே விழுந்த கடிதத்தை எடுத்து மீண்டும் படிக்கலானார்:

"ஏழைகளின் பணத்தைப் பகல் கொள்ளை அடித்து வரும் தருமப் பிரபுவே!

வரும் திங்கட்கிழமை நடு இரவில் நாங்கள் உங்கள் வீட்டுக்கு வருகிறோம். உம்மிடம் விருந்துக்கு வரவில்லை. தீவட்டிக் கொள்ளைக் காரர்களாகிய நாங்கள், நீங்கள் பகல் கொள்ளையடித்துச் சேர்த்து வைத்திருக்கும் பொருள்களுக்கு வருகிறோம். எங்களுக்கு அதிக சிரமம் கொடுக்காமல் தங்களிடம் உள்ள ரொக்க ரூபாய்களையும் நகைகளையும் எடுத்துத் தயாராக வைத்திருக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் ஆயுததாரிகளாக வருவதால் நீர் போலீஸுக்குச் சொல்லி எங்களை ஒன்றும் செய்ய முடியாது. கபர்தார்!

இப்படிக்கு,

ரஸாக்கர்கள்."

இந்தக் கடிதத்தை மட்டும் சொக்கலால் சேட் நூறு தடவையாவது படித்திருப்பார். அவருடைய மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. "இந்தமாதிரித் தமக்குக் கடிதம் வந்திருப்பது இந்த லாகோடிக்காரர்களுக்குத் தெரிந்தால் அவர்களே நம் வீட்டைக் கொள்ளையடித்து விடுவார்கள்" என்று நினைத்துத் தம் மனைவியிடம் மட்டும் கடிதம் வந்த விஷயத்தை ரகசியமாகச் சொல்லி வைத்தார்.

ஒரே ஒரு பெண்ணிடம் ரகசியத்தைச் சொல்லுவதும் ஊர் பூராவும் தம்பட்டம் அடித்துப் பறைசாற்றுவதும் ஒன்றுதான் என்பது தெரியாமற்போன சொக்கலாலின் நிலை கண்டு இரங்க வேண்டியதாயிற்று. லாகோடி கிராமம் பூராவும் சொக்கலாலுக்கு ரஸாக்கர்களிடமிருந்து பயமுறுத்திக் கடிதம் வந்த செய்தி ஒரு நொடியில் பரவிவிட்டது.

"இந்தப் பாவி சேட்டுக்கு வேணும். எத்தனை பேரிடம் வயிறு எரிய வட்டிக்காக வாங்கியிருப்பான்" என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டே சேட்டிடம் வந்து "நீங்கள் பயப்பட வேண்டாம். ஆயிரம் ரஸாக்கர்கள் வந்தாலும் நாங்கள் இருக்கிறோம்" என்று தைரியம் சொல்லுவது போலக் கேலி செய்து விட்டுப் போனார்கள்.

சொக்கலாலின் மனம் தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தது. அவர் ஒரு பதிலும் சொல்லாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

அது ஒரு 'மொட்டைக் கடிதம்.' ஹைதராபாத் எல்லையோரத்தில் உள்ள ரஸாக்கர்களின் அட்டூழியத்தை வைத்துக்கொண்டு வெங்கடே கவராவு தானே சொக்கலாலுக்கு எழுதிய கடிதம் என்று யாருக்குத் தெரியப் போகிறது?

நேற்று வரையில் சொக்கலாலைக் கேலியும் கிண்டலும் செய்து கொண்டிருந்த லாகோடிக்காரர்கள் இன்றைய தினம் ஒரு பொதுக்கூட்டம் போட்டிருக்கிறார்கள். பொதுக் கூட்டத்துக்கு எல்லா ஜனங்களுடன் சொக்கலால் சேட்டும் வந்திருந்தார்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் காரசாரமாகப் பேசினார்: "இன்றைய தினம் சொக்கலால் வீட்டைக் கொள்ளையடிக்கக் கடிதம் எழுதிய ரஸாக்கர்கள் நாளையதினம் நம் வீட்டிலும் கொள்ளையடிக்க முயலுவார்கள். இது போன்ற சமயங்களில் சர்க்காரை நம்பியிருப்பதைவிட நம் கையேதான் நமக்கு உதவி. ஆகையால் வீட்டுக்கு ஒருவராக நாளைய தினமே புறப்பட்டு நம் ஊரை நாம்தான் காவல் செய்யவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

கூட்டத்தில் இருந்த எல்லாரும் "அப்படியே செய்கிறோம்! அப்படியே செய்கிறோம்!" என்று கோஷம் செய்தனர்.

சொக்கலாலுக்கு மனதிற்குள் சந்தோஷமாக இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சோகமாக இருப்பது போலவே நடித்தார்.

கூட்டத்தில் செய்த தீர்மானத்தின்படி சென்ற ஆறு மாத காலமாக லாகோடி கிராமத்தைச் சுற்றி இரவு பகல் எந்த நேரத்திலும் கையில் கிடைத்த ஆயுதங்களுடன் சுமார் இருநூறு பேர் 'ரோந்து' சுற்றிக் கொண்டிருக்கின்றனர். லாகோடி கிராமத்து ஜனங்கள் ரஸாக்கர்களின் தொல்லையின்றி நிம்மதியாக இருக்கிறார்கள். எல்லாரையும் விட சொக்கலால் எந்தவிதக் கவலையுமில்லாமல் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

"இன்று முதல் ஒரு வருஷ காலத்திற்குள் லாகோடியில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் கொள்ளையடிக்கப்போகிறோம். எப்பொழுது வருவோம்; எப்படி வருவோம் என்று சொல்ல முடியாது. ஆனால் கட்டாயம் வருவோம். வீணாக உங்கள் மனைவி மக்களை விட்டு யமலோகம் போக ஆசைப்படாமல் உங்களிடம் இருக்கும் பொருள்களை எல்லாம் நாங்கள் வரும்பொழுது கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும்.

இப்படிக்கு,

ரஸாக்கர்கள்."

என்று லாகோடியில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சொக்கலால்தான் கடிதம் எழுதி அனுப்பியிருந்தார் என்பதைத் தயவு செய்து யாரும் லாகோடிக் கிராமத்து ஜனங்களிடம் மட்டும் சொல்லிவிடாதீர்கள்!



உலகப் பிரசித்தி பெற்ற ஜாம்பக் உபயோகிப்பதனால்

தசை வலியும், நோவும்

மாயமாய் மறைகின்றன.

இலேசாக ஜாம்பக் தேய்த்தவுடனேயே ஆச்வாசம் ஏற்படுகிறது. அதி ஆச்சர்யகரமான இந்த மூலிகைக் களிம்பிலுள்ள உயர்ந்த மருந்துத் தைலங்கள் சருமத்தின் ஊடே சென்று வாடி வதங்கி வலியுறும் தசைகளுக்கு குண மாகும்படி ஹிதமளிக்கிறது. எத்தகைய தசைப் பிடிப்பு, தசை வலி, மூட்டுப் பிடிப்பு, பாதங்களில் வெக்காடு, வலி ஆகிய உபாதைகளுக்கும் ஜாம்பக் ஒரு சிறந்த ஔஷதம். மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பதற்கு உத்தரவாதம்.



எப்போதும் உபயோகியுங்கள்

Zam-Buk


ஆறுதலளித்து குணமளிக்கும் கிருமிநாசனக் களிம்பு

கல்யாணமா?

2000 புதுப்புது டிசைன்களில் — பட்டுச் சேலைகள்
3000 புதுப்புது டிசைன்களில் — நூல் சேலைகள்
ஆயிரக் கணக்கான டிசைன்களில் நூல் வேஷ்டிகள், அங்க வஸ்திரங்கள், மில் வாயில்கள், வேஷ்டிகள், ஷர்ட்டிங், கோட்டிங், இன்னும் பல

விலைகள் மேலும்
குறைக்கப் பட்டிருக்கின்றன.





நாளுக்கு நாள் உங்கள் சருமம் அதிக அழகைப் பெறும்



கேடில் கலந்த சோப் ரெக்ஸோனா ஒன்றே. அது உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும், மாசற்ற சோபையும், புது அழகும் தரும்.

இன்றே ரெக்ஸோனா சோப் உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதன் நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்துக்கழுவுங்கள். கேடில், சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்கி ஆரோக்கியமூட்டும் சக்தி வாய்ந்த தைலங்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கலப்பு மருந்து. அது உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும், அப்பழுக்கற்றதாகவும், திடமாகவும் செய்ய உதவும். அன்றியும் உங்கள் சருமம் நீடித்து நிற்கும் புது அழகைப்பெறும்.

கேடில் சேர்ந்த
ரெக்ஸோனா தான்
இதைச் செய்கிறது!

ரெக்ஸோனா சோப்

RP. 42-172 TM

① குழந்தை அழுகிறது 

(ஒரு காரணமுமின்றி)

② அதற்கு

கிரைப் ஸிரப் 

கொடுங்கள் (அருசி யில்லாதது)


③ குழந்தை சிரிக்கிறது 

ஒரு I·T·L தயாரிப்பு

தயாரிப்பவர்கள்:
மைசூர் இன்டஸ்ட்ரியல் & டெஸ்டிங்
லாபரடேரி லிட்., மல்லேஸ்வரம்,
பெங்களூர்

விற்பனை ஏஜன்டுகள்:

மெஸ்ஸர்ஸ். பென்ட் அன்டு கம்பெனி, லிமிடெட், த. பெ. தே. 63, மதராஸ்



மறுபடியும் உல்லாஸமான உத்ஸாகத்தை அடையுங்கள்

ப்ரூக்லாக்ஸ் உங்கள் சரீர பத்ததியில் ஐக்யமாகி கழிவுப் பொருள்களை அகற்றுகிறது. வயிற்றில் கிளர்ச்சி ஏற்படுத்தாமல், ருசிகரமான சாக்லெட்டைப் போன்ற இந்த விரேசனம் ஹிம்ஸைக்கு மூலமான இடத்தைத் தாக்கி சுகத்தை உண்டாக்குகிறது

ப்ரூக்லாக்ஸ்

சாக்லெட்
லாக்ஸெடிவ்

பெரிய சைஸ் டின் ஒன்றுக்கு 1-12-0 சிறிய சைஸ் டின் ஒன்றுக்கு 0-12-0

எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜென்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

எவ்வித சரும நோய்க்கும்

CIBOL

சைபால்

எந்த சரும நோயையும், சீக்கிரமாக குணப்படுத்த வல்லது "சைபால்". கொப்புளங்கள், சொறி, சிரங்கு, படை, பரு, கடி, கால் வெடிப்பு, புண்களுக்கு ஆச்சரியமாக குணமளிக்கும் ஔஷதம்.



தயாரிப்பாளர்கள்:

ஸௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் (ஏலூருவில்) பெஜவாடா; ஸ்ரீ விஜய மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி; மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், மதராஸ்.

எபிட்ரெக்ஸ்

கீழ்க்கண்ட உபாதைகளுக்கு
கைகண்ட மருந்து

- கக்குவான்
- ஆஸ்துமா
- மார்ச்சளிநோய்
- நெஞ்சுக்கோளாறுகள்



ஆசுவாசப்படுத்துவது. சுவையுள்ளது
சாந்தப்படுத்துவது.

AL 690 TM

இது ஒரு அலெம்பிக் தயாரிப்பு


கல்கி



KALKI ஆகஸ்டு 29, 1948

4 அணா

(ESTD: 1907)



கிளை ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, ஸைதாப்பேட்டை
மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், பெரம்பூர்

சென்னை மாகாணத்திலுள்ள முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உண்டு.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	72 00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	53,70,100
ரிசர்வ் நிதி	ரூ.	62,00,000


எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

என். கோபால அய்யர், செக்ரடரி.

தி இந்தியன் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்.
நார்த் பீச் ரோடு .. மதராஸ்

புதிய 10 B. H. P. "பௌவர்" வெர்டிகல் 1100 R. P. M. டீஸல் ஆயில் என்ஜின்களும், S. L. 3" கிர்லோஸ்கர் பம்புகளும், இங்கிலீஷ் 8 H. P. மோட்டாருடன் இணைக்கப்பட்டுள்ள 4"×3" பம்பு செட்டுகளும் தற்சமயம் கைவசமுள்ளன.



விவரங்களுக்கு:

ஸாய்ஸன் அன் கோ.

என்ஜின், எலக்ட்ரிக் மோட்டார், பம்புஸெட் வியாபாரிகள்

8/22, பிராட்வே :: மதராஸ்

நீங்கள்
கவனிக்க வேண்டியது!



குணம் நிறைந்த
கோகுல் கூந்தல்
தைலம்

கூந்தலுக்கு சிறந்த மண
மும் மிகுந்த வனப்பும்
நிறைந்த வளர்ச்சியும் தரு
கிறது. ஆயிரக்கணக்கான
மக்கள் அதையே உப
யோகிப்பதன்
உண்மையும்
அதுவே.





டி. எஸ். ஆர். கோ
கும்பகோணம்

மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி :: மதராஸ்
கோவை, நீலகிரி, ஜில்லாக்கள்
க்கு பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாபி
(Estd. 1933)
P. B. No. 182, கோயமுத்தூர்

"லங்கர்" மார்க்
வாசனை பாக்குத் தூள்



★

அசல்
பாதாம் எண்ணை

★

ரோஜாப்பூ
தல்கந்து

★

ரஸிக்லால் & கோ.,
கோவிந்தப்ப நாயக்கன் தெரு
மதராஸ் - 1

REGD. NO. M. 4392



ஸா'ஓரிகன்

நவநாகரீக காரிமணிகளுக்கு

அரும்பெரும் சந்தர்ப்பங்களில் நீங்கள் உபயோகித்துக் கொள்ள வேண்டிய அரிய வாசனைத் திரவியம்......அதன் இணையற்ற பரிமளம் அதி சிலாக்கியமானது.


வாசனைத் திரவியம்

கோட்டி தயாரிப்பு

சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:

ஜியாப்ரே மானர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்

பம்பாய் — கல்கத்தா — மதராஸ் — லாகூர் — டில்லி



என்ஜினியரிங் ஒர்க்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், கல்கத்தா

தங்கள் ஆதரவாளர்களுக்கு நன்றி செலுத்திக் கொள்வதோடு, புதிய உற்பத்திகளையும் உத்ஸாகத்துடன் வெளியிடுகிறார்கள்

EWI LTD. SYMBOL OF QUALITY

போனிக்ஸ்

சீலிங், பெடஸ்டல், எக்ஸாஸ்ட் மின்சார விசிறிகள், பிக்ஸட் & ஆஸிலேடிங் டேபிள் விசிறிகள். I C D. P. ஸ்விட்சுகள் (10-15 ஆம்பியர்கள்) Half - Bakelite S. P. 5-ஆம்பியர் ஸ்விட்சுகள் போர்ஸிலின் சீலிங் ரோஸ் & கட் அவுட்கள்.

உங்கள் தேவைக்கு சிறந்தவை

நம் நாட்டில், நம் மூலதனத்தில், நம் உழைப்பினால் உற்பத்தியானவை


தேவைகளுக்கு மேற்கண்டவர்களுக்கு எழுதவும் :

RM. S. & Co., Ltd.

16, Broadway :: Madras

[போன் : 4060] [தந்தி : "AREMESCO"]

சென்னை நகரத்திலும், சமஸ்தானங்கள் உள்பட தென்னிந்தியா முழுவதிலும் உரிமை பெற்ற விநியோகஸ்தர்கள்.



உஷ்ணம், மழை அல்லது வெப்பம், மண் அல்லது எண்ணெய் இவற்றினால், ஏற்படும் கெடுதல்களிலிருந்து எந்த வஸ்துவையும் கண்ணாடி பாதுகாக்கும். நிர்மல் கண்ணாடிகள் உணவு பதார்த்தங்கள், மருந்து சாமான்கள் கெடாமல் பாதுகாக்கவும் என்ஜினியரிங் பாகங்களை சரியாக கண்டு பிடிக்கவும் மற்ற உபயோகங்களுக்கும் சிறந்தவை.

மெஸர்ஸ்.

நிர்மல் கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட்.

ஒலவக்காடு. தென் மலபார்